
உ

சுவாமி சரிதம்

என்னும்

# சிவயோக சுவாமிகள் திருச்சரிதம்



ஜன்

28664
29512
28664 CC.

உ

சுவாமி சரிதம்

என்னும்

# சிவயோக சுவாமிகள் திருச்சரிதம்

32531

29512

செந்தமிழ்ச் சிரோமணி, பண்டித வித்துவான்
க. கி. நடராஜன், B. O. L., Dip. Ed. அவர்கள்
இயற்றியது.

முதற் பதிப்பு.

ஆனந்த ஆண்டு, வைகாசித் திங்கள் 12 ஆம் நாள்
26-5-1974

பதிப்புரிமை.

29512

விலை ரூபா 7-75

அச்சுப் பதிப்பு:
ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

PUBLIC LIBRARY
யாழ்ப்பாணம்
JAFFNA.

உ
சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின்
மாணவ பரம்பரையினரும்
யாழ்/வண்ணை — நாவலர் வித்தியாசாலையின்
முன்னுள் தலைமையாசிரியராய் ஓய்வு பெற்றவரும்
தஞ்சைவாணன்கோவையுரை முதலிய பல நூல்களின்
பதிப்பாசிரியரும்
பண்டும் இன்றும் பண்டித பாலபண்டித வகுப்புக்களின்
போதகாசிரியருமாகிய

## பண்டிதமணி, வித்துவான், ந. சுப்பையபிள்ளை யவர்களின்

# சிறப்புப் பாயிரம்

### நிலைமண்டல ஆசிரியப்பா

சீர்கொண்ட பல்வளச் சிறப்பும் இயற்கையின்
ஏர்கொண்டு மன்னுவ திழமண் டலம்;அதன்
ஒளிர்முக மண்டல மொப்பது முத்தமிழ்
மிளிர்யாழ்ப் பாண வியன்மா வட்டம்;
ஆங்கொளிர் நயனமென் றறைதரும் யாழ்நகர்
ஓங்கொளிப் பிறைமுடிப் பிஞ்ஞக னுயர்குலம்
திருமா லாதியர் தேவ குலங்களும்
மருவியே யறமுதல் நாற்பயன் வாய்ப்ப
ஒழுகுறுஞ் சான்றோர் உறைபதி; கல்விக்
கழகம் பற்பல கவின்கொள உறுபதி;
இன்னன பல்வகைச் சிறப்பும் ஏய்நகர்
அன்னது வாழ்பதி யாகக் கொண்டவன்
செந்தமி ழாங்கிலச் சீர்பெறு புலமைகை
வந்த வரோதயன் நடராஜன் மற்றிவன்
கதிர்வேல் கிருட்டிண பிள்ளைதருங் காளை;
சதுர னிவனியல் சாற்றிடி லிவன்றான்
மாண்புறு குருகுல மரபின்மெய்ப் புலமை
பூண்டிடு வித்துவ மணியெனப் புகழ்பெறாஉம்
கணேச ஐயர்பாற் கலைபல பயின்றோன்;
புராணப் பிரசங்கப் போதகர் நவாலியூர்த்
தம்பையா உவாத்தியார் தன்மா துலரெனும்
நம்பி; கல்லூரிப் பண்டிதன்; நாவலோன்;
சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கிய
மின்னுறு வித்துவான் எனுஞ்சிறப் புற்றோன்;
அண்ணா மலைப்பல் கழகம் நண்ணி
கண்ணார் கிழைத் தேயக் கலைப்பால்

எண்ணா ரும்புகழ் 'பி. ஓ எல்.' எனும்
திண்ணென் பட்டமும் சேரக் கொண்டவன்;
உண்ணாட் டிலங்கை யுயர்பல் கலைச்சபை
எண்ணா மையிவற கிழிபா மென்பார்
உள்நா வடக்க உன்னினான் போல்முறைப்
பண்பாற் 'கல்விப் பகுதி டிப்ளோமா'
தன்தேம் புகழ்விரு துப்பேர் தாங்கியோன்;
மற்றும் அண்ணா மலைக்கலை "பி. ஓ. எல்."
பயில்வுறு காலையிற் பாரான் மன்றின்
வியன்நிதி மந்திரி விரகர்"ஸேர்" ஆர். கே;
சண்முகஞ் செட்டியார் தமிழா ராய்ச்சிக்
கட்டுரை நிதிப்பரி சடைவினிற் பெறவே
பெரிய புராணச் சிறப்புப் பிறங்கத்
தெரிக்கும்ஆ ராய்ச்சிக் கட்டுரை தீட்டிட
வல்லார் வருகதங் கட்டுரை தருகஎன்(று)
எல்லார்க் கும்அறி வுறுத்திய செய்தியிற்
பல்லா ருந்தரு கட்டுரைப் பண்புணர்
நல்லோர் குழூஉ நடராஜன் தீட்டுங்
கட்டுரைத் தரமே முதன்மைக் காட்சி
கிட்டிய தென்று கிளத்தவி னம்முதற்
பரிசும் பெற்ற பண்பினும் ஓங்கினோன்;
அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்
தருசெய லாளன் எனப்படு தகைமையன்;
முந்தைய சஞ்சிகை ஞாயிறு தன்றுணைச்
சந்த ஆசிரியனாய்க் கட்டுரை தந்தவன்;
செந்தமிழ்ச் செல்வியிற் கணேச ஐயராம்
வித்துவச் சிரேட்டரின் விரும்புறு சரிதம்
நத்துதல் உறுமா நவின்றோன்; விழாமலர்
பலவினுள் வெளியிடு கட்டுரை வகையொடு
பலதினப் பிரசுரப் பத்திரக் கட்டுரை
நிலம்மதித் திவனை நீள்நினை வுறுமால்;
சிவதொண்டன் நிலையிற் சித்தாந்த வகுப்பும்
சிவத்தொண்டர் பெரிய புராணச்சீர் வகுப்பும்
பயில்வுறு மன்பர் பரிவுறப் போதனை
இயலெழில் விஞ்ச இயற்றிடு மாசான்;
இலண்டன் மலேசியா இலங்கிடு மூர்பல
துலங்குசிங் கப்பூர் தொடரிடம் பலபுகூஉச்
சிவதொண்டன் அன்பர்தன் னுடன்வரப் பண்டு
சிவநெறி யுண்மை சிவபுண்ய மேன்மை
விரிவுரை நிகழ்த்தி வினைபய னெனஆண்டைக்(கு)
உரியோர் சிவநினை வுடன்வழி பாடு
புரிதர இனிதிற் புணர்த்த விரகன்;
இந்நூற் றாண்டின் எழுபான் ஒன்றென
மன்னிய ஆண்டிலும் மலேசியாச் சென்று
கோலா லம்பூர்க் குலவுமிந் தியருமப்
பாலார் ஈழப் பதியரும் இணைந்து

முந்நாள் நடாத்திய திருமுறை மாநா(டு)
அணைந்திடும் பதின்மூ வாண்டிற் கால்கொள்
விழாவின் முதனாள் வியன்சபைத் தலைவனாய்
குழாங்கொள் அவையினர் குதூகலித் தின்புறத்
தலைமை யுரையொடு மற்றும் பிரசங்கிமார்
கலைநுண் மதியுங் கழறிய பொருளுரைக்
குறிப்பும் குணித்திடு கூரிய குறிப்புரை
சிறக்க விரித்த சில மாட்சியன்;
வழிநாள் பன்னிரண் டாந்திரு முறைஅணி
கெழுமி யொளிரக் கிளத்திக் கேட்டோர்
முகமலர் வோட்க மோதமுங் கண்டவன்;
மற்றவ் ஊர்விவே கானந்த மன்றிற்
சொற்பன் னிருதிரு முறைப்பொருள் முன்னிய
விற்பன் னப்பெரு மேடைப் பேச்சும்
ஆக்கினன் பலநாள் அருள்நெறி மன்றில்
சிவஞான சித்தியார் வகுப்பும் போதனை
நலங்கெழ நயந்தோன் 'சிறம்பான்' "பினாங்கு"
'தைப்பிங்' 'குவாண்டன்' "சிங்கப் பூர்"த்தலத்
தைவத குலத்தினும் சபையினும் சார்ந்து
பைந்தமிழ் விரிவுரை பன்னி மீள்வோன்
சென்னைத் துறையி லிறங்கிச் சீர்கொள்
தன்ம புரத்தரு ளாதீ னத்தில்
இருபான் ஆறும் எண்முறை பூண்டிடு
குருமகா சந்நிதா னத்தின் தரிசனச்
சேவையின் பத்திச் சிலமுந் துதிமொழிக்
கோவையுங் கண்ட குருமணி இவற்குப்
பட்டாடை போர்த்துப் பரிசுநல் லாசி
பெட்டாடல் செய்தருள் பேறும் பெற்றவன்;
இம்மட் டோஇவ னேற்றமிந் நம்பியை
எந்தச் சபையும் முன்னிட் டிவன்றன்
சொந்த அறிவுரைச் சுவைப்பயன் துய்க்குமால்;
புராண படனமே பொருந்து விரிவுரை
தராதல மதிக்குந் தகைபுனை கவிதைகள்
சுவைகொளப் படித்தலிற் சொல்லலிற் பாடலின்
அவைதனிற் கேட்போர் அகமுகம் மலரச்
சபையலங் காரச் சதுரனாய் விளங்குவான்;
அவநெறிப் புகாதே தவநெறிப் புக்குச்
சிவநெறி விதிமுறைப் பவன்குரு சங்கமம்
குறிக்கொண்டு பணியுங் குணபூ டணனாய்க்
கொழும்புத் துறைக்குடி கொள்யோக சுவாமிபால்
செறிபக்திச் சீடன்; சிவதொண்ட னிலையம்
தழுவுறாஉந் தியானம் தருதுதி படனம்
சிவதொண்டன் பத்திர ஆசிரி யத்தொண்(டு)
இவைமுதற் பற்பல இதச்செயற் றகைமையன்;
சுவாமிக ளருளாற் றன்கலை விருதுபிற
அவாவிய வாறே யடைந்திட் டின்பம்

மேவிய மகிழ்ச்சி மீதூர்ந் தவர்க்குப்
பாவியல் பிள்ளைத் தமிழெனும் பனுவலும்
பல்பொரு ளேக்குறு பாமஞ் சரிமணம்
புல்கிட யாத்த புகழ்ப்பா மாலையும்
தொடுத்தணிந் தந்தச் சுவாமிதங் காதல்
மடுத்தநல் லாசி வகித்தான் மற்றிவன்
விநய வித்தகங் காண்குநர் வேண்டலோ(டு)
அநந்த பக்தித்தன் ஆசையுந் தூண்டலின்
சுவாமி சரிதையைச் சுருக்கம் விளக்கம்
தவாமுறை விருத்தச் சந்தச் செய்யுளிற்
குலாவு சருக்க உறுப்புடன் கோத்துத்
திராக்ஷா கதலி பாக(ம்)மன் பாவிடச்
சிவயோக சுவாமி திருச்சரி தம்மென
நவமாவோர் நாமம் புனைநூல் நல்கினன்
நடராஜ வித்துவ நாவல் லோனே;
ஈழமண் டலத்தும் ஏனைய நாட்டுள்
வாழுந் தமிழறி மக்கள்சே ரிடத்திலும்
பிறவிக் கடலிற் பெரிதுழல் மாந்தர்
அறநெறி சிவப்பணி யாற்றி யிம்மையின்
மறுமையி னின்பம்வீ டுறுபே ரின்பம்
பெறற்கொரு சாதனப் பெற்றிய தாமிது;
செந்தமிழ் வாழ்க! சிவயோக சுவாமிகள்
பைந்தமிழ்ச் சரிதமும் பரந்து வாழ்க! நற்
சிந்தைகொண் டோதுவோர் கேட்குஞ் செல்வியோர்
சந்ததம் வாழ்க! வித் தரணியும் வாழ்க!
மன்னுசீர்த் திருவொடு வாணாள் சுகபலம்
மன்னிப்பல் லாண்டு வாழிநட ராஜனே!

$\frac{465}{1}$, காங்கேயன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
1-4-1974.

உ

சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மாணவ பரம்பரையினரும்,
திருநெல்வேலி ஆசிரிய கலாசாலை முன்னாட் பேராசிரியராய் ஓய்வுபெற்றவரும்,
கந்தபுராண உரையாசிரியரும், பல பண்டிதர்களை ஆக்கித் தந்தவருமாகிய

## சித்தாந்தசாகரம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின்

# சிறப்புப் பாயிரம்

### ஆசிரிய விருத்தம்

திருவளரு மிளமைதனிற் சிறந்த பண்புஞ்
சீரியநல் லொழுக்கமொடு சேர்ந்து தூய
பெருநலனார் துறவுமனப் பான்மை பூணல்
பேசரிய தவவொழுக்கம் பேணி நிற்றல்
அருமையிவை வாழ்வதனில் வாய்க்கப் பெற்றே
அவனிதலத் தினிதுறைத லம்ம! வம்ம!!
பெருமைபெறு மிப்பேறு மகானு மெங்கள்
பேசரிய சிவயோக சுவாமி பெற்றார். 1

இவ்வுலகோர் செய்ததவப் பயனாய் வந்த
எங்கள்சிவ யோகரவ ரெங்க ளோடே
இவ்வுலகிற் பல்லாண்டா இனிது வாழ்ந்தும்
ஈசனரு ளாட்சிபுரி இயல்பின் மிக்கும்
இவ்வுலகில் தமையணுகு மெவர்க்கும் நல்ல
இனியநெறி யியல்பறிந்தங் கிசையச் செய்தே
இவ்வுலகில் தாமரைமேல் நீரே போல
இயைந்தொன்றிப் பற்றற்றான் பற்றே மிக்கார். 2

தமைச்சரணா யடைந்தவர்கள் யாவ ரேனுந்
தாங்கரிய கவலைதுயர் உற்ற காலை
அமைத்தபெரு நலவருளா லவர்கட் குற்ற
அத்துயர்கள் கவலைகளை அறவே நீக்கித்
தமைச்சார்ந்த இன்பநல மவர்கட் கூட்டித்
தத்துவமெய்ஞ் ஞானநெறி தன்னைக் காட்டி
இமைப்பினிலே இன்பநலம் பெருக வைத்தே
இவ்வுலகோ ரினிதுறவே இனிதே வாழ்ந்தார். 3

இப்பற்றே யன்றியவர்க் கின்னோர் பற்றும்
இருந்ததுகாண் அதுதானெம் நாட்டு மக்கள்
ஒப்பற்ற உலகமக்கள் யாவ ரேனும்
ஓதரிய நல்வழியீ டேற வேண்டும்
தப்பற்ற நல்வாழ்வு வாழ்தல் வேண்டும்
தாங்கரிய தவஞ்ஞானம் தாங்கல் வேண்டும்
அப்பற்றே "யான்பெற்ற பேறிவ் வையம்
ஆங்ஙனமே பெறுக"வெனும் வழக்கிற் றாமால். 4

நல்லார்வ மெனவியம்பும் அந்தப் பற்று
    நாடறியப் புத்தர்முதற் காந்தி யிரு
எல்லார்க்கு மிருந்ததுவே எங்கள் சுவாமி
    எம்மனோ ரீடேற இதுதாங் குற்றூர்
அல்லாம லிதிலேனூ தனமொான் றில்லை
    அவர்மூல மீசனரு ளெமக்கும் வாய்க்க
நல்லார்வப் பற்றதனை நடாத்திக் காட்டி
    நமதுசிவ யோகரவர் நன்கு வாழ்ந்தார். 5

சிவயோக சுவாமிகளின் சரிதந் தன்னைச்
    சிறந்தபெருந் தருமமா முரைகஸ் லின்மேல்
நவமாக நாமுரைத்து நயந்து பார்த்தே
    நாடரிய பயனவற்றை நாடு வோமேல்
உவமனிலா நற்பயன்க ளுதிக்கு மன்றோ!
    ஓதரிய இருமையின்பப் பயனுண் டாகும்
தவமேலாம் முத்தியின்புஞ் சாரு மன்றோ!
    தக்கோர்கட் கிவைசால வமையுந் தானே. 6

அருமந்த சுவாமிகளின் சரிதந் தன்னை
    அழகுநடை வசனமதி லாக்கி டாமல்
வருமின்ப அணிபலவும் வாய்ப்ப நல்ல
    வளமாருஞ் செய்யுணடை செய்தல் நன்றே!
தருமின்பச் சுவைபலவுஞ் சாருஞ் செய்யுள்
    தக்கோர்தம் மனத்துக்கோ ரமுத மன்றோ!
வருமிந்த நெறிதாங்கி வளமார் பாவால்
    வகுத்துரைத்தான் சுவாமிகளின் சரிதந் தன்னை. 7

வேறு

சொல்ல லுற்ற சுவாமி சரிதத்தில்
    சொன்ன காண்ட மிரண்டுள முன்னதில்
நல்ல தாகிய எட்டுச் சருக்கமும்
    நாடும் பின்னதிற் பதினோர் சருக்கமும்
எல்லா மாகவே பத்தொன்ப தாகுமால்
    இயலும் பாத்தொகை முந்நூற்றி னேடுடன்
செல்லும் நாற்பத்தைந் தாமெனச் செப்பவே
    செய்தான் நல்ல திருவிருத் தத்தினால். 8

இச்ச ரித்திரங் காவிய ரூபமாய்
    இன்பு ராண நடையி லியன்றதால்
மெச்சு நல்ல புராணகா வியமென
    மேன்மை யோடினி துற்றது; அன்றியும்,
இச்ச கத்தினிற் சுவாமி அருளினால்
    இனிய நன்னிலை எய்தியோர் விளைவினை
எச்ச கத்தரு மின்புடன் காணவே
    ஏற்றம் மிக்க சுவாமிபுகழ் செய்தான். 9

இந்த நாவீரன் டும்மினி தாக்கியே
இச்ச கத்தவர்க் கீந்தவன் யாரெனின்?
சந்த தம்யோக சாமி யருளினால்
தாங்கு மாசிகள் பற்பல சார்ந்தவன்
சந்த மார்புகழ் பாடும் புலமையோன்
தாங்கு நல்லுணர் வாலுயர் வெய்தியோன்
செந்த மிழ்ப்புல மைத்திறம் மிக்கவன்
செல்வ நல்வள னும்பல சேர்ந்தவன். 10

சுவாமி பிள்ளைத் தமிழினைப் பாடினோன்
சுவாமி யின்சிவ தொண்ட னிதழுக்குச்
சுவாமி யின்னரு ளாலாசா னாயவன்
சுவாமி யின்சிவ தொண்டன் நிலையத்தில்
சுவாமி தன்சேவை செய்யுஞ் சுகுணத்தன்
சுவாமி யாலுயர் வெல்லாமு முற்றவன்
சுவாமி யின்சர ணேசர ணென்பவன்
சுவாமி தன்னையே சிந்தித் திருப்பவன். 11

சுந்த ரக்கவி பாடும் புலமையன்
சுவாமி தன்கவி பாடும் புலமையன்
சந்த தஞ்சிவ நாம நவிலுவோன்
சாரு மின்னருட் பாவு நவிலுவோன்
செந்த மிழ்க்குச் சிரோமணி யாயவன்
சேரும் பண்டித வித்துவா னாயவன்
வந்த னைக்குரி யானெங்கள் க. சி. யாம்
வளமா ரும்நட ராசனும் வள்ளலே! 12

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
12-4-74.

உ

சிவமயம்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரும்
ஆசிரியராய்க் கடனாற்றி ஓய்வு பெற்றவரும்
"பகவத்கீதை வெண்பா" முதலிய நூல்களின் ஆசிரியருமாகிய

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை யவர்களின்

# சிறப்புப் பாயிரம்

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

பத்திமையாற் பெரியோர்தம் திருச்சரிதம் இடையிடையே பகர்ந்தும் கேட்டும்
புத்திபண்ணிப் பொருளுணர்ந்து போற்றுவது புண்ணியமா மிதனால் மக்கள்
சித்தசுத்தி யுடனிட்ட சித்திபெற்று வாழ்வினிலே செழிப்பா ரன்பால்
நித்தியபா வனைசெய்வோ ரிதையடையும் நிலையெம்மால் நிகழ்த்த லாமோ? 1

செய்யசிவ பரம்பொருளின் சிறந்தவிடப் பாகமதோ திருமால் மார்போ
ஐயனெனும் பிரமாவி னணிநாவோ இந்நகரென் றறிஞர் போற்ற
வையமெலாம் புகழ்வளர்க்கும் யாழ்ப்பாண மாநகரின் வயங்கு தென்பால்
மெய்யொளியோன் றுதித்ததனால் வியன்கொழும்புத் துறைமேன்மை பெற்ற
வாறும், 2

அவ்வொளியை யொளிசெய்தே யிங்குலகி லகவிருளை யதனால் நீக்கச்
செவ்வொளியாங் திருவொளியின் திருப்பார்வை யவ்வொளிமேற் சென்ற தாலே
திவ்வியஞ்சேர் சதாசிவப்பே ரவ்வொளிதான் சதாசிவமே தியானஞ் செய்து
செவ்விவரு பருவத்தே குருநாதர் தமைத்தேடித் திரிந்த வாறும், 3

செல்லப்பா வெனுஞ்சிவன் முத்தரருள் சுரந்துநல்லைத் தேர டிக்கண்
நல்லவருட் குருவாகி நயந்திருந்த திருக்குறிப்பும் ஞான தீட்சை
ஒல்லைதனிற் செய்தவர்க்கங் குபதேசம் புரிந்ததுவும் உண்மை தேர்ந்தே
தொல்லையெலாம் தீர்ந்தவர்தாம் சிவயோக சுவாமியெனத் துறந்த வாறும், 4

இன்மையுமன் மையுமாகு மிருமையிடை யொருமை கண்ட வியல்புமெய்தும்
நன்மையினுந் தீமையினு நடுநின்றே யவற்றதுநா மழும்போய்க் கெட்டுப்
பொன்மைநிறம் பொருந்திதயப் பூங்கமலப் பொகுட்டினடு விடைப்பொ லிந்த
சின்மயமாம் செம்பொருளைத் திருவருளாற் சிவயோகர் தெளிந்த வாறும், 5

மூர்த்திதலம் தீர்த்தமெலாம் முறையாகக் காண்பதற்கெம் யோக மூர்த்தி
யாத்திரைமேற் கொண்டதுவும் ஈழமுத லிமயம்வரைத் தீர்த்த மாடித்
தோத்திரஞ்செய் தொண்டருடன் திருக்கோயில் சிவமெனவே தொழுத வாறும்,
கோத்திரமுங் குலமுமெலாம் மாய்ந்தொழிந்து சமபுத்தி கொண்ட வாறும், 6

உருவிளங்குஞ் செபமென்ன தவமென்ன தியானமென்ன உள்நாட் டத்தாற்
றெருள்விளங்குஞ் சமாதிமகா சமாதியென்ன திருவடிப்பே றென்றே யெல்லாம்
குருவினங்க வுரைத்தருளிக் குறிப்புணர்ந்து சிவமயமாய்க் குறிக்கோள் போற்றி
அருள்விளங்கச் சிவயோகர் அத்துவித மாக்கலந்த அருமைப் பேறும், 7

ஆயபல நிகழ்ச்சியெலா மருகிருந்தே யனுபவத்தி லறிந்தும் கேட்டும்
தூயமனச் சிவயோக சுவாமியருட் சரிதையன்புத் தமிழ்தொ டுத்தே
நேயமிகச் சுவாமிபுகழ்ப் பாமாலை யுடன்நேர்ந்து நிவேதித் தான்முன்
சேயெனவே **சுவாமிபிள்ளைத் தமிழ்பாடி** நலங்கவிந்த நாவின் செல்வன். 8

சுட்டிறந்த அறிவுடைய சிவயோக சுவாமிதுணைப் பாதப் போது
மட்டவிழ்ந்து தினம்மலரும் மனத்தடத்தான் சிவசமய மரபின் வாழ்வான்
பட்டமுடன பதவிபல படைத்துமவை குருநாதர் பாதப் போதில்
இட்டமல ரெனக்கருதி யிவ்வுலக அனுபவத்தி லின்பங் காணபோன். 9

**அண்ணைநகர் நடராஜன்** வளர்மதுரத் தமிழ்சைவ மரபிரண்டும்
**கண்ணிரண்டாக்** கொள்கலைஞன் கல்வியறி வுடன்பணிவு கண்ட பண்பன்
புண்ணியஞ்செய் புகழ்க்கதிர வேல்கிருஷ்ண பிள்ளைமகன் ஈழம் போற்றக்
கண்ணியம்பெற் றிடுமறிஞன் தென்னாட்டு நல்லறிஞ ரவைக்க ளத்தே. 10

சொன்மலரை யன்பென்னும் நாரினிடைத் தொடுத்தழகாய்த் தூய சைவ
நன்மணமே கலந்தினிய நறுந்தமிழின் சுவையொழுக நயந்தென் நண்பன்
தன்னருமைக் குரவர்திரு மார்பகத்தே மனமுருகிச் சாத்தி நின்ற
செய்ந்நன்றி யெனுந்தெய்வச் செழுமாலை மனமாலைத் திர்க்குந் தானே. 11

காண்டமிரண் டாய்த்தெய்வக் காப்புடனே நூற்பயனும் வாழ்த்தும் காட்டி
வேண்டுதிரு வருள்விளங்கப் பத்தொன்பான் சருக்கமுடன் விருத்தச் செய்யுள்
ஈண்டுமொரு முந்நூற்று நாற்பத்தைந் தாலினிது நிரம்பு மிந்நூல்
பூண்டபுகழ்ப் பாமாலை யுடன்சைவ நெறிபூத்துப் பொலிந்து வாழி. 12

குருக்கள்மடம்,
கிழக்கு மாகாணம்.
1-5-74.

29512

ஓம்

நம்பி அகவல், கதிர்காமப் பிள்ளைத்தமிழ், திருக்குறள் அறத்துப்பால் விரிவுரை
முதலிய பல நூல்களின் ஆசிரியரும்,
போதகாசிரியருமாகிய

## கொழும்பு, புலவர் சிவ. கருணாலயபாண்டியனாரவர்களின்

# *சான்றுச் செய்யுள்*

ஒருசார் அறுசீரடி யிரட்டி யாசிரிய விருத்தம்

க. கொழும்புத் துறையூ ரடிகன் கோடா துள்ளந் தன்னைக்
குறிக்கொண் டிருப்ப விறைவன் குழகன் செய்ய திருத்தாட்
டொழும்புத் துறையாந் தவமுந் தூய்மை யுணர்வுஞ் சிறந்து
துன்புற் றுழலும் பிறவித் துயரந் தீர்த்த பெரியோன்
செழும்புத் துறையுள் கடவுள் சேப்ப மாந்தர் நெஞ்சந்
திருத்த வன்னோன் வாழ்க்கைத் திறத்தைப் பொதிந்து வைக்குந்
தொழும்புத் துறையாப் பனுவற் றாக்குச் செய்தான் வண்ணத்
தொண்டன் சீர்நட ராசன் றென்மைத் தமிழ்வல் லோனே.

வேறு

உ. ஈழமர் தமிழ மக்கள் இம்பரிற் கண்ணிற் கண்ட
போழமர் மதிசேர் சென்னிப் புகழினோன் வரலாற் றின்மேற்
காழமர் புலமை தோன்றக் கவினுறப் பாடி னான்றன்
ஏழமர் பிறவி நீத்தான் இவன்வண்ண நடரா சன்னே.

கட்டளைக் கலித்துறை

ந. நான்முறை வாய்மை நவின்றசெல் லப்ப னமனெனவே
தான்முறை கொள்ளத் தகுஞ்சிவ யோகி சரிதமென்று
மேன்முறை நின்று மரபு தழுவி விளம்பியசெந்
தேன்முறைத் தீந்தமிழ் கற்பார்க்கு முண்டாமோ தீவினையே.

ஆசிரிய விருத்தம்

ச. அன்பு கனிய வகங்கனிய ஆனேற் றண்ண லருள்கனிய
என்பு கனிய இசைப்பாட்டும் புகழ்ப்பா மாலை யெனபதுவும்
இன்பு பிழம்பாஞ் சிவயோக சாமி மேலே யியற்றிமகிழ்
நன்பு பெற்று னடராச னவைதீர் புலமை நயம்பெற்றான்.

அறுசீரடி விருத்தம்

ரு. சிவமுடைய யோகிசரி தம்பாடி னான்சிவ தொண்டனித முாசிரியன்மற்
றவனுடைய சேவடியி னகலாத நெஞ்சமுறு மார்வலன் சார்புமுற்றும்
இவனுடைய வுண்மையள வாயினேன் செய்தானு மிறவாத தந்தையினையுந்
தவமுடைய தாயாகி யீன்றானு மாயினான் சாலவும் பலர்புகழவே.

கலிவிருத்தம்

சு. வாழி செந்தமிழ் வான்முகில் வையகம்
வாழி நன்மனை மாண்பொடு கற்பியல்
வாழி யாடவர் வாய்மையொ மூக்கமும்
ஊழி யூழிதொ றும்முல வாதரோ.

இரத்துமலானை,
6-5-74.

உ

சிவமயம்

சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவரவர்களின் குமாரரும்,
கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆசிரியராய் ஓய்வு பெற்றவரும்,
"ஈழகேசரி" இதழாசிரியராகப் பணியாற்றியவருமாகிய

## திரு. கு. அம்பலவாணபிள்ளை யவர்களின்

# அணிந்துரை

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று."

புண்ணிய பூமியாகிய ஈழத்திருநாடு, தாய்நாடாகிய தென்னகம்போல் பலவித பெருமைகளுடன் கூடியது. தேவாரம் பெற்ற திவ்விய சிவஸ்தலங்கள், முருகப் பெருமானுக்குரிய கோட்டங்கள், ஐங்கரன் ஆலயங்கள் என்பன நாட்டின்கண் பலவிடங்களில் விளங்கக் காணலாம். சமயத் தொண்டர்கள், மெய்யடியார்கள், தமிழ்ப் பேரறிஞர்கள் என்போரும் பலர் நம் நாட்டின் பெருமைக்குக் காரணராய் வாழ்ந்து வந்ததுண்டு. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் துறவுபூண்ட ஞானிகள், சித்தர்கள், சமயசாஸ்திர விற்பன்னர்கள் என்போர் அவதரித்து வாழ்ந்து மக்கட்கெல்லாம் கொழுகொம்பாக விளங்கி வந்துள்ளார்கள். அவர்களுட் சிலராகும் பெரியானைக்குட்டிச் சுவாமி, சித்தானைக்குட்டிச் சுவாமி, கடையிற் சுவாமி, குழந்தைவேற் சுவாமி, செல்லப்பாச் சுவாமி, நயினாதீவுச் சுவாமி, யோகசுவாமி ஆகியோர் நன்கு யாவராலும் அறியப்பட்டவராவர்.

பலதிறப்பட்ட வாழ்க்கைகள், கோலங்கள், செயல்கள், பேச்சுக்களோடு கூடிய துறவிகளை உள்ளபடி அளந்தறிவது சாதாரண மக்களால் இலகுவிற் சாலுவதொன்றன்று. மெய்ஞ்ஞானத்தைப் பெற்றுக்கொள்ளாத சிற்றறிவும் சிறு செயலுமுடைய நாம் முற்றத்துறந்த ஞானிகளை அளக்க முயல்வதும் அபிப்பிராயங்கூற முற்படுவதும் மிக்க ஆட்சேபத்துக்கு இடமாகுமன்றோ?

மேற்கூறிய துறவிகளில் இற்றைக்குப் பத்து வருடங்கட்கு முன்னர்ப் பேரின்பப் பெரும்பே றடைந்த யோகசுவாமிகளை ஈழத்து மக்கள் பெரும்பான்மையும் யாழ்ப்பாண மக்கள் நன்கு அறிவார்கள். அநேகர் நேரே அவரோடு தொடர்பு பூண்டு அடியார்கள்போல் வாழ்ந்தும் வந்துள்ளார்கள். மற்றைய சில துறவிகள் போலன்றி, உலகில் தம்மை மாட்டிக் கொள்ளாது ஆசைகளைத் துறந்து தாமரை இலைமேலுள்ள நீர்த்துளிபோல் வாழ்ந்து வந்த பெரும்பேறு யோகசுவாமிகட்கு விசேடமாகவுடைத்து. அவருடன் மிக நெருங்கிப் பழகியோரும் அவரை முற்றாகக் கண்டறிந்திலர். எவர்க்கும் எவ்விதத்திலும் பிடிகொடாது வாழ்ந்தன ரென்றே கூறவேண்டும். அவர் இன்ன தன்மையர், இன்ன குணமுடையார், இன்னது செய்வர், இன்னது சொல்வார் என்பதைத்

திட்பமாக எவராலுங் கூறமுடியாது. எவ்வித கவலையுமின்றிப் பரம்பொருளையே இலக்காகக் கொண்டு வாழ்ந்து வந்த சுவாமிகட்கு வாழ்க்கையில் எவ்வித குறையும் கிடையாது.

சுவாமிகள் தாம் பெற்ற இன்பநிலையோடமையாது உலகமும் உய்வடைந்து கடைத்தேற வேண்டுமென்ற உயர்ந்த பெருநோக்குடன் சமய சன்மார்க்க வளர்ச்சிக்கு ஆதாரமான புதிய இயக்கங்களை அன்பர்களைக் கொண்டு அமைப்பித்தும், அவைகட்கு வேண்டிய வேண்டிய உதவிகள் கிடைக்கச் செய்தும் வந்தனர். மக்களுக்கிடையில் நல்வாழ்வு நிலைபெற்றுச் சமயபக்தி ஏற்படும் பொருட்டுப் பாதயாத்திரைகள், ஆலயங்களிற் புராண படனங்கள், சமயப் பிரசங்கங்கள் ஒழுங்காக நிகழ்வதிலும் ஊக்கங்காட்டி வந்தன ரென்பாம். மதுநீக்கம், விவசாய விருத்திக்குரிய இயக்கங்களையும் விருப்புடன ஆதரித்து வந்தனர்.

வாழ்க்கையிலே துயரடைந்தோரும் சுவாமிகளை நம்பி நாடுவதுண்டு அவர்கட்கெல்லாம் நற்புத்திகள் கூறி, உண்மை உணர்த்தி, மனச்சாந்தியை உண்டு பண்ணும் வன்மையும் சுவாமிகட்குண்டு. "முழுதும் உண்மை; ஒரு பொல்லாப்புமில்லை; எப்போதோ முடிந்த காரியம்; யாம் அறியோம" எனக் கூறி உண்மையை விளக்குவார். சுவாமிகள் முன்னிலையில் நிற்பது தெய்வ சந்நிதானத்தை அடைந்தாற போல விருக்கும்.

இவ்வாறாக அதியுன்னதமான தெய்விக நிலையையடைந்த யோக சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை வசனவடிவில் திறம்பட முரணேற்படாது எழுதுவதே இலகுவில் எவராலும் சாலுவதன்று. மேலும் இவ்வரலாற்றைச் செய்யுள் வடிவில் யாத்துக் கற்றறிந்த அறிஞர்களின் பாராட்டைப் பெறுவதென்பது எவ்வளவு அரியசெயல் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சுவாமிகள் மாட்டு நிறைந்த அன்புடையராய், அவரது அருள் நோக்கினைச் சிறிதளவாவது பெற்ற ஒருவரே இந்தப் பெரிய கைங்கரியத்தைத் தவறின்றி யாவர்க்கும் இனிது பயன்படச் செவ்வனே நிறைவேற்றக் கூடியவர். அவருடன் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பு பூண்டு, அவர் ஆரம்பித்த இயக்கங்கள் தொண்டுகளை இனிது செய்து முடிப்பதில் மிக்க அக்கறை கொண்டு விசுவாசத்துடன் உழைத்து வந்த பண்டித வித்துவான் திரு. க. கி. நடராஜனவர்களை நினைக்கும்போது உடனே மனக்கண்ணில அடுத்துவருந் தோற்றம் சுவாமிகளினுடையதே. சிவதொண்டன் பத்திரிகை, சிவதொண்டன் நிலையம், புராண படனங்கள் முதலிய சுவாமிகள் ஈடுபட்டுள்ள இயக்கங்களில் வித்துவான் நடராஜனவர்களின் சேவை இம்மாத்திரமன்று. அத்துடன், வித்துவ சிரோமணி பிரமஸ்ரீ சி. கணேசையரவர்களின மாணவராக விருந்து, நீண்டகாலம் தமிழை வரன்முறையாகக் கற்ற பெருமையுடையவர். மேலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுங் கற்று உயர்ந்த பட்டங்களும் பெற்றுள்ளார். நிரம்பிய தமிழறிவுடன் சைவசித்தாந்த சாஸ்திரத்திலும் விற்பன்னர்.

விஷயம் இவ்வாறாகச் சுவாமிகளின் வரலாற்றைச் செய்யுளில் இயற்றுவதற்கு மிக்க தகுதி வாய்ந்தவர் பண்டித வித்துவான் நடராஜன் அவர்கள் என்பதை எவரும் மறுக்கமாட்டார். இப்போது இவர் இயற்றிய நூல், சுவாமிகளுடைய பிறப்பிலிருந்து அவர் வாழ்ந்த 92 வருடங்களில் நடந்த சம்பவங்களை எடுத்துக் காட்டுவதாயுள்ளது. செந்தமிழ்ப் பாக்களில் பொருணயம், ஓசைநயம், சொன்னயம், சந்தச்சிறப்பு முதலாகப் பத்தழகும் நவரசமும் குடிகொள்ள

PUBLIC LIBRARY
JAFFNA.

யாவரும் படித்து மெச்சும் முறையில் இந்நூல் இயற்றப்பட்டிருப்பது பெரிதும் பாராட்டற்குரியதாகும். இந்நூலினைக் கற்போர் சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினை அறிவதுடன், கடவுட்பக்தி, சமய சன்மார்க்க வாழ்க்கைத்திறம் ஆகியவற்றையும் அறியும் பேற்றைப் பெறுவர் இந்நூலிற் சிற்சில விடங்களிலுள்ள தோத்திரக் கவிகள், தத்துவங்களை உரைக்குங் கவிகள் என்பவைகளை நோக்கும்போது தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் முதலிய திருமுறைப் பாக்களின் நினைப்பு எவர்க்கும் வராதுவிடாது. சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை இயற்றும் பேறு பண்டித வித்துவான் நடராஜனிடத்தானது ஒரு பேறென்பாம். இக்காலத்தவர்க்கு மாத்திரமன்று, இனி வரப்போகும் சந்ததியினர்க்கும் தெளிவாக நன்கு இயற்றப்பட்ட இந்நூல், பெருவிருந்தாகவிருக்கும் என்பதே எமது அபிப்பிராயம்; இப்பெரிய அரிய வரலாற்று நூலை நல்லமுறையில் திறம்பட யாத்து உலகுக்களித்த வித்துவானவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியுடையதாக.

'புலவரகம்',
மயிலணி,
சுன்னாகம்,
12-4-74.

உ
சிவமயம்

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்

## பேராசிரியர் திரு. சு. வித்தியானந்தன், M. A., Ph. D. அவர்களின்

# அணிந்துரை

### சிவயோக சுவாமிகள் திருச்சரிதம்

நல்லூர்த் தேர் மண்டபத்திற் செல்லப்பா சுவாமிகளைத் தமது குருவாகப் பெற்ற கொழும்புத்துறை யோக சுவாமிகள் நாம் கண்ட ஒரு பெரும் முனிவர். அவர்களின் வால்நரைமுடியும், அருள் நிறைந்த கண்களும், நகைதவழும் முகமும் அடியார்களைப் பரவசம் அடையச் செய்வன. கல்நெஞ்சம் படைத்தோர், அரசியல்வாதிகள், பதவிமோகம் பிடித்தோர், பணத்திமிர் மிக்கார் அவரிடம் தஞ்சம் புகுந்து, அவர் அருள் பெற்று, சிந்தையிற் கடவுளும் செயலில் தூய்மையும் கொண்டு ஒழுக முற்பட்டனர். இன்று அவர்களின் சீடர் பலர் சிவதொண்டினையும் நற்சிந்தனையையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களில் முதன்மையானவர் செந்தமிழ்ச் சிரோமணி, பண்டித வித்துவான் க. கி. நடராஜன் அவர்கள்.

க. கி. நடராஜன் அவர்கள் யோகசுவாமிகளை நாயகனுகக் கொண்டு காவிய நயங்கள் செறிய இயற்றிய நூலே சிவயோக சுவாமிகள் திருச்சரிதம் என்னும் நூல். கொழும்புத்துறைச் சுவாமிகளின் போதனைகளிலும் சாதனைகளிலும், மக்களின் ஈடேற்றத்திலும் ஆசிரியர் உண்மையான ஈடுபாடு கொண்டமைக்கும், அவ்வீடுபாட்டின் விளைவான உண்மையொளி அவரின் உள்ளத்தில் தோன்றியமைக்கும் சான்ருக விளங்குவன இந்நூலிலுள்ள செய்யுட்கள்.

பத்தொன்பது சருக்கங்களையும் இரண்டு காண்டங்களையும் கொண்ட இத் திருச்சரிதத்தில் மூதற்கண் அமைந்துள்ள திருநாட்டுச் சிறப்பிலும் திருநகர்ச் சிறப்பிலும் முறையே ஈழநாட்டின் அருமை பெருமைகளையும் யாழ்நகரின் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

வான ளாவிய மால்வரைக் குறிஞ்சியும்
தேன ளாவிய சீர்மலர் முல்லையும்
தூநெ லார்தரு துப்புன மருதமும்
மீனு லாவிடு வெண்டிரை நெய்தலும்

ஆன நானில மணிபெற மன்னுறீஇக்
கான முல்லைநற் குறிஞ்சி கடிவளம்
வேனி லாற்றிரி பாலையும் மேவியே
தானின் ஞெளிர்வது தரணியி லீழமால்

என்று ஈழத்தின் ஐவகை நிலங்களின் வளம் கூறும் கவிஞர்,

கற்பக தருவென் றென்று
 கருதிய வெல்லா மீந்து
நற்றவ விமையோர் நாட்டில்
 நண்ணிடு மதுபோ லிம்பர்
பொற்பமர் பெண்ணைச் சோலை
 புகல்வுறும் பொருள்க ளெல்லாம்
அற்புத மெய்த மன்னி
 யளித்திடும் யாழ்ப்பா ணத்தே

என யாழ்ப்பாணத்தின் பனை வளத்தினை நயம்படக் கூறுகின்றார்.

மெய்ம்மையெனு மொருபெரிய மேம்பட்ட நெறிநிலவச்
செய்யதமி ழினஞ்செய்த திருந்தியநற் றவநிலவப்
பொய்ம்மைவழி யகலஇழி புலன்களது வலியகலச்
சைவநெறி நிலவநிறை சாந்தமது தலையெடுப்ப

அவதரித்த யோக சுவாமிகளின் அவதார மகிமை திருவவதாரச் சருக்கத்தில் அழகுற அமைந்துள்ளது.

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட யோக சுவாமிகள் யாழ்ப்பாணத்திலே ஆங்கிலமும் செந்தமிழும் அடைவுபெறக் கற்று, கிளிநொச்சிப் பகுதியில் நீர்ப்பாய்ச்சன இலாகாவில் சாலைக்காவலராகத் தொழிலாற்றினர். அடுத்து, 'என்னை என்றனக் கறிவித்த என்குருநாதன்' செல்லப்பா சாமியைக் குருவாகப் பெற்றமை சற்குருவைச் சார் சருக்கத்தில் விரிவாகக் கூறப்படுகின்றது. 'எப்போதோ முடிந்தது', 'அறியோம் யாம்', 'அப்படியே உளது', 'அறிவார் யார்', 'ஒரு பொல்லாப்பும் இல்லை', 'முழுதும் உண்மை' எனச் செப்பு மந்திரங்களைக் குருவிடம் பெற்று, யோகநாதர் நல்லூர்த் தேரடியில் உயர் மேற்படிக் கட்டில் சமாதி நிலைபெற்றுத் துறவுபூண்டார். துறவியாகி யாத்திரை சென்றவரை சில்லாண்டாகக் காணாத சுற்றத்தார் செல்லப்பாச் சாமியை அணுகி, 'யோக நாதன் எங்கே?' எனக் கேட்டனர். 'செத்துப் போனான்' என அவர் செப்பிய தற்கமைய உலகப் பற்றுச் செத்துத் துறவால் நிரம்பித் திரும்பி வந்து, கொழும்புத் துறையில் ஆச்சிரமம் அமைத்துத் தவத்தினில் வைகினார். இவ்வாச்சிரமத்திற்கு அந்தணரும் அரசியலோரும் அமைச்சர்களும் வணிகர்களும் வயலுழுவோரும் இல்லறத்தின் மாண்பினரும் வந்து அருள் பெற்றமையும், செல்லப்பா சுவாமிகள் சிவபதம் எய்தியமையும் முதற்காண்டத்திற் கூறப்படுகின்றன.

சுன்னாகத்தில் உயர் வேளாண் குடும்பந்தன்னில் தோன்றிய செல்லாச்சியம்மை என்பார் யோக சுவாமிகளைப் பத்தியுடன் பரவுகின்ற பான்மை மிக்கவர். அன்னாருடைய சரிதையைக் கூறும் செல்லாச்சியம்மை சருக்கத்தோடு தொடங்குகின்றது இரண்டாம் காண்டம். கதிரை யாத்திரைச் சருக்கம் விரிவாக அமைந்துள்ளது. இதில் கதிர்காம யாத்திரையின்போது ஏற்பட்ட கஷ்டங்களும் அற்புதங்களும் இடம்பெறுகின்றன. சுவாமிகள் பல தடவை இந்தியாவுக்குத் தலயாத்திரை சென்றிருக்கின்றார். இவற்றைப் பற்றிய விபரங்கள் கிடைக்காதபோதும், சிறிதளவிலே இதனைத் தலயாத்திரைச் சருக்கம் கூறுகின்றது.

யோகசுவாமிகள் எமக்கு விட்டுச் சென்ற அழியாச் செல்வங்கள் சிவதொண்டன் பத்திரிகை, நற்சிந்தனைகள், சிவதொண்டன் நிலையம் என்பன. இவற்றிற் சிவதொண்டன் இதழினை, சிவயோக சுவாமிகள் திருச்சரிதம் பாடிய

க. கி. நடராஜன் அவர்களே சுவாமிகளின் ஆசியுடன் தொடக்கி, இன்றுவரை அதன் ஆசிரியராக நடத்தி வருகின்ருர். திரு. நடராஜன் அவர்கள் 1934 ஆம் ஆண்டில் கமலாசனி அச்சுநிலையத்தைத் தொடக்கியபோது, அதில் ஒரு பத்திரிகையையும் நடாத்தும்படி சுவாமிகளால் ஏவப்பட்டார். சுவாமிகளே சிவதொண்டன் என்ற பெயரையும் இட்டார். இதழ் தொடர்பான பல அலுவல்களைச் சுவாமிகளே கவனித்து வந்தார். சிவதொண்டனின் பெருஞ் சேவை யோக சுவாமிகளின் நற்சிந்தனைகளை வெளிவரச் செய்ததாகும். 1935 ஆம் ஆண்டிலிருந்து இவ்விதழ் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. "உலகம் உவப்பத் தமிழ் வளர ஒங்கும் சைவநீதி மல்க, அலகில் பேரன்போடு உதித்த அணியார் தெய்வச் சிவதொண்டன், எழிலார் மலராய் வளர்ந்தோங்கி வளமை கூர, ஆதரிப்போர் மலியப் பெற்று, அருள்மல்கப்" பீடுநடைபோட்டு வருகின்றது.

சிவதொண்டன் இதழை நடாத்துவதற்கு ஓர் அலுவலகமும், தொண்டர்கள் தியானம் முதலியன நடாத்துதற்கு அமைதியான இடமும் தேவைப்பட்டதால் சிவதொண்டன் நிலையம் வண்ணார்பண்ணையில் சைவசமய நிறுவனங்களுக்கு மத்தியிலும், சைவக் கல்லூரிகளுக்கு அண்மையிலும் 4-11-53 இல் தொடங்கப்பட்டது. மேல்கீழாக இருதளமாக இலங்கிய இந்நிலையத்தில் தியானத்துக்காக மேற்றளம் ஒதுக்கப்பட்டது இத் தியானமண்டபத்தில் திருவடி பிரதிட்டை செய்யப்பட்டுப் பாதபூசையே மௌனமாக நடைபெறும். புராண மண்டபத்திற் புராணபடனம், திருமுறை ஓதுதல், நற்சிந்தனைப் பாராயணம் முதலியன நடைபெறும்.

திங்கள்தோ றியற்றும் யாகத் திவ்விய பேரைப் பூண்டு
மங்கள மாக வன்பர் வந்தனை தியானஞ் செய்து
பொங்குபே ரின்பம் ஆரப் பொலியுநாள் நிகழ்ச்சி யெல்லாம்
மங்கிடா திங்குத் தானே வளம்பெற நிகழும் மாதோ

என இங்கு நடக்கும் யாகங்கள் பற்றிச் சிவதொண்டன் நிலையச் சருக்கம் கூறுகின்றது. மட்டக்களப்புக்கயலிலே மட்டற்ற புகழ்ச் செங்கலடியினிற் கட்டப்பட்ட சிவதொண்டன் நிலையமும் இந்நிலைய அமைப்பினைப் பின்பற்றியதே.

நாடு உய்ய மதுவிலக்கினைச் செய்யும்படி அன்பர்களுக்குச் சொல்லியும் கழகங்கள் கூட்டி இயங்கச் செய்தும் ஆற்றிய பணியினையும், உணவிலே தமிழ் மக்கள் சுயதேவையைப் பூர்த்திசெய்ய விவசாயத்திலே ஈடுபடச் செய்த பணியினையும் வேறு பல சமூகத் தொண்டுகளையும் மதுவிலக்குச் சருக்கம், பணிபல புரி சருக்கம் ஆகியவற்றிற் பரக்கக் காணலாம்.

சிவதொண்டன் சபை ஆதரவில் நடைபெற்ற பாதயாத்திரைகள் பற்றித் திருவடியுலாவிற் பாதயாத்திரைச் சருக்கம் நயம்பட நவில்கின்றது. கிழக்கே "கைதடி வேழமாமுகன் மேனிகொண்டருள் வீங்கு கோயிலில்" இருந்தும், வடக்கே "சுன்னையம்பதிக் கதிரைமாமலைத் தூய கோயிலில்" இருந்தும், 'மேற்றிசை தன்னில் ஆனைக்கோட்டையில் மூத்த நாயனுர்' கோயிலிலிருந்தும், தென்திசையில் மண்கும்பான் கோயிலிலிருந்தும் பாதயாத்திரை புறப்பட்டுப் பெண்களும் ஆண்களும் சிவதொண்டன் நிலையத்திற்குச் சென்றனர்.

இவ்வாறு சிவதொண்டு செய்து சிவநெறி காட்டி வாழ்ந்த சுவாமிகள், பசுவுக்கு உணவு கொண்டு சென்றபோது அதுவும் அவாவினுலே தூண்டித் தாவி

மேலே பாயக் கீழே வீழ்ந்தார். ஆங்கு தொடைப்பூட்டு நொந்தது கண்டு, அன்பர்கள் தூக்கி, வைத்திய நடைமுறையிற் சிகிச்சைகளும் செய்து நற்பணியும் புரிந்ததனை இறுதிச் சருக்கமாகிய திருவடி பெற்ற சருக்கத்தில் உள்ளம் உருகக் கூறுகின்றார்.

உணவுப் பொருட்டாப் பயிர்த்தொழிலும்
 உயிரோங் குறச்சிவ தொண்டனும்நல்
வணமா நிலவ வற்புறுத்துந்
 தீர்க்க தரிசன வளம்போற்றி
மணமும் மலரும் போலன்பர்
 மனத்துள் ளமர்குரு பதம்போற்றி
கணமார் அடியார்க் குறுதிபுகல்
 கருத்தும் வாய்மையும் போற்றிநிதம்

என ஆசிரியர் முடிக்கின்றார் இறுதிச் சருக்கத்தினை.

யோககசுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினை முழுமையாக ஆதாரத்துடன் செய்யுள் வடிவிற் கூறும் முதல் நூல் என்ற பெருமை சிவயோக சுவாமிகளின் திருச்சரிதம் என்னும் இந்நூலுக்குரியது. செந்தமிழ்ச் சிரோமணி, பண்டித வித்துவான் க. கி. நடராஜன் அவர்கள் பலவகையிற் சுவாமிகளுடன் மிக நெருங்கிப் பழகியவர்; அவரின் பேரன்புக்கு உரியவர்; அதனாலேயே இத்திருச் சரிதம் சுவாமிகளின் ஒளியிலே அமிழ்ந்தி அவர்களையே தன் நெஞ்சில் நிறைத்து அடியனான ஒரு கவிஞனின் இதயானுபவ உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைந்துள்ளது; படிப்போரின் உள்ளங்களிலும் அவ்வனுபவ உணர்வுகளைச் செம்மையாக ஏற்படுத்துகின்றது.

சுருங்கக் கூறின், சிவயோக சுவாமிகளின் புனித வரலாற்றினையும், அவர் சாதனைகளால் மானிட வாழ்வு வளம்பெற்ற வகையினையும் பல்வேறு இலக்கிய வடிவங்களில் அமைத்துக் கூறுகின்றது இந்நூல். இதுவும் ஒரு மனித மானிடப் பணியே. எமது நாட்டிலே எமது கண்முன்னே சீவன் முத்தராக வாழ்ந்து சமாதியடைந்த ஞானியின் சிறப்புக்களையும் செயற்பாடுகளையும் நயம்பட உணர்த்தும் பணி, நற்சிந்தனைகள் நம்மத்தியில் வளரவும் சிவதொண்டு செழித்தோங்கவும் உதவுமென்பதில் ஐயமில்லை.

இலங்கைப் பல்கலைக் கழகம்,
 பேராதனை வளாகம்,
 பேராதனை.
 14-5-74.

உ

சிவமயம்

சிவதொண்டன் சபைத் தலைவரும், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத் தலைவரும், மின், நீர்ப்பாய்ச்சனம், நிலப்பகுதி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகக் கடனாற்றி ஓய்வு பெற்றவரும் ஆகிய

## திரு. ம. ஸ்ரீகாந்தா O. B. E. அவர்களின்

# வாழ்த்துரை

இந்நூற்றாண்டில் சிவன்முத்தரும் சித்த புருஷருமாய் மக்கள் மத்தியிலே வாழ்ந்து, அவர்களுடைய நலனில் மிகவும் பரிவு காட்டி, தம்மை வந்தடைந்தார்க்குப் புகலிடமாய்க் கற்பகதருவாய்த் திகழ்ந்தவர்கள் கொழும்புத்துறைச் சுவாமிகள். அவர்களுடைய அருள் நோக்கைப் பெற்ற பாக்கியசாலிகள் பலர். அவர்களுள் வித்துவான் க. கி. நடராஜனவர்கள் ஒரு சிறந்த இடத்தை வகித்துள்ளார்கள். அவர்கள் இளம்பிராயத்திலேயே சுவாமிகளின் கருணைக்குப் பாத்திரராகிப் பொதுக் கல்வித்துறையிலும், புராணபடனம், திருமுறை ஓதல், ஆராய்ச்சி முதலியவற்றிலும் சுவாமிகளால் ஆற்றுப்படுத்தப்பட்டவர்கள். அடியார்கள் உய்யும் வண்ணம் நற்சிந்தனையையும், நல்ல சமயக் கட்டுரைகளையுந் தாங்கி வெளிவரும் "சிவதொண்டன்" பத்திரிகையை ஆரம்பிக்கச் சுவாமிகள் திருவுள்ளங் கொண்டபோது, திரு. நடராஜனவர்களிடமே அந்த மகத்தான பொறுப்பை யளித்தார்கள். இதனால், சுவாமிகளை அடிக்கடி தரிசிக்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது. சிவதொண்டன் இதழில் ஆசிரியர் கூற்றாக வெளிவந்த கட்டுரைகளுக்குரிய தலைப்புக்கள் சுவாமிகளாலேயே கொடுக்கப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

"சுவாமி சரிதம்" என்னும் நூல் காவியச்சுவை பொருந்திய தூய சரித்திர நூலாக ஆசிரியரால் இயற்றப்பெற்றுள்ளது என்பதை அதனைப் படிப்போரனைவரும் நன்குணர்வர். "சுவாமி புகழ்" அன்பினாற் கசிந்து சுவாமிகளின் கருணையை நினைந்து பாடிய உயர்ந்த தத்துவக் கருத்துக்களையுடையது; இனிய தமிழில் உள்ளத்தைக் கவரக்கூடிய சக்தி வாய்ந்த பாடல்களைக் கொண்டது. சுவாமி புகழைச் சுவாமி ஆற்றுப்படை என்று கூறுவது மிகவும் பொருந்தும். சுவாமிகளின் திருவடிகளிற் சமர்ப்பித்த இந்த இன்பமாலையையும் சுவாமி சரிதத்தையும் படிப்பவர்கள்,

"குருபக்தியே பெரும் பேறு
கொண்டாடிக் கொண்டாடி ஆறு"

என்று உணர்ந்து உணர்ந்து பெரும்பயன் அடைவார்கள் என்பது திண்ணம். வாழ்க ஆசிரியர். வாழ்க அவர் தந்த இந்த அரிய நூல்கள். வாழ்க இவ் வையகம்.

'ஸ்ரீ மனை',
பலாலி வீதி,
கோண்டாவில்,
14-5-74.

உ

சிவமயம்

# முன்னுரை

சுவாமி புகழ் என்னும் சிவயோக சுவாமிகள் புகழ்ப் பாமாலையும் சுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் சிவயோக சுவாமிகள் பிள்ளைத்தமிழும் எங்கள் ஞான குரவராகிய சிவயோக சுவாமிகள் திருவருட் குறிப்பின்வழி நின்று பாடப்பெற்றவையாகும். இவற்றைச் சுவாமிகள் இருந்த காலத்திலேயே அவர்கள் செவிமடுத்தருள அவர்கள் திருமுன்னிலையிற் படித்துக் காட்டும் பேறுபெற்றனன். இவற்றுட் சுவாமி பிள்ளைத்தமிழை 1969 ஆம் ஆண்டில் யாழ்/கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகத்தார் தமது மூன்றாவது வெளியீடாக வெளியிட்டனர். அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

சுவாமிகள் மகா சமாதியெய்தியபின், சுவாமிகள் திருச்சரிதம் ஒன்று செய்யுள் வடிவில் அமைய வேண்டுமென்ற திருக்குறிப்பு உண்டாக, நண்பர்களும் அதை விரும்ப, 1967ஆம் ஆண்டிலிருந்து திங்கள்தோறும் சிவதொண்டன் நிலையத்தில் நடைபெற்றுவரும் யாகநாட்கள் என்றழைக்கப்படும் தியான நாட்களிற் பகுதி பகுதியாக இந்நூலைப் பாடி வரலானேன். இது சுவாமிகளைத் தியானிப்பதற்கு ஒரு நல்ல சாதனையாக அமைந்தது இப்பாடல்களைச் சிவதொண்டன் நிலயத்திற் பாடிவருங்கால், ஒரு நாள் தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. கனகராயரவர்களின் வாழ்க்கைத் துணைவியாரும், தமிழறிந்த குடும்பத்தைச் சேர்ந்தவரும், தமிழிற் கட்டுரைகளை எழுதுதல், சொற்பொழிவுகளை நிகழ்த்துதல், பாக்களை யாத்தல் ஆதியன கைவந்தவரும் ஆகிய திருமதி அருந்தவநாயகி கனகராயரவர்கள் என்னை நோக்கி, "இது நல்லாயிருக்கிறது. சிறு வயசிலிருந்தே சுவாமிகளோடு நெருங்கிப் பழகிய நீங்கள், அவர்களை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதுபோன்று பாடியிருக்கிறீர்கள். சரித்திரத் தூய்மையை இந்நூலின்கண்ணே காண்கின்றேன். இதை வெளியிடுவது சமயத்துக்குந் தமிழுக்குஞ் செய்யும் பெருந்தொண்டாகும். இதனை அச்சிடும்போது என்னையறியாமல் அச்சிடாதீர்கள்" என்று சொன்னார்கள். யான் பள்ளிச் சிறுவனாக இருந்த காலந்தொடக்கம் அவர்கள் சுவாமிகளிடம் வருவதை அறிவேன். சுவாமிகளிடம் உறுதியான பக்தியும் ஈடுபாடும் உடையவர்கள். இதனை அச்சிடுதற்குரிய செலவுக்குத் தாம் உதவ வேண்டுமென்பதே அவர்கள் நோக்கமாகும் என்பதை ஊகித்துக்கொண்டேன். திருவருள் கைகூட்டும்போது நூல் அச்சாகுந்தானே, அதற்கு இப்போது என்ன அவசரம் என்று கருதியவனாய், அதைப்பற்றிய சிந்தனை எதுவுமின்றியிருந்தேன். சில ஆண்டுகள் கழிந்தன. சென்ற 1971 ஆம் ஆண்டு மலேசியா, சிங்கப்பூர் ஆதியாம் இடங்களில் அங்குள்ள அன்பர்களின் விருப்பத்திற்கிணைந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துதற்காகச் சென்றிருந்தபோது, அங்கு யான் தங்கியிருந்த இல்லத் தலைவரும், தமிழறிஞரும், உத்தியோகத்தினின்று ஓய்வு பெற்றிருப்பவரும் செல்வந்தருமாகிய திரு T. சிவப்பிரகாசம் S. M. A., P. J. K., M. B. E., O. St. J. அவர்கள் இந்நூலை ஆங்குத் தாம் அச்சிடுவிக்கும் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். "இந்நூலை யாழ்ப்பாணத்தில் அச்சிடுதற்குச் சில அன்பர்கள் விரும்பிக் கேட்டுள்ளார்கள். மலேசியாவில் அச்சிடுதற்குச் செலவுஞ் சிரமமும் அதிகமாகும். அச்சுத்தாள்களை நோக்கி ஒப்பிட்டுப் பிழைகளைத் திருத்துதல் முதலியவற்றிற்குப் போதிய அவகாசமும் வாய்ப்பும் யாழ்ப்பாணத்திற் கிடைக்கும். இந்நூல் இப்போதே அச்சிடப்பட வேண்டு

மென்ற அவசரமும் இல்லை. ஆறுதலாக அச்சிடுவோமே" என்று யான் கூறியதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். மலேசியாவிலிருந்து திரும்பி வந்தபின், சென்ற ஆண்டுக் கடைசியில் டீ அம்மையாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. நோய்வாய்ப்பட்டிருக்கும் அவர்கள தாம் இந்நூலை விரைவில் அச்சிடுவித்துக் காண விரும்புவதாகவும் அதற்குரிய முயற்சிகளைச் செய்யுமாறும் கேட்டு அவர்கள் எழுதியிருந்தார்கள். இந்நூலை அச்சிடுவிப்பதில் அவர்களுக்கிருந்த ஆர்வத்தை, சாம்பியாவில் ஆசிரியராகக் கடனாற்றிவரும் அவர்களது பேரனாகிய திரு. க. ஜனநாயகம் B. Sc. அவர்களுக்கு, அவர்கள எழுதிய கடிதத்திலிருந்து யான் அறியக்கூடியதாயிருந்தது. நூல் வெளியாவதற்குரிய திருவருட் குறிப்பு இதுதான்போலும் என்று கருதி, அச்சிடுவித்தற்குத் தொடங்கினேன். சுவாமி சரித்தத்தை மட்டும் தம் செலவில் அச்சிடுவதென்றும், மற்றையவற்றுக்குரிய செலவை என் பொறுப்பில் விடுவதாகவுங் கூறி, அதற்குரிய பணத்தையுந் தந்தார்கள். தமிழ் வளர்ச்சியும் சமய வளர்ச்சியுங் கருதிய அவர்களுடைய உள்ளத்துக்கு என் நன்றியறிதலை முதற்கண் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்கு இறைவன் எல்லா நலன்களையும் அருள்வாராக.

நூலை அச்சிடுவிக்கத் தொடங்கிய யான் பண்டிதமணி, வித்துவான் ந. சுப்பையபிள்ளையவர்களிடம் காட்டி, அதனைப் பார்வையிட்டுதவுவதோடு சிறப்புப் பாயிரமுந் தருமாறு வேண்டிக்கொண்டேன். பல வேலைகளின மத்தியில் சிரமத்தைப் பாராது அவர்கள் நூலைப் பார்வையிட்டுதவியதோடு சிறப்புப் பாயிரமுந் தந்தார்கள். அவர்களுக்கு என் மனங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, நாவலர்பெருமானுடைய மரபும் புகழும் பணியும் என்றும் நின்று நிலவ அயராது உழைத்து வருபவரும் முன்னைநாள் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைப் பேராசிரியராய் ஓய்வு பெற்றிருப்பவரும் ஆகிய சித்தாந்த சாகரம், பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளையவர்களிடம் ஒரு சிறப்புப் பாயிரங் கேட்டேன். போதிய உடல்நல மில்லாதிருந்தும், அதனையும் பொருட்படுத்தாமல், உடனேயே ஒரு சிறப்புப் பாயிரம் அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியுரியதாகும். இவ்வாறே இளமையிலிருந்தே என்பால் அன்புகாட்டி வந்தவரும், சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்களின் மகனாரும் ஆகிய திரு கு. அம்பலவாணபிள்ளையவர்களும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த என் கெழுதகை நண்பராகிய புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்களும், கொழும்பில் வதிந்து தமிழ்ப் பணி புரிந்து வருபவரும், ஆண்டுதோறும் சிவதொண்டன் மலருக்கு வாழ்த்துப்பா வழங்கி வருபவரும் ஆகிய புலவர் சிவ. கருணாலயபாண்டியனாரவர்களும், இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கெழுதகைமை வாய்ந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் M. A., Ph. D. அவர்களும், எங்கள் சிவதொண்டன் சபைத் தலைவரும், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத் தலைவருமாயிருந்து பணிபுரிந்துவரும திரு. ம. ஸ்ரீகாந்தா O. B. E. அவர்களும் பேரன்போடு சிறப்புப் பாயிரங்களும், சான்றுச் செய்யுள்களும், அணிந்துரைகளும், வாழ்த்துரைகளும் வழங்கி இந்நூலைச் சிறப்பித்துள்ளனர். இப்பெரியாரனைவர்க்கும் என் அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்நூல் சம்பந்தப்பட்ட அளவில் நல்ல உசாத்துணைவராக இருந்தவரும், அச்சுத்தாள்களைப் பார்த்துப் பிழை திருத்துவதில் உதவியாயிருந்தவருமாகிய ஆசிரியர் திரு. அ. செல்வத்துரையவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியுரியதாகுக.

இந்நூலைப் பத்தி சிரத்தையோடு அச்சிட்டுதவிய சாந்த குணசீலராகிய ஸ்ரீ சண்முகநாத அச்சக அதிபர் திரு. சி. ச. குமாரசுவாமி அவர்களுக்கும் அவ் வச்சகத்தைச் சேர்ந்த அலுவலாளர்களனைவர்க்கும் என் நன்றியுரியதாகுக.

இந்நூலை அழகுபெறச் செய்தற்குச் சுவாமிகளின் திருவுருவச் சித்திரத்தைக் கொண்ட வெளியுறைச் சித்திரத்துக்குரிய படிவ அச்சை (Block) அச்சமுத்தியும் சுவாமிகளின் நிழலுருவப் படத்தை அச்சமுத்தியும் அன்பளிப்பாக உதவிய கொழும்பு மெய்கண்டான் அச்சக அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி அவர் களுக்கும், அவர்களது சைவ, தமிழ்ப் பணிகளுக்காக என் நன்றியறிதலைத் தெரி வித்துக்கொள்ளுகின்றேன்.

சுவாமி புகழ் என்னும் நூலில் இன்னும் பல செய்யுள்கள் உள. அவற்றை யுஞ் சேர்த்து அநநூலை ஒரு தனி நூலாக அச்சிட எண்ணியிருந்தேன். அவ்வாறு செய்தற்கு இக்காலத்து உண்டாகும் அச்சுச் செலவின் அதிகரிப்பை நினைந்தும், ஆயின் அவற்றுட் சிலவற்றையேனும் இப்போது இந்நூலோடு சேர்த்து வெளி யிடுவதை விரும்பிய நண்பர்களின் விருப்பத்துக்கமைந்தும், அவற்றுட் சிலவற்றை மட்டும் இங்கு வெளியிடலானேன். அப்பாடல்களின் கீழ்க் குறிக்கப்பெற்றுள்ள திகதிகள் அவ்வப் பாடல்கள் பாடப்பெற்ற திகதிகளைக் குறிக்கும். சமயம் வாய்க்கும்போது ஏனைய பாடல்களையுஞ் சேர்த்து ஒரு தனி நூலாக இதனை வெளியிடலாமென்பது அடியேனது கருத்து. திருவருள் கூட்டிவைக்கும்போது அது நிறைவேறுவதாக. உரையில் சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம் ஒன்று அமையவேண்டுமென்று விரும்பிய நண்பர்களது விருப்பத்தை நிறைவேற்றச் சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கத்தையும் எழுதிச் சேர்த்துள்ளேன். இந்நூலைச் சுவாமிகளின் திருவடிப்போதுக்குச் சாத்தும் அன்புத் தமிழ்ப் போதாக — காணிக்கையாக — சமர்ப்பிக்கின்றேன். குற்றங் களைந்து குணமெடுத்துக்கொள்ளு தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

இப்போது இந்நூல் சிறப்புற வெளிவருதற்குத் தோன்றாத் துணையாக இருந்த திருவருளுக்கும், பல்வேறு வகையில் உதவியாக இருந்த அனைவர்க்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்து முடிக்கின்றேன். வணக்கம்.

சிவயோக சுவாமிகள் திருவடி வாழ்க.

இங்ஙனம்,
அன்பன் க. கி. நடராஜன்

''யோகபவனம்'',
பொன்னப்பா வீதி,
வண்ணார்பண்ணை,
18-5-74.

உ

சிவமயம்

# சிவயோக சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்

மேகம் வரக்கண் டுளங்களித்து விரிக்குந் தோகை மயிலாடப்
பூகம் மகிழ்ந்து தண்டரளம் பொழியுங் கொழும்புத் துறையதனில்
ஏக முனிவ ராய்த்திகழ்ந்தெம் இடர்கள் களைந்தே யாட்கொண்ட
யோக குரவன் திருவடியென் இதயத் தலத்தில் ஓங்கிடுமே.

## நாடும் நகரும்

பொன்னுலகத்துள்ள பூந்தண் சோலையே அவ்விடத்தை விட்டு இவ்விடம் வந்து பொருந்தியதோ என்று சொல்லத்தக்க அழகோடு விளங்குவது ஈழநாடு. மலைவளனும் யாற்றுவளனும் நிலவளனும் கடல்வளனும் பொருந்திய இத்திரு நாட்டினிடத்தே (இதன் விரிவை நூலுள் திருநாட்டுச் சிறப்பின் கண்ணே காண்க) வேலவன் விரும்பியுறையும் கதிரைமலையும், ஆளுடைப்பிள்ளை ஆளுடை நம்பிகள் என்னும் சமயாசாரியர் இருவர் அருளிய தேவாரத் திருமுறைப் பாடல்கள் பெற்ற திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்னுந் திருத்தலங்களும் விளங்கும்.

இயற்கை வளனோடு தெய்வத்தன்மையும் பொருந்தி விளங்கும் இவ்வீழத் திருநாட்டில், முன் அணியில் வைத்து எண்ணத்தக்க நகர் யாழ்நகராகும். கலப்பை போன்ற வடிவத்தையுடைய இந்நகர் ஈழமாகிய திருமகளின் சிரமெனத் திகழ்வது. யாழ்ப்பாணனோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் யாழ்ப்பாணம் என்னும் பெயரையுடையது. தேவருலகத்தில் வேண்டியதெல்லாங் கொடுக்கும் கற்பகதரு ஒன்று உண்டென்பர். அதுபோல இங்குள்ள பனஞ்சோலைகள் அக்கற்பகதருவைப்போல மக்கள் விரும்பிய பொருள்களெல்லாந் தந்துதவும். கீரிமுகம் மாறி மனிதமுகம் பெற்ற நகுலமுனிவர் தீர்த்தமாடித் தவஞ்செய்த இடமாகிய கீரிமலை இங்கு ஒருபால் உளது; மாருதப்புரவீகவல்லி என்னும் வனிதையின் மா (குதிரை) முகம் மாறி அவள் பேறுபெற்ற மாவிட்டபுரமும் ஒருபால் உளது. செல்லப்ப சுவாமிகள் வாழ்ந்த ஊரும், பண்டு ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த ஊரும், தமிழ மன்னரது பழைய தலைநகராய் விளங்கிய ஊரும், குன்றமெறிந்த குமரக்கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள ஊரும், நாவலர் பெருமான் பிறந்த ஊரும், அவர்தம் ஞாபகச் சின்னமாக நடுசிலை மிளிரும் ஊரும் ஆகிய நல்லூரும் இதன் ஒருபால விளங்கும். இந்துக் கல்லூரி, மத்திய கல்லூரி ஆதியாம் பல கல்லூரிகளும் அவற்றிற போதிக்கும் போதிப்பும் இவ்வியாழ்ப்பாணத்தின் சிறந்த தொழில் கல்வித் தொழில்கொலோ என்று ஐயுற்று ஏழுலகத்தவரும் வியக்க விளங்குவது இந்நகர். இன்னும், யாழ்நகரின் இதயம்போன்று எங்கணும் அருள் பரப்பி இசையோடு தம்மைப் பாடும் அன்பர்களுக்கு வாழ்வை அளிக்கும் தையல்நாயகியும் வைத்தியேஸ்வரனும் கோயில் கொண்டருளியுள்ள வண்ணை நகரும் ஒருபால் உளது. கடைவீதிகளும் கோட்டையும் பூங்காவும் திறந்த வெளியரங்கும் நீதிமன்றங்களும் வைத்தியசாலைகளும் ஒருபாற்றிகழும். கோட்டையின் காவற்றெய்வம்போன்று விளங்கும் முனியப்பர் கோயிலும், நூல்கலைத்

PUBLIC LIBRARY
JAFFNA

தேட்டமாய்ச் சேர்த்து வைத்துள்ள சிறந்த நூலகமும், கூட்டுறவாளர் கண்ட வீரசிங்கம் மண்டபம் எனப் பெயரிய மண்டபமும் ஒருபால் உள்ளன. பெரிய கடை, சின்னக்கடை, மாநகரசபை மண்டபம் முதலியன ஒருபாலும், திருவேங்கடேசப் பெருமாள் கோயில் கொண்டுள்ள பெருமாள் கோயில் ஒருபாலும், இராமன் வில்லூன்றிய தலம் எனப்படும் வில்லூன்றி ஒருபாலும் ஆக இங்கே விளங்கும்.

இன்னோரன்ன பல சிறப்புக்களையுடைய யாழ்நகரின் தென்றிசையில் முன்னாளிலே கொழும்பு செல்வோர் மரக்கலங்களில் ஏறிப் பயணஞ்செய்யுந் துறைமுகமாகிய காரணத்தால் கொழும்புத்துறை எனப் பெயர்பெறும் அரிய ஊர் விளங்குகின்றது. இவ்வூரில் தாளாண்மைமிக்க வேளாண்குலத்தைச் சேர்ந்த அம்பலவாணர் என்னும் அருந்தவச் செல்வன் வாழ்ந்தார். அவர் தொழில் சம்பந்தமாக இங்கே வாழ்ந்தாரேனும் அவருடைய மூதாதையர் பெற்றோர் சுற்றத்தவரனைவரும் கந்தவேள் குடிகொள்ளும் மாவிட்டபுரத்தைச் சனனவூராகக் கொண்டவராவர். திரு. அம்பலவாணர் அவர்கள் மாவிட்டபுரத்தில், "பொன்னிகர் பொற்பும் சாலி பொருவிடுங் கற்பும்" பூண்ட சின்னாச்சியம்மையாரைத் திருமணஞ் செய்தார். அவர் ஐம்புலத்தாரோம்பி இல்லறமாகிய நல்லறத்தை நடாத்தி வந்தார்.

## திருவவதாரமும் இளமைப் பருவமும்

வருங்கால், ஒரு தவப்புதல்வனைப் பெற விரும்பிச் செஞ்சடையானையும் கஞ்சமலர்ச் சரவணப் பொய்கையில் உற்பவித்த கந்தவேளையும் வேண்டி நின்றனர். அவர்கள் செய்த தவப்பயனும், அவனியுளோர் செய்த தவப்பயனும், ஈழவள நாடு செய்த இருந்தவப்பயனும், எம்மனையார் செய்த பெருந்தவப்பயனும் ஒன்றாகிச் சின்னாச்சியம்மையார் திருவயிறு வாய்க்கப் பெற்றார். ஞாயிறு முதலாகிய கோள்கள் நலனுற்று வலிபெற்று நிற்க, 1872 ஆம் ஆண்டு மே மீ 29 ஆந் திகதிக்குச் சமமான ஆங்கிரச ஆண்டு வைகாசித் திங்கள் பதினெட்டாம் நாளாகிய புதன்கிழமையன்று காலையில் அவிட்டத் திருநாளில் சைவமுந் தமிழுந் தழைக்க, நிறைசாந்தம் தலையெடுப்ப, அடியவர்கள் மனங்களிக்க, அருந்தவப் புதல்வன் அவதாரஞ் செய்தார். நற்சகுனங்கள் காணப்பட்டன. பெற்றோரும் உற்றோரும் பெருமகிழ்வெய்தினர். நாமகரணம் முதலிய சடங்குகளைச் செய்தார்கள். நலம் பாராட்டித் தாலாட்டினார்கள். முறைமுறை பருவந்தோறும் ஐயன் செங்கீரையாடியும், சப்பாணி கொட்டியும், தவழ்ந்தும், கண்மணி வருகவென்று மகளிரும் ஆடவரும் மகிழ்ந்தழைக்கத் தளர்நடை கொண்டருளியும், தகவினில் ஓடியாடியும், சிறுமியர் சிற்றில் சிதைத்தும், சிறுதேருருட்டியும் வளர்பிறைபோல வளர்ந்து வருவாராயினர். ஐந்தாம் ஆண்டுப் பருவத்தை யடைந்தார். கலைபயில் பருவம் உற்றதும், கொழும்புத்துறையில் உள்ள தமிழ்ப் பாடசாலையில் வித்தியாரம்பஞ் செய்து தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார்.

யோகநாதர் இளம் பருவத்திலேயே தமது அருமைத் தாயாரை இழந்தார். அவரது தந்தையாரும் மஸ்கேலியா என்னும் இடத்தில் வர்த்தகம் நிகழ்த்தி வந்தமையால், சிறிய தந்தையாராகிய சின்னையா அவர்கள் கொழும்புத்துறையில் தமிழ் கற்றுவந்த யோகநாதரை யாழ்ப்பாணம் செம்பத்திரிசியார் (St. Patrick's College) கல்லூரியில், ஆங்கிலக் கல்வி கற்பதற்காகச் சேர்த்தார். இதற்கிடையில் யோகநாதர் தமது அருமைத் தந்தையாரையும் இழந்தார். யோகநாதர் தமது தந்தைவழி மாமியாராகிய முத்துப்பிள்ளையவர்களுடைய இல்லத்தில் தங்கி

லிருந்து ஷெ கல்லூரிக்குச் சென்று கல்வி கற்று வந்தார். அப்பரடிகளின் தமக்கையாராகிய திலகவதியார் போன்ற பத்தியிற் சிறந்த முத்தம்மையார் இவரை அன்போடு பராமரித்து வந்தார். இவ்வாறு ஆங்கிலமுஞ் செந்தமிழும் அடைவு பெறக் கற்றதன்பின், ஓர் உத்தியோகம் பெறுதற்குரிய பருவத்தை எய்தினார். அக்காலத்தில் இரணைமடுக் குளக்கட்டுத் திட்டத்தை ஆங்கில அரசாட்சியார் ஆரம்பித்தார்கள். காடுகொன்று நாடாக்கிக் கவினுறுநற் குளந்திருத்தி வளம் பெருக்க அமைந்த இத்திட்டத்தின் வேலைகளை மேற்பார்வை செய்தவர் திரு. பிரவுன் என்னும் ஆங்கிலேயர் ஆவர். இவர் யோகநாதரைப் பொருட்காவலர் (Store - keeper) ஆகத் தெரிந்தெடுத்தார். ஆங்கு அவர் கடனாற்றிய காலத்தில், யோகநாதருடைய பண்புகளை அவதானித்த திரு. பிரவுன் அவரைக் 'கடவுள் மனிதன்' (God - man) என்று அழைப்பாராம். யோகநாதர் கிளிநொச்சியிற் கடமையாற்றிய காலத்து நாட்டிய மாமரம் ஒன்று இன்னும் அங்கு நின்று நறுங்கனியுதவி வருகின்றது. இம்மரத்தைச் 'சுவாமியார் மரம்' என்று மக்கள் அழைப்பர்.

## சற்குருவைச் சார்தல்

முட்டாத சிறப்புடைய வட்டுக்கோட்டையிலிருந்து நல்லூரிற் குடியேறி வயல்களிற் பயிர்செய்து வாழ்ந்த வேளாண் குடியைச் சேர்ந்த வல்லிபுரம் என்பார் பொன்னார் என்னும் பெண்ணை மணஞ்செய்து வாழ்ந்து வருங்கால், அவருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களுள் முதன் மகவாய்ப் பிறந்த செல்லப்பர் என்னுஞ் சிரியோர் யுவனாகி அரசாங்கச் சேவகஞ் செய்து வந்தார். இவர் முன்னை நல்வினை வந்து கைகூட்ட இறைவனருளால் உலக பந்தத்தை விட்டு ஞானியாகி வாழ்ந்தார். இவர்தம் நிலையையறியாதார் இவரை 'விசர்ச் செல்லப்பர்' என்று அழைத்தனர். இவர் பிச்சையேற்றுண்பதும் நிட்டை கூடுவதுமாய் விளங்கினர். நிட்டை கலைந்த நேரங்களில் விசிறிகளை விசித்திரமாக அமைப்பர். வெகுதூரம் நடப்பர். நல்ல கறியுஞ் சோறும் பாகஞ் செய்வர். தம்மோடு தாம் போராடிக்கொண்டு அவற்றை உண்பதற்குப் பதிலாகப் பானை சட்டிகளைத் தடியால் அடித்து உடைப்பார். புத்தகத்தைத் தலையணையாக வைத்துக்கொண்டு தாம் இழைத்த பன்னாங்கின்மீது துயில் கொள்வார். கந்தைச் சீலையை விரும்பி யுடுத்துக் கொள்வார். தம்மை அன்போடு அணுகுவோரைக் கசிவில்லாதவர் போலக் கனன்று பேசுவார் சித்து வித்தைகளை இகழ்வார். இவர் பெருஞானி என்பதைச் சிலரே அறிந்திருந்தனர். முனியப்பர் கோயிலுக்கும் கொழும்புத்துறைக்கும் இவர் அடிக்கடி செல்வர். ஏதேதோ தம்முள்ளே முணுமுணுத்துக்கொள்ளுவர். இத்தகைய ஞானியின் பெற்றியை யோகநாதர் ஆய்ந்து, அவர் பெரியார் என்பதை உணர்ந்தார். பழைய தவம் வந்து கைகூடச் செல்லப்ப முனிவரை இடையிடையே யணுகி வரும் பேறுபெற்றார். எஞ்ஞான்றும் சிவசிந்தனையில் ஈடுபடுஞ் செல்வரானார். தம்முடைய உத்தியோகத்தையும் உதறித்தள்ளிக் குருவையடையத் துணிந்தார். செல்லப்ப முனிவரிடஞ் சென்றார். அவர்முன் சென்றதும் பரவச நிலையடைந்தார். செல்லப்ப சுவாமிகள், "நீ ஆரடா?" என்று அதட்டி, "உன்னுள்ளே பாரடா!" என்றும், புன்முறுவலோடு "உள்ள பற்றெல்லாந் தீரடா!" என்றுங் கூறினார். சீடராகிய யோகநாதரின் பக்குவம் நோக்கித் தீட்சையுஞ் செய்தருளினார். எப்போதோ முடிந்த காரியம்; நாமறியோம்; ஒரு பொல்லாப்புமில்லை, முழுதும் உண்மை, என்னும் நான்கு மகாவாக்கியங்களை யோகநாதருக்கு உபதேசித்தார். சீடராகிய யோகநாதர் விரமுற்றனர் பந்தம் யாவும் நீங்கப்பெற்றனர். அதைச் சொல்லுதல் எம்மால் எளிதோ? இன்னும் வியப்பதற்கொன்றும் இல்லை. "உயக்கொளும் உண்மை

ஈது உணருதி'' என்றும் ஞானகுரவராகிய செல்லப்பர் நயப்புடன் மொழிந்தார். ஆமை, மீனினம், கோழி ஆகிய இவை தத்தம் முட்டையை முறையே நினைந்தும் நோக்கியும் தழுவியும் உருப்பெறச் செய்வதுபோல, அருட்குரவனும் ஆன்மபோதங்கெட அருள் ஞானந்தானும் தன்மையை யோகநாதர் அடையுமாறு செய்தருளினர். யோகநாதரும் குரவரின் பாதபங்கயம் பணிந்து திரிதரு குருவின் நிழலெனத் திரிந்தார். ''மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம் பழித்த தொழித்து விடின்'' என்ற வள்ளுவர் வாக்குக் கமையத் தூய வெள்ளாடையே தரிப்பவராய், வேடங்களை விரும்பாதவராய்க் குருகுறிப்பறிந்து, இடம்பங்களை ஒழித்து, மெய்ப்பொருள் ஓர்வாராயினர் ''உவரோர் பித்தரோ'' என்று சிலர் யோகநாதரைக் குறித்து உரையாடுவாராயினர். யோகநாதரோ குரவன் போமிடங்கள் தோறும் அவர் பின்னே போவார். பிச்சை கிடைத்தால் உண்பார் மழையும் வெயிலும் பசியும் உடற்றினும் அவற்றைப் பொருட்படுத்தாமற் கடுநடையாய் இருவரும் நடப்பார்கள். செட்டிமாரது கடைகளுக்கு முன்னே போய்ப் பிச்சை கேட்டு நிற்பார்கள். ஏதோ எண்ணங் கொண்டவர்கள்போல அங்கிருந்து கீரிமலைக்கு நடப்பார்கள். குளிருந் தீர்த்தம் ஆடாமலே ஆடி விட்டோம என்று கூறிக்கொண்டு திரும்புவார்கள். இவ்வாறு அவர்கள் ஆடலோ பலவாம்.

## துறவு பூணல்

இவ்வாறு எங்கள் யோகநாதர் ஆன்மீக வளர்ச்சியில் முன்னேற, செல்லப்ப சுவாமிகள் அவரைக் கண்ணை இமை காப்பது போலக் காத்து வந்தார். செல்லப்ப சுவாமிகளுக்குச் சீடராக மற்றொருவரும் இருந்தார். அவர் பெயர் கதிரவேலு என்பது. ஒருநாள் யோகநாதர் நல்லூருக்குச் சென்று குருதேவனைத் தரிசித்தபின், சோயிற்றேர் முட்டியின் மேற்படியில் தியானத்தமர்ந்திருந்தார். அந்தப்படியில் கதிரவேலுவுந் தியானத் தமர்ந்திருந்தார். இரவு பகலென்ற வேற்றுமையின்றிப் பல நாட்கள் இருவருந் தியானத் தமர்ந்திருக்க, இவர்களிருவரையும் செல்லப்ப சுவாமிகள் இடையிடையே போய்ப் பார்த்து இவர்கள் தியானத்துக்கு இடையூறு நேராவண்ணம் பாதுகாத்து வந்தார். இவ்வாறு இருவரும் பல நாட்களாகத் தியானத்தி லமர்ந்தபின், இவர்களுடைய நிலையைக் கண்டு மகிழ்ந்து யோகநாதரைப் பிச்சையெடுக்கும்படி செல்லப்ப சுவாமிகள் பணித்தார். யோகநாதரும் துறவில் நிலைத்தோர்க்குத் துணையாக அமைந்த சாதனை பிச்சை யெடுத்தலாம் என ஓர்ந்து நல்லூரை விட்டுக் கால்நடையிற் கதிர்காமஞ் செல்லப் புறப்பட்டுக் காடும் மலையுங் கடந்து சென்று கதிர்காமத்தையடைந்தார். மலையின் மருந்தாய் மந்திர வடிவாய் அமைந்த கதிரையில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானைப் பணிந்து துறவியாகவே வாழ்ந்தார். இதற்கிடையிற் சில திங்கள் செல்ல யோகநாதரைக் காணாத சுற்றத்தவர் செல்லப்ப சுவாமிகளிடஞ் சென்று, ''நம் யோகநாதர் எங்கே?'' என்று கேட்டார்கள். ''யோகநாதன் செத்தே போனான்'' என்று அவர் பதிலிறுத்தார். ''நனவிற் கனவில் உலகொழுக்கம் நனி செத்தான்'' என்னும் நுட்பத்தை அறியமாட்டாத அச்சுற்றத்தவர் அவர் இறந்தேவிட்டார் எனக் கருதி மடிந்தார்க்குச் செய்யும் கடன்களெல்லாஞ் செய்தார்கள். பின்னர் யோகநாதர் கதிரையினின்று யாழ்ப்பாணந் திரும்பிய பின்னரே உண்மையை உணர்ந்தார்கள்.

25512

## ஆச்சிரமம்

துறவறத்தை மேற்கொண்ட யோகநாதர், கொழும்புத்துறைச் சுவாமியார் வீதி கொழும்புத்துறை வீதியைச் சந்திக்கும் சந்தியில் உள்ள இருப்பைமரத்தடி

யில் உட்கார்ந்திருக்கும் வழக்கத்தை மேற்கொண்டார். இவ்விருட்சத்தின் அயலில் நன்னியர் என்னும் ஒருவர் ஒரு கடை வைத்திருந்தார். செல்லப்ப சுவாமிகள் அக்கடைக்குப் போவதுண்டு. சிலகாலஞ் சென்றபின் நன்னியர் அக்கடையை விட்டுப் போகவே அது வெற்றிடமாயிற்று. அக்குடிசையில் யோகநாதர் சென்று தங்கித் தவத்தினில் வைகினர். அன்று தொட்டு அக்குடிசை அன்பர்கள் வந்து சுவாமிகளை (யோகநாதரை)த் தொழும் பரிசுற்றது. ஆச்சிரமத்தின் அமைதி யெலாம் ஒளிரப்பெற்றது. ஈச்சுரன் கோயிலை ஒத்தது. அன்பர்கள் சென்று வழி பாடுஞற்றி வந்தார்கள். சுவாமிகளும் அவர்களுக்கு ஆசி நல்கி, ஆவன உணர்ந்து கருணைபாலித்து வந்தார்கள். கடிவதற்குரியாரைக் கடிந்தும் அருள் வழங்கி வந்தார்கள். "ஒரு பொல்லாப்பும் இல்லை. புவனம் இறைவனது ஆடரங்கு; கொல்லாமை கள்ளாமை கொண்டு வாழுங்கள். நல்லார்கள் மத்தியில் நாடி யிருங்கள். இஃது எல்லாரும் வாழ்வதற்கு இனிய வழியாகும்" என்பன போன்ற இன்னுரைகளை வழங்கினார்கள். இதனை அறிந்தோர் சொல்ல, அவர் வாய்க் கேட்டறிந்து செல்வர் வறிஞர், உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஆடவர் மகளிர், முதியோர் இளைஞர் ஆகிய பலர் அங்கு சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். வந்தவர்களுக் கெல்லாம் அவரவர் குறையறிந்து, சுவாமிகளும் அருள்புரிந்து வருவாராயினர். சிலரைக் கடிந்து திருத்துவது முண்டு.

## செல்லப்ப சுவாமிகள் சிவபதம் எய்தியமை

கிறித்தாப்தம் 1910 ஆம் ஆண்டில் செவ்வேள் ஆலயத்தின் தேரடியில் யோகநாதருக்குத் தீக்ஷை யுபதேசஞ் செய்தருளிய செல்லப்ப சுவாமிகள் சில ஆண்டுகள் கழிந்தபின், ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டில் பங் குனித் திங்களில் அச்சுவினி நாளில் நல்லோர் மதித்து வழிபட, நல்லூரிற் சமாதி யடைந்தார். செல்லப்ப சுவாமிகள் நோய்வாய்ப்பட்டதை அறிந்த யோக சுவாமிகள் அவரைப் பார்ப்பதற்காகச் சென்றார். சென்றபோது செல்லப்ப சுவாமிகள், "இங்கு நீ ஏன் வரவேண்டும்? இங்கே பார்ப்பதற்கு என்ன உண்டு? என்னை உன்னிற் காண்" என்று கூறவே, யோக சுவாமிகள் திரும்பி விட்டார்கள். "இறப்பும் பிறப்பும் இல்லாத குரவர் இருந்தபடியே இருக்கின் றார்" என்று உணர்ந்தவராய் அவர்பதம்போற்றி அவர் புகழை எடுத்துப் பாடுவ தும் அன்பர்கட்குச் சொல்லுவதும் ஆயினர். தந்தையனைய தவக்குரவனாகிய செல்லப்ப சுவாமிகள் தமக்கு ஞானதிட்சை செய்தருளிய நாளிலே சந்தனத்தா லியன்ற திருவடிகள் இரண்டையமைத்துத் திருவடிபூசை செய்து வருவாராயி னார், திருவடியின் பெருமை சொல்லுத் தரத்ததோ?

சுன்னாகத்தில் இறைவன் அருளுக்குப் பாத்திரமாய் வாழ்ந்த செல்லாச்சி யம்மையார் என்னும் யோகினி எங்கள் சுவாமிகளின் அருள்பெற்றவரே யாவர்.

## கதிரை யாத்திரையின்போது நிகழ்ந்தவை

சுவாமிகள் 1910 ஆம் ஆண்டில் தமது குருவின் ஆணைவழித் துறவியாகிக் கதிர்காமத்துக்கு நடந்து சென்றபோது, வழியில் யந்திர தந்திரங்களில் தாம் வல்லுநரென்று சொல்லிக் கொண்ட ஒரு முஸ்லிம் புருடரும் அவரோடு இணைந்து செல்வாராயினர். திருக்கோணமலை, மட்டக்களப்பு வழியாக இருவருஞ் செல் லும்போது பொத்துவில் என்னும் இடத்தில் நடுக்காட்டில் எருமைக் கூட்டம் ஒன்று நின்றது. அதில், தலைமை கொண்ட எருமை இவர்கள் இருவரையும் எதிர்த்துத் தாக்க முன்வந்தது; மந்திரம் தெரிந்த முஸ்லிம் தமது மந்திரம்

பலியாமையால் ஓடிச்சென்று ஒரு மரத்திலேறி முடங்கி அஞ்சி ஒடுங்கினார். வந்த மேதியை எங்குருநாதர் எதிர்த்து நோக்கவே, அந்நோக்குக் கெதிராக நிற்கமாட்டாமல் அவ்வெருமை திரும்பி ஓடியது மற்றை எருமைகளும் பின் தொடர்ந்து ஓடின. சுவாமிகளும் சிரித்துக்கொண்டே மரத்திலேறி மறைந்திருந்த மந்திரவாதியை நோக்கினார். மந்திரவாதி மரத்தைவிட்டு இறங்கி வந்து சுவாமிகள் முன்னர்ச் சிரத்தைத் தாழ்த்தித் தோளொடுதோள் பொருந்தத் தழுவி, "தரத்தில் மிக்க உம்மை வெல்லுந் தகுதி வாய்ந்தவர் இல்லை" என்று உளக் களிப்போடு கூறிப் பாராட்டினார்.

சுவாமிகள் கதிரைக்குச் சென்று முருகனைப் போற்றி அருள்பெற்று அம்பாந்தோட்டை மாத்தறை காலி வழியாகக் கொழும்புக்கு வந்து சேர்ந்தார்கள். அங்குச் சில நாட்கள் தங்கினார்கள். கொழும்பிற் கொச்சிக்கடையிற் கரிவேலை செய்பவர் கூட்டத்திற் சேர்ந்து தொழும்பர் போல நடந்து சிவசிந்தனையிற் றிளைத்தவராய்த் தெருக்கரையில் அவர்களோடு துயில்பவராய்க் காலத்தைக் கழித்து வரலாயினர். சில நாட்களின்பின், அங்கிருந்து புறப்பட்டுக் கண்டிக்குச் செல்லும் வழியாக மாத்தளையை நோக்கித் தொடர்ந்து சென்றார்கள். பழுப்பேறிய கந்தையாடையைத் தரித்தவராய்ப் பாதங்கள் ஓயாது நடத்தலாற் கன்றவும் மனங்கலங்காதவராய்க் காளைபோல நடந்து சென்றார்கள். இவ்வாறு சுவாமிகள் செல்ல, உமைபங்கராகிய இறைவன் பத்தர் துன்பம் பொறாதவராய் ஒரு திருவிளையாடல் புரிந்தருளினார். மலையகத்திற் பலவாண்டுகள் வாழ்ந்து வந்தவரும் மாத்தளையில் நகர ஓவசியராய் (Town Overseer)க் கடனாற்றியவரும் சிவ பத்தி, அடியார் பத்திகளிற் சிறந்தவருமாகிய திரு. சரவணமுத்து என்பவரது கனவிலே சிவபிரான் உமையம்மை சமேதராகத் தோன்றியருளி, "அன்ப! எந்தம் அடியவன்; இணையில்லாத துறவை மேற்கொண்டவன்; கந்தன் கதிரைக்குக் கால்நடையாகப் போய்த் திரும்பி வந்துளான்; அவன் உடல் வருந்திக் களைத்துளான்; இன்னும் அந்த நம்பி நடந்து செல்வதை நான் விரும்புகிலேன். மன்னும் நோன்பில் வலுத்தவனாகிய அவனை இன்னுரை கூறி, யாழ்ப்பாணத்துக்குப் புகைவண்டியில் ஏற்றி அனுப்பிவைப்பாயாக." என்று கூறியருளினார். திரு. சரவணமுத்து அவர்களும் விழித்தெழுந்து இறைவன் கருணையையும் பெரியவர் ஒருவரைத் தரிசித்துச் சேவை செய்யக் கிடைக்கவிருக்கும் பேற்றையும் நினைந்து பெருமிதமடைந்தவராய் எங்கள் சுவாமிகள் வரும் வழியிற் காத்திருந்து, பாதநோவையும் பொருட்படுத்தாமல் சிங்கேறு போல நடந்துவரும் சுவாமிகளைக் கண்டு வணங்கித் தாங் கனவிற் கண்டவற்றைக் கூறித்தம் இல்லத்துக்கு எழுந்தருளித் தம் உபசாரங்களை ஏற்றருளுமாறு வேண்டினார். ஐயனும் "அண்ணலாணை நன்றாகுக" என்று கூறி அவர் இல்லத்துக்கேக இசைந்தருளினார்கள். திரு. சரவணமுத்து அவர்கள் சுவாமிகளை அழைத்துச் சென்று வெந்நீரிலே குளிக்க ஏற்பாடுசெய்து சுவாமிகள் அணிந்திருந்த கந்தையாடையைக் களைந்து புத்தாடைபுனையச் செய்து திருவமுது செய்வித்து முந்தைத் தாம் செய்த பாக்கியத்தை நினைந்து மகிழ்ந்தார். சுவாமிகள் ஒரு பகலும் ஓர் இரவும் மட்டுமே அங்குத்தங்கி, "இதற்குமேல் தங்குதற்கு அதிதியாகிய எனக்கு உத்தரவு கிடையாது" எனக் கூறி விடைபெற்றார்கள். சுவாமிகளுக்குத் திரு. சரவணமுத்து பணம் கொடுக்க முன்வந்தபோது, "யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்குரிய பிரயாணச் சிட்டை மட்டும் வாங்கித்தா. அதற்குமேல் எதுவும் வேண்டியதில்லை" என்று கூறி அவர் கொடுத்த பணத்தில் மிகுதியை அவரிடமே திருப்பிக் கொடுத்துப் புகைவண்டியில் ஏறினார்கள். இது நிகழ்ந்தது 1919 ஆம் ஆண்டளவிலாகும். அந்தக் காலத்திலேயே முற்றும் ஆசைதீர்ந்த முனிவர் இவரெனச் சுவாமிகளை

அறிந்தவர்களில் திரு. சரவணமுத்துவும் ஒருவராவர் என்ற பாராட்டை அவர் பெறுவாராயினர்.

இன்னும் கதிரை யாத்திரையின்போது நிகழ்ந்தவற்றுட் சிலவற்றைச் சுவாமிகளே கூறியருளக் கேட்டுள்ளோம். கதிரையை நோக்கிச் செல்லுங்கால், வெருகல் ஆற்றின் முன்னதாகச் செல்லும்போது சுவாமிகளுக்கு வயிற்றுநோய் உண்டாயிற்று. வயிற்றினைக் குடைந்தும் பல்கால் வயிற்றிளிலுளைவு கண்டும் துன்பமுற்று, நடையுஞ் சோர்ந்து பயணத்தைச் சிறிதே தாழ்த்தி, வெருகலாற்றிலே தண்ணீர் குடிப்பதும், கரையிலுள்ள மணலிற் சற்றே உறைவதுமாகச் சுவாமிகள் வருந்திச் செயற்கரிய செயல்புரிந்த செல்லப்ப சுவாமிகளின் திருவடிகளை நினைந்தார்கள். இவ்வாறு சிரமமுற்றிருந்தகாலை அவ்வழியாக ஒரு வண்டி செல்லக் கண்டு அவ்வண்டியின் பின்னால் அதனைப் பிடித்துக்கொண்டே நடந்தார்கள். வயிற்றுநோய் தானாகவே அவரை விட்டு நீங்கிற்று. மற்றுமோர் இடத்தில் ஐயன் வழியிலே வெயில் கனற்றச் செற்றிடும் பசியுந் தாகமுஞ் சேர்ந்து வாட்ட, உற்றிடும் இளைப்பினாலே ஒரிடத்து அமர்ந்தார்கள். அங்குள்ள வேடச் சாதியாரிடம் தாகத்தைத் தீர்க்கத் தண்ணீர் தரும்படி கேட்டருளினார்கள். அவர்கள் பயந்து, "சுவாமி! நாங்கள் வேடர்; தாழ்ந்த சாதியார்; ஆதலால், தங்களுக்குத் தண்ணீர் தருதல் பாவம்" என்று கூறித் தண்ணீர் கொடுக்க அஞ்சினார்கள். சுவாமிகள் "அப்படி யொன்றும் இல்லை; தாருங்கள்" என்று நீரைப் பெற்றுப் பருகினார்கள். அவர்களிடம் உண்டியுங் கொண்டருளினார்கள். அவ்வேடர் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவும் உண்டோ? இவ்வாறு "உயிர் கொளும் மாண்பையன்றி உடற்குறும் இழ்மை மேன்மை வயிரமாக் கொள்ளாமை ஐயன் மனத்துறவறச் சீர்க்கொள்கை என்பதை அணுக்கத் தொண்டரா யுள்ளாரனைவரும் அறிவர்.

## தல யாத்திரை

வாழ்க்கை வாழ்தலே ஒரு யாத்திரையாம் என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளும் சுவாமிகள் பரதகண்டத்திலுள்ள தலங்களுக்கும் யாத்திரை செய்தார்கள். வண்டமிழ் வளர் நாடுகளில் மட்டுமல்ல, வான்மலைவளர் கேரள நாட்டிலும், பண்தமிழ் இசைப்பாடற் றெலுங்கு நாட்டிலும், பனைபார்ந்த சோலைகள் விரிந்த சந்தன மரங்கள் அடர்ந்த கன்னடத்திலும், விண்டுவின் கயிலைமலை இமயமலையாகியவற்றின் சாரலிலுள்ள தலங்களிலும் சென்று சென்று இறை வழிபாட்டிற்றிளைத்து ஆனந்தமுற்றார்கள். கேரளத்திலிருந்தும் காசியிலிருந்தும் சுவாமிகள் தமது திருக்கரத்தால் எழுதியனுப்பிய திருமுகங்களிலிருந்து அவர்தம் கருணைவெள்ளப் பெருக்கைக் காணலாம்.

## சிவதொண்டன் இதழ்; சிவதொண்டன் நிலையம்

1935 ஆம் ஆண்டில், சுவாமிகளின் ஆணைப்படி, சிவதொண்டன் இதழ் ஆரம்பிக்கப்பெற்றது. அவ்விதழில் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள் முதன்முதலாக வெளிவந்தன. இது தொடர்ந்து வெளிவந்ததோடு, சுவாமிகள் ஏனைய அன்பர்களுக்குப் பாடியளித்த திருப்பாடல்களும் சேர்ந்து நற்சிந்தனைநூல் வெளியாவதற்கு ஏதுவாயிற்று. பின்னர்ச் சிவதொண்டன் நிலையம் அமைப்பித்தார்கள். அதன்பின் மட்டக்களப்பைச் சேர்ந்த செங்கலடியிலும் மற்றொரு கிளையாகிய சிவதொண்டன் நிலையம் எழுவதாயிற்று. இந்நிலையங்களில் நிகழும்

நிகழ்ச்சிகளும், பணிகளும் இந்நூலின் கண்ணே விரிக்கப்பெற்றுள்ளன; இவை யெல்லாம் யாம் கடைத்தேற வேண்டும் என்ற கருணையினாலே சுவாமிகள் அமைப் பித்த பெரும்பணிகளாம். உயிருக்கு முன்னேற்றம் அளிக்க இவை எழுந்தன போலவே, உடலுக்கு வேண்டிய உணவை விருத்தி செய்தற்குரிய பணிகளை வற் புறுத்தித் தொடங்குவித்தார்கள். "பஞ்சம் வரப்போகிறது. விவசாயத்தைப் பெருமளவிற் றொடங்கிச் செய்யுங்கள்" என்று தீர்க்கதரிசனத்தோடு இடித் துரைத்தருளினார்கள். இன்று உண்மையிலேயே பஞ்சம் வந்து விட்டதைக் காண கின்றோம். செங்கலடியிலும் கிளிநொச்சியிலும் சுவாமிகள் வாங்குவித்து பயிர்ச் செய்கை செய்வித்துவரும் ஏக்கர்க்கணக்கான நிலங்கள் சிவதொண்டன் நிலைய விழாக்களுக்கு உதவிவருவதை எவரே அறியார்? செங்கலடியிலுள்ள பயிர்ச் செய்கையைச் சுவாமிகளிடம் மனச்சாந்தி பெற்றுச் சீடராகிப் பணிபுரிந்துவரும் சந்தசுவாமிகள் (Soulbury Ramsbotham) மேற்பார்வை செய்து வருகின்றார்கள்; அவர்கள் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களிற் பெரும்பாலனவற்றை அழகாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தியாத்துச் சிறந்த நூலாக்கும் பணியையுஞ் செய் துள்ளார்கள். சுவாமிகளின் சீடர்களில் இப்போது கைதடியில் வசிக்கும் மார்க் கண்டுச் சுவாமிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவராவர். மதுவிலக்கு முதலிய பணிகளையும் எங்கள் சுவாமிகள் ஊக்கி நடத்தி வந்தார்கள்.

உலகம் ஒரு குடும்பம் என்று சொல்லும் வழக்கமுள்ள சுவாமிகள் மேனாட் டுக்கு ஞானத்தூது விடுத்தவர் போன்று ஐவரை அனுப்பிச் செய்த பணிகளும், மலேசியாவிலுள்ள அன்பர்களை நினைந்து அத்தூதர் ஐவரையும் மலேசியாவுக்கும், சிங்கப்பூருக்கும் அனுப்பி வைத்தமையையும், மலேசிய மக்கள் காட்டிய பேரன்பை யும் பிறவற்றையும் நோக்குங்கால், ஐயன் கருணை நன்கு புலப்படும்; இவற்றின் விரிவை நூலுட் காண்க.

இவ்வாறு அடியவர்க்கு உய்யுநெறி காட்டிய ஐயன் வழக்கம்போல, ஒரு நாள் ஆவுக்கு உணவைக் கொண்டணுகும்போது கொட்டிலிற் கட்டுண்டிருந்த அப்பசு அவாவினால் துள்ளிப்பாய, அதன் முன்னங்கால்கள் தம்மேற் படாத வண்ணம் சுவாமிகள் திடீரெனத் திரும்பியபோது விழுந்து தொடையெலும்பு முறிந்துவிட்டது. வைத்தியர்களால் என்பு பொருத்தப்பெற்றபோதிலும், அவர் கள் எழுந்து நடக்க முடியாதவரானார்கள். அவ்வாறிருந்தும், சில்லினியங்கும் நாற்காலிகள் கொண்டுலாவி வருவாரானார்கள். பாதயாத்திரைகளையும் மேனாட் டுத்தூது யாத்திரையையும் நடப்பித்தருளினார்கள். முன்னாளிற் பாரதப்போரில் வீழ்ந்த பீஷ்மாச்சாரியார் தாம் முடிவெய்தும் பருவத்தை அடைந்திருந்தும் தூய வரவலிமையினால், தமது உயிரை விடாமல் உத்தராயண காலம்வரும் வரையும் சரசயனத்திற் பொருந்திவாழ உளங்கொண்டு, தருமன்முடி கொண்ட காலத்து ஐவர்க்கும் பண்டைய அரச தருமம் முதலியவற்றைப் பரிவிற் போதித் தது போல, எம் சுவாமிகளும் இருந்த இருப்பிலிருந்தே தம்மிடம் வரும் அன் பர்கள் தத்தமக்குரிய பணிகளை வினவ, அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியருளிப் பாதயாத்திரையாதி வெகுகைங்கரியம் புரிவித்தார்கள். சிவதொண்டன் நிலை யத்துக்கும் எழுந்தருளிச் சின்னாட்கள் தங்கியிருந்து ஆசி நல்கி அந்நிலையத்தை உருவுந்திருவுமேறச் செய்தார்கள்.

இவ்வாறு அருள்புரிந்த ஐயன் எடுத்த பணிகளையெல்லாம் சிவதொண்டன் நிலையத்து உளுற்றச் செய்து, தம்மையடுத்த அன்பர்கட்கு இங்கு ஆவனவாகிய நல்ல நெறிகளைப் பயிற்றி விடுத்தது இனியமையும்; வேறில்லை என்று திருவுளங்

கொண்டவராய் இவ்வுலக வாழ்வை ஒருவி மகாசமாதியெய்துதற்குத் திருவுளங் கொண்டு, கொழும்புத்துறையில் தாம் தொடங்கிய திருவடிபூசைத் திருநாளை எதிர்நோக்கியிருந்தார்கள் 1964 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் ஆயிலிய நக்ஷத்திரத்தில் மகாசமாதியெய்தினார்கள். இவ்வாறு சமாதியெய்தியதை அறிந்த அன்பர்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்காக வந்து சுவாமிகளுக்குச் செலுத்தும் தமது இறுதியஞ்சலியைச் செலுத்தினார்கள். துண்டி மயானத்துக்குச் சுவாமிகளது திருமேனி எடுத்துச் செல்லப்பட்ட சிறப்பும் வழி தோறும் அன்பர்கள் பக்தியோடு செலுத்திய அஞ்சலிகளும், சுவாமிகளின் அஸ்தியை வைத்துச் சுவாமிகளுக்குச் சமாதியமைத்தமையும் பிறவும் நூலுள் விரிக்கப்படுகின்றன, ஆண்டுக் காண்க.

சிவயோக சுவாமிகள் திருவடி வாழ்க.

---

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சிறப்புப்பாயிரம் I ... ... | i |
| 2. | சிறப்புப்பாயிரம் II ... ... | v |
| 3. | சிறப்புப்பாயிரம் III ... ... | viii |
| 4. | சான்றுச் செய்யுள் ... ... | x |
| 5. | அணிந்துரை I ... ... | xi |
| 6. | அணிந்துரை II ... ... | xiv |
| 7. | வாழ்த்துரை ... ... | xviii |
| 8. | முன்னுரை ... ... | xix |
| 9. | சிவயோக சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம் ... | xxii |
| 10. | சிவயோக சுவாமிகள் திருச்சரிதம் (நூல்) ... | 1 — 58 |
| | **முதற் காண்டம்** | |
| க. | திருநாட்டுச் சிறப்பு ... ... | 2 |
| உ. | திருநகரச் சிறப்பு ... ... | 5 |
| ௩. | திருவவதாரச் சருக்கம் ... ... | 7 |
| ௪. | கலை பயில் சருக்கம் ... ... | 10 |
| ரு. | சற்குருவைச் சார் சருக்கம் ... ... | 11 |
| சா. | துறவுபூண் சருக்கம் ... ... | 17 |
| எ. | ஆச்சிரமச் சருக்கம் ... ... | 18 |
| அ. | செல்லப்ப சுவாமிகள் சிவபதம் எய்திய சருக்கம் ... | 21 |
| | **இரண்டாம் காண்டம்** | |
| கூ. | செல்லாச்சியம்மை சருக்கம் ... ... | 23 |
| க0. | கதிரை யாத்திரைச் சருக்கம் ... | 25 |
| கக. | தல யாத்திரைச் சருக்கம் ... ... | 31 |
| கஉ. | சிவதொண்டன் இதழ்ச் சருக்கம் ... | 33 |
| க௩. | சிவதொண்டன் நிலையச் சருக்கம் ... | 35 |
| க௪. | மதுவிலக்குச் சருக்கம் ... ... | 39 |
| கரு. | திருவடியுலாவிற் பாத யாத்திரைச் சருக்கம் ... | 41 |
| கசா. | மேனாட்டுத் தூதுச் சருக்கம் ... ... | 45 |
| கஎ. | மலேசிய எழுச்சிச் சருக்கம் ... ... | 47 |
| கஅ. | பணியல புரி சருக்கம் ... ... | 50 |
| ககூ. | திருவடி பெற்ற சருக்கம் ... ... | 54 |
| 11. | சிவயோக சுவாமிகள் புகழ்ப் பாமாலை ... | 1 |
| க. | குருபரன் வரிப் பாட்டு ... ... | 1 |
| உ. | வணக்கப் பஞ்சகம் ... ... | 2 |
| ௩. | காத்துக்கோட் பத்து ... ... | 2 |
| ௪. | திருப்புகழ் ... ... | 4 |
| ரு. | குருபரன் சரணப் பத்து ... ... | 4 |

| | | |
|---|---|---|
| ௬. | உந்தி பறத்தல் ... ... | 5 |
| ௭. | அடையாளங் கூறல் ... ... | 7 |
| ௮. | செவ்வி கூறல் ... ... | 8 |
| ௯. | திருவிருத்தம் ... ... | 9 |
| ௧௦. | திருத்தாண்டகம் ... ... | 11 |
| ௧௧. | செவிலி கூற்று ... ... | 13 |
| ௧௨. | கோத்தும்பி ... ... | 14 |
| ௧௩. | ஓயாது வருதல் ... ... | 15 |
| ௧௪. | உள்ளத்திருத்தல் ... ... | 16 |
| ௧௫. | அற்புதப் பத்து ... ... | 17 |
| ௧௬. | கீர்த்தனைகள் ... ... | 18 |
| | (i) செல்லப்ப சுவாமிகள் ... ... | 18 |
| | (ii) கலம்பகவாசன் ... ... | 19 |
| | (iii) தெண்டனிடல் ... ... | 20 |



---

உ

# திருத்திக் கொள்க

| சுவாமி சரிதம் பாட்டு வரிசை எண் | | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 35 | | 4 | ஆடுமாலே | ஆடுமாலோ ? |
| 36 | | 2 | யாணர்பன் | யாணர்ப்பன் |
| 37 | | 3 | வைத்தியநாதல் | வைத்யநாதன் |
| 41 | | 4 | மிசைகொழும்பு | மிசைக்கொழும்பு |
| 50 | | 3 | யகலவிழி | யகலஇழி |
| 51 | | 8 | படியின்மிசைசிவ | படியின்மிசைச்சிவ |
| 54 | | 4 | மேனியொளிர் | மேனியொளி |
| 57 | | 1 | பீடம்மீதும் | பீடமீதும் |
| 63 | | 3 | உகந்தநல் | உவந்தநல் |
| 129 | (அடிக்குறிப்பு) | 3 | என்றுசிவன்முன் | என்றுஞ்சிவன்முன் |
| 139 | | 1 | ஞரடங்கு | ஞடரங்கு |

---



நரைத்த சடையும் நளின மலர்போல் நயனங்களுஞ்
சிரித்த விதழுந் திருமுகச் செவ்வியுஞ் சிரருளும்
விரித்த உரம்பொலி மேனியில் வீசும் விரைநலனும்
திருத்திக ழும்மலர்ப் பாதமுஞ் சிந்தித் திருநெஞ்சமே.

—ஸ்வாமிபுகழ்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சுவாமி சரிதம் என்னும்

# சிவயோக சுவாமிகள் திருச்சரிதம்

காப்பு

1. சிவயோக மாமுனிவன் திருச்சரிதஞ் செப்புதற்குப்
பவமாயக் கடல்கடக்கப் பரிந்துதவுந் தாளிணையுஞ்
சிவஞானப் பெருமதமுந் திருச்செவியும் ஒண்கோடும்
நவமாகப் பொருந்தவரு மொருகளிற்றை நாடுவமே. க.

அவையடக்கம்

2. பூமு கத்துப் பொருந்துமொண் பைந்தமிழ்ப்
பாமு கந்து படிக்குமோர் பண்பினர்
நாமு வந்து நவில்வதைக் கேட்பரால்
தேம ணக்கும் முனிவரன் சீர்க்கதை. உ.

3. பூவி னேடுறு நாரையும் புனைகுவர்
ஆவின் பாலுறு நீரையும் ஆர்குவர்
தேவ மாமுனி சீர்க்கதை செப்பலின்
ஆவ லோடிந்நூல் அகங்கொண் டோம்புவர். ௩.

வேறு

4. பின்னூல்செய் திடும்புலவர் நுதல்பொருளைச் சுருக்குதலோ
பெருக்குதலோ முன்னிச் செய்யின்
முன்னுளதாங் கவர்வழிகூர் அருநெறியைச் செம்மைசெய
முயல்வதுபோ லெளிதே யாகும்
இந்நூலோ முற்புகல்நூ லாமதனால் இனிதாக்கல்
பற்பலர்க்கும் எளிதே யாமோ?
உன்னுநய மீதறிவோர் உறுபொருள்சொற் சுவைக்கருத்தின்
உறுகுறையோர் பொருளாக் கொள்ளார். ௪.

5. மண்ணதனை யுண்டவொரு திருமாலும் மலரயனும்
மலைத்துமிக வலைய முன்னாள்
ஒண்ணரிலவுங் குன்றமதா யவர்நடுவ னுற்றவர்க்கே
உண்மைகொளீஇ யருள்செ யெங்கள்
கண்ணுதலோ னெளிவந்து குருவாகக் காட்சிதந்து
நல்லூரில் ஆண்டு கொண்ட
எண்ணரிய சிவயோக முனிவரன்றன் பெருமையெலாம்
யானளத்தற் கடங்கப் போமோ? ரு.

## முதற் காண்டம்

### க. திருநாட்டுச் சிறப்பு

6. பொன்னுல குற்றதோர் பூந்தண் சோலையே
தன்னிடம் பெயர்ந்திவண் சார்ந்த தென்னலாந்
தன்மையிற் றழைத்திடும் ஈழ நாட்டின்சீர்
மன்னுல கெங்கணும் பரந்து மல்குமால். க.

7. அயிலைநேர் தடங்கணார் அநிந்திதை கமலினி
மயலினாற் பிறந்தருள் மகிமைத் தோழனால்
துயிலொரூஉம் பரவைபாற் றூது சென்றவர்
கயிலைமா மலையெனக் கவினுறும் மலைபல. உ.

8. சிவனொளி பாதநற் றெய்வத மால்வரை
அவனருள் பாலனின் அருட்கதிர் மாமலை
குவடுகள் மல்கிய கோண மாமலை
எவனுறு மாந்தரும் எய்திப் போற்றுப. ங.

9. ஈழநன் னாடெனும் இணையில் அன்னையின்
[1]காழக மாமெனக் காண்வரு மாகடல்
சூழநின் றையனின் றூயபொற் றாடொழ
ஏழெனு மாகடல் எய்திய தொக்குமால். ச.

10. அக்கடன் மீமிசை வெண்முகி லாச்செலும்
மிக்க[2]கொண் மூ[3]பல ராமனின் விரைவது
ஒக்கவந் நீரிலே வாய்மடுத் துண்டபின்
மைக்கரு நிறங்கிளர் மாலினைப் போலெழும். ரு.

11. எழுங்கரு மாமுகில் ஏறியம் மலைத்தலை
விழும்பெரு மழையது விசும்புற வெள்ளிவெண்
கொழுந்திருப் பொலிதரு கோல்கள் கோத்தென
இழிந்துவெள் ளருவியாய்த் திரைமறிந் தேகுவ. சா.

12. இன்னணம் ஏகுவ வெழில்வரை யரசனின்
கொன்னவில் தோண்மிசை குலவுமுத் தரியமாப்
பன்னிட வொழுகியே பார்மிசை நதியென
மன்னிய பற்பல பேர்களும் வாய்ந்திடும். எ.

---

1. காழகம் — ஆடை 2. கொண்மூ — முகில் 3. பலராமனின் — (வெண்ணிறம் படைத்த) பலராமனைப்போல.

13. மாவலி யுடையதோர் மாவலி கங்கையும்
[1]காமலி கரைபொரு காள கங்கையும்
தேமரு சேய்மகிழ் சீர்மணி கங்கையும்
பூமகள் நித்திலக் கோவை போலுமால். அ.

14. இரத்தி னம்மிலை யிரத்தின மாபுரி
[2]தரத்த முத்தினந் தருஞ்சலா பப்பதி
பருத்த யானைகள் [3]படும்பெருங் காடுகள்
விருப்பின் மேவுவர் விளையுமந் நிதிகளை. கூ.

15. ஆகம் பெற்றுள வாருயிர் மாந்தருள்
போகம் நாடுவோர் போகத்தை யீட்டிடம்
யோகம் நாடுவோர் யோகத்தை மேவிடம்
மோகந் தீர்ந்த முனிவர்க்கும் ஈதிடம். க0.

16. வான ளாவிய மால்வரைக் குறிஞ்சியும்
தேன ளாவிய சீர்மலர் முல்லையும்
தூநெ லார்தரு [4]துப்புள மருதமும்
மீனு லாவிடு வெண்டிரை நெய்தலும். கக.

17. ஆன நானில மணிபெற மன்னுறீஇக்
கான முல்லைநற் குறிஞ்சி கடிவளம்
வேனி லாற்[5]றிரி பாலையும் மேவியே
தானின் றொளிர்வது தரணியி லீழமால். கஉ.

18. [6]பாடும் மீன்கள் பயில்தகல் வாவி
[7]கூடும் வெந்நீ ரூற்றெழு [8]கூவல்
நாடும் [9]நாவாய் நனிபயில் துறைகள்
பீடும் மற்றவை பெற்றுள குணதிசை. கங.

19. [10]ஒவி யஞ்செறி வுற்றபல் குகைகள்
காவெ னச்செறி தேயிலைக் கவின்புனம்
மேவு மெம்மிறை வேலவன் கதிரை
யாவு மெய்துவ தென்றிசைப் பாங்கரே. கச.

20. தேவர் கோனுந் திகைப்புற வோங்குங்
கோவி யற்றுறை கொண்ட கொழும்பு
பாவு சீர்த்தலைப் பட்டினம் பல்வளம்
மேவு மாளிகை மிளிர்ந்திடும் மேற்றிசை. கரு.

---

1. கா — பூங்காக்கள். 2. தரத்த — தரத்தின் மிகுந்த 3. படும் — உற்பத்தி யாகும்; தோன்றும் 4. துப்புள — உணவுள்ள 5. திரி — திரிந்த.
6. மட்டக்களப்பிலுள்ள மீன்பாடும் வாவி 7. திருக்கோணமலையிலுள்ள ஏழு வெந்நீர்க் கிணறுகள் 8. கூவல் — கிணறு 9. நாவாய் — கப்பல் 10. சிகிரியா, பொலனறுவை, டம்புலா ஆகிய இடங்களிலுள்ள குகைகள்.

21. கேது பூசைசெய் கேதீச் சரம்முதல்
தீத கற்று சிவாலயஞ் செந்தமிழ்
மாதி னுறைவிடம் மாதவ ராலயம்
கோதி லாக்குணம் [1]கூரும் வடதிசை. கசு.

22. கருவி மாமழை கால்களோ டாற்றுநீர்
அரிய வாவிநீ ரன்னகொண் டுழுதலால்
பெருகு செந்நெற் பெருங்[2]குவை [3]மள்ளர்கள்
மருவு செம்பொன் மலையெனச் சேர்ப்பரால். கஎ.

23. ஆளு டைப்பிள்ளை யாளுடை நம்பிகள்
நீளு மன்புடன் நேர்பெறப் பாடிய
கோளில் [4]மாந்தையுங் கோணமா குன்றமும்
நீள நினைவுறும் நேசத் தருளுமால். கஅ.

24. முன்னை யாலயம் மூர்த்தியி னோங்கிய
முன்னீச் சரத்தொடு முத்தமிழ் வித்தகன்
இன்னி ரருண கிரிப்புக ழின்னிசைக்
கன்னிச் செந்தமிழ்க் கதிரையு முற்றதே. ககூ.

25. செந்தமிழ் மக்கள் சிங்களர் சோனகர்
வந்த பறங்கியர் வாழ்ந்திடும் நாடிது
இந்துநன் மாகட லின்றமுத் தொத்தது
எந்தநா டும்மகிழ்ந் தேத்தும் புகழது. உ0.

26. துண்ணெனக் கயிலையைத் தூக்கிய தசமுகன்
திண்ணெனும் புயபலச் சீர்த்தியோ டாண்டது
வண்ணமார் புலிக்கொடி வயங்கச் சோழர்கள்
பண்ணரு நீதியிற் பாலனம் பெற்றது. உக.

27. சித்தார்த்தர் துறவினைச் சேர்ந்துயோ கமர்ந்தபின்
புத்தராய்ப் போதித்த பொன்னெறி யுடையது
சித்தாந்த சிவநெறிச் சீர்பண்டே மிகுவது
இத்தரை வித்தகர் ஏத்தும் இசையது. உஉ.

28. இன்ன தன்மைக ளெய்துமிவ் விழத்தின்
பன்ன ரும்புகழ் பாட்டி லடங்குமோ?
சொன்ன பல்வளந் தொக்கவிந் நாட்டிடை
முன்[5]னெண வொளிர்வது முத்தமிழ் யாழ்நகர். உங.

---

1. கூரும் — கூரப்பெறும்; செயப்பாட்டு வினைமுற்று 2; குவை — குவியல்
3. மள்ளர்கள் — வயலில் வேலை செய்வோர் 4; மாந்தை — திருக்கேதீச்சரம்;
5; எண — எண்ண

## உ. திருநகரச் சிறப்பு

### வேறு

29. [1]ஏர்வடி வுற்ற தோற்ற மெழில்பெற வமைந்து மேழிச்
சீர்பெறு வளத்தோ டீழத் திருமகள் சிரம்போல் போற்றும்
பேர்பெறு நகரந் தான்யாழ்ப் பாணொடு தொடர்பு பெற்ற
நேரிலா நகர யோயாழ்ப் பாணமால் நிலவு மிம்பர். க.

30. கற்பக தருவென் றென்று கருதிய வெல்லா மீந்து
நற்றவ விமையோர் நாட்டில் நண்ணிடு மதுபோ லிம்பர்
பொற்பமர் [2]பெண்ணைச் சோலை புகல்வுறும் பொருள்க ளெல்லாம்
அற்புத மெய்த மன்னி யளித்திடும் யாழ்ப்பா ணத்தே. உ.

31. முற்பிறப் புஞற்று நோன்பின் முழுப்பய னெய்தி டாமற்
சற்றுள குறையாற் கீரி தன்னது முகத்தைப் பெற்றுக்
கற்களூ டுறுந் தீர்த்தங் கருத்துட னாடி யுய்ந்த
நற்றவன் நகுலன் வாழ்ந்த நலந்திகழ் மலையுண் டோர்பால். ௩.

32. மாருதப் புரவி கப்பேர் வனிதை[3]மா முகமே மாறிச்
சீருற முருக வேளின் திருவடிப் பூசை கோயில்
ஏர்பெற வியற்றிப் பேறங் கெய்திடும் புகழா லோங்கும்
[4]வேரியங் கடம்ப மார்பன் விரும்புநற் றலமுண் டோர்பால். ௪.

33. தொல்லைவெம் பிறவி தூர்க்கும் ஞானிசெல் லப்பன் வாழ்ந்த
நல்லலூர்; அறிஞர் சங்கம் நாட்டிச்செந் தமிழ்வ ளர்த்த
செல்வலூர்; தமிழ மன்னர் சேர்மூதூர்; கந்தன் காதல்
மல்கிய கோயில் ஓங்கும் மாண்புள நல்லூர் ஓர்பால். ௫.

34. பாவலர் எவரும் போற்றப் பைந்தமிழ் சைவ மார்க்கக்
காவலின் மறும லர்ச்சி கண்டவன் அவற்றின் மேன்மை
பூவல யத்தார் காணப் புரியுங்கண் மணியே போல்வான்
நாவலன் பிறப்பு மங்கே நடுசிலை மிளிர்வ தங்கே. ௬.

35. வாழைகள் கமுகி னீட்டம் வளங்கெழு தெங்கின் தோட்டம்
கீழுற [5]முழவிற் றூங்குங் கிளர்பலா மாவின் கூட்டம்
[6]மேழியஞ் செல்வர் நாட்டும் வியன்பெருந் தெய்வக் கோட்டம்
யாழென வண்டு பாட மயிலினம் ஆடு மாலை. ௭.

36. யாழிந்துக் கலூரி யோடு யாழ்மத்ய கலூரி யாதி
யாழ்நகர்ப் பலகல் லூரி யாணர்பன் னூல்போ திப்பும்
யாழ்நகர்ப் பயில்வுங் கல்வித் தொழிலைகொ லென்றை யுற்றே
ஏழுல கினர்வி யக்க விலங்குபே ரெழிலு முண்டால் ௮.

---

1. ஏர் வடிவுற்ற — கலப்பை போன்ற வடிவத்தையுடைய (படத்தைப் பார்க்க)
2. பெண்ணைச் சோலை — பனஞ்சோலை. 3. மாமுகமே — குதிரை முகமே.
4. வேரி — தேன். 5. முழவில் — மத்தளம் போல், இல் ஐந்தாம் வேற்றுமையுருபு ஒப்புப் பொருளில் வந்தது. 6. மேழியஞ் செல்வர் — வேளாளர்கள்.

37. யாழ்நக ரிதயம் போன்று யாங்கணும் அருள்ப ரப்பி
யாழ்முறை யோதும் நேச விதயத்தார் தமக்கு நல்ல
வாழ்வருள் சத்தி தையல் நாயகி வைத்திய நாதன்
வாழ்தெய்வ குலமேய் வண்ணை வளநக ருண்டங் கோர்பால். கூ.

38. [1]ஆவண வீதி யோர்பால் அணிபெறு கோட்டை ஓர்பால்
[2]பூவணக் காவு மோர்பால் பொலிவெளி யரங்கு மோர்பால்
[3]நாவணங் கண்ட [4]நீதி நடுவினர் மன்று மோர்பால்
நோவுசெய் நோய்கள் மாற்றும் நுவல்[5]வைத்ய சாலை யோர்பால். க0.

39. கோட்டையிற் காவற் றேவாய்க் குலவுநம் முனியப் பர்தங்
கோட்டமு மோர்பால் மேலாங் குவலயத் துள்ள நூல்கள்
தேட்டமாய்ச் சேர்த்து வைத்த சிறந்த[6]நூ லகமு மோர்பால்
கூட்டுற வாளர் கண்ட [7]கோலமண் டபமு மோர்பால். கக.

40. [8]பெரியவங் காடி யோர்பால் [9]சிறியவங் காடி யோர்பால்
உரிமையின் நகரை யோம்பும் [10]நகராண்மைக் கழகம் ஓர்பால்
கரியமால் வேங்கடேசக் கடவுளின் கோயி லோர்பால்
விரிபுக ழிராமன் முன்னுள் விரும்புவில் ஆன்றி யோர்பால். கஉ.

41. இத்தகைச் சிறப்பு மேவி யிசைபெறு நகரின் தென்பால்
வித்தகத் திறமை யோடு வியன்மரக் கலங்கள் முன்னுள்
மெத்தவே கொழும்பை நோக்கிப் புறப்படு வியன்று றைக்கே
இத்தரை மிசைகொ ழும்புத் துறைப்பெய ரெய்து மாதோ. கங.

42. இம்பரின் முயற்சி கூர வினியபல் பண்டம் மாற்றுஞ்
செம்மைசேர் தொழிலு ஞற்றிச் சேர்பொருள் மிகவே மீட்டித்
தம்பெருங் குலவே ளாண்மைத் தகைமைசா லொழுக்கம் பூண்ட
அம்பல வாணப் பேர்கொ ளருந்தவச் செல்வன் வாழ்ந்தான். கச.

43. அந்தநற் செம்மல் பண்ட மாற்றினுக் கமைய விவ்வூர்
சொந்தமாக் கொண்டு வாழ்ந்தான் தொல்குடி மக்கள் வாழும்
கந்தவேள் குடிகொள் மாவைக் கவின்பதி வாழ்ந்தா ராவர்
முந்தையோர் அன்னுன் புண்யம் முன்னியே தொகுத்தான் செல்வம். கரு.

44. அன்னவன் இல்லின் வாழ்க்கை யறங்களை யோம்ப வேண்டி
மன்னிய வளங்கள் மல்கித் திருப்பொலி மாவை யூரிற்
பொன்னிகர் பொற்புஞ் [11]சாலி பொருவிடுங் கற்பும் பூண்ட
[12]சின்னாச்சி யம்மை தன்னைத் தேவியா மணத்திற் கொண்டான். கசா.

---

1. ஆவண வீதி — கடை வீதி. 2. பூவணம் — பூவண்ணம் 3. நாவணம் — நாவண்ணம் 4. நீதி நடுவினர் மன்று — நீதி ஸ்தலங்கள் 5. வைத்தியசாலை — ஆங்கில வைத்தியசாலை (Hospital) 6. நூலகம் — Public Library 7. கோலமண்டபம் — வீரசிங்கம் மண்டபம் 8. பெரிய அங்காடி — பெரிய கடை (Market)
9. சிறிய அங்காடி — சின்னக் கடை 10. நகராண்மைக் கழகம் — Municipality.
11. சாலி — அருந்ததி: "சாலி யனையாளைத் தாங் கொணர்ந்தார்" (சிலப்)
12. இவ்வம்மையார்க்கு அமுதம் என்று மற்றொரு பெயரும் உளதென்பர்.

45. விருந்தின ராதி யாக வேண்டு[1]மைம் புலத்தா ரோம்பிப்
பெருந்திரு வம்மை யப்பர்ப் பேணியு மீசன் நேசந்
திருந்திய வடியர் மாட்டுச் செய்வன பணிந்து செய்தும்
பெருந்திரு வனையா ளோடு பீடுற வாழும் நாளில். ௧௭.

---

## ௩. திருவவதாரச் சருக்கம்

### வேறு

46. மங்கலமாம் மனைவாழ்க்கை மலர்ந்தொளிர நிலவுலகில்
பொங்கரவ வணியணியும் புனிதனெறி தழைத்தோங்க
எங்குமுள வடியார்க ளிதயதா மரைமலரச்
சங்கமிகும் அணிகலனுந் தவப்புதல்வன் றனைவேண்டி. ௧.

47. செஞ்சடையான் திருப்பதியுந் தீர்த்தம்பல வுஞ்சேர்ந்துங்
கஞ்சமலர்ச் சரவணத்துற் பவித்தருளுங் கந்தனடி
தஞ்சமெனக் கொண்டவன்றன் தலங்கடொறுஞ் சேவித்தும்
எஞ்சலிலா வறந்தானம் இவண்செய்தா ரிருவருமே. ௨.

48. அன்னவர்தந் தவப்பயனு மவனியுளோர் அருந்தவமும்
மன்னீழ வளநாடு வகைநோற்ற பெருநோன்பும்
என்னனையார் முன்னிழைத்த இருந்தவமு மொன்றாகிச்
சின்னாச்சி யம்மையார் திருவயிறு வாய்ப்புற்றார். ௩.

49. ஞாயிறே முதலாக நவில்கோள்க ணலனுற்று
மேயவழி யுடனிற்ப விரும்பு[2]மா யிரத்தெண்ணூ
றாயவெழு பத்திராம் ஆண்டில்வை காசியினில்
தூயநல வவிட்டமெனச் சொலுநாள்நல் லோரையெழ. ௪.

---

1. ஐம்புலத்தா ரோம்பி — தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்னும் ஐம்புலத்தாறு ஓம்பி.

2. 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி (ஆங்கீரச ஆண்டு வைகாசித் திங்கள் 18 ஆம் நாள்) புதன்கிழமையாகும். சுவாமிகள் அவதாரஞ் செய்த நேரம் அதிகாலை 3-30 மணியளவில், அவிட்ட நக்ஷத்திரத்தில் ஆகும்.

50. மெய்ம்மையெனு மொருபெரிய மேம்பட்ட நெறிநிலவச்
செய்யதமி ழினஞ்செய்த திருந்தியநற் றவநிலவப்
பொய்ம்மைவழி யகலவிழி புலன்களது வலியகலச்
சைவநெறி நிலவநிறை சாந்தமது தலையெடுப்ப. ௫.

51. மிடியகல விருளென்ன விரியுமா ணவநலியக்
கடிகமழ்பூங் கொன்றையான் கருணையெனு மழைநிலவப்
படியின்மிசை சிவயோகப் படிவமுறு பசுங்குழவி
அடியவர்கள் மனங்களிப்ப வவதாரஞ் செய்ததுவே. ௬.

வேறு

52. மாதவர்கள் சித்தரொடு மகிழ்ந்துபொலி வுற்றார்
ஓதமலி தண்கடலும் ஓதையடங் கிற்றே
கீதமுணர் கந்தருவர் கின்னரர்க ளோத்த
வேதசிவ நாமவொலி மிக்கெழுந்த தெங்கும். ௭.

53. நல்லவர்க ளாகுபல நற்குறிகள் நாட
அல்லவர்க ளுள்ளமவை அற்புதமே கொண்டு
புல்லுதம புன்னெறிகள் பொன்றிடுமா றென்னென்
றெல்லையுறு காரண முசாவிமலைப் புற்றார். ௮.

54. ஊரவர்க ளுற்றவர்கள் சேரவொருங் குற்றே
யீரமலி நெஞ்சினொடு மிளங்குழவி தன்னை
வாரமுட னெங்கள்குடி வளம்பொருந்த வந்த
வீரனென மேனியொளிர் மேவிடவுட் கொண்டார். ௯.

55. காதலுட னங்கவர்கள் காண்புறு சிறப்பின்
சாதகன்ம மாதிபல தகைவிழவு கண்டார்
வேதநெறி யோங்கவரு வித்தகரும் மற்றைப்
பூதலமாந் தரும்[1]புகலப் பொருள்பலவு மீந்தார். ௧௦.

56. [2]நாமகர ணம்முதல நயந்துபல செய்தே
தூமணி பதித்தநல தொட்டிலமர் வித்தார்
ஆமரபி னைம்படையின் தாலியணி வித்தார்
ஏமமுறு திருநீறும் இலங்கிடமெய்ப் படுத்தார். ௧௧.

வேறு

57. அன்னையின் மடித்த லத்தும் அணிமிகு பீடம் மீதும்
துன்னொளித் தொட்டின் மீதுந் துதைமலர்ச் சயனம் மீதும்
என்னிரு கண்ணி னுள்ளே யிமைமணிப் பாவை போல்வான்
றன்னையு நலம்பா ராட்டித் தாலாட்டி மகிழ்வுற் றார்கள். ௧௨.

---

1. புகல — விரும்ப.

2. நாமகரணம் — பெயரிடல். இவருக்குப் பெற்றோரிட்ட பிள்ளைத் திருநாமம் சதாசிவன் என்பது என்றும், யோகநாதன் என்னும் பெயர் பின்னருண்டா யிற்று என்றுஞ் சிலர் கூறுவர்.

58. முறைமுறை பருவந் தோறும் முகிழ்த்துய ரையன் றனும்
மறைகளுந் துறவு மன்பும் மகிழ்வுடன் தலையெ டுப்பச்
சிறியமான் கரத்தார்க் கல்லாற் சிரங்கொடு பணிகி லோமென்
றுறுதிசால் [1]செங்கி ரைதான் ஆடினு ருலக முய்ய. ௧௩.

59. செப்பு "மோர் பொல்லாப் பென்றுஞ் சேர்வதே யில்லை" யென்றும்,
"எப்போதோ முடிந்த" தென்று "மியாமதை யறியோ" மென்றும்,
முப்போதும் "முழுதும் உண்மை" எனமுனி மொழிந்த தன்மை
கைப்போது கொண்டு காட்டிச் சப்பாணி கொட்டி னரால். ௧௪.

60. மதிதவழ் சடையான் றன்னை மனத்தினிற் பதித்த வீறு
பதிதரு சிந்தை யோ்டும் பாங்கினிற் றவழ்த லுற்றூர்
கதிதரு யோகநாதக் கண்மணி வருக வென்று
மதிமுக மகளிர் தம்மோ டாடவர் மகிழ்ந்த ழைத்தார். ௧௫.

61. அழைத்தலுந் திருமு கத்தில் அரும்புமின் னகைபூத் தோங்க
விழைவினி னன்னோர் பாங்கில் மெலக்குறு நடைகொண் டேகத்
தழுவியே யெடுத்த ணைப்போர் தாங்களி கூர்வ ராலோ
முழுதுல கின்ப மூட்டும் முதன்மையுண் டிவற்கே யென்பர். ௧௬.

62. பொன்னினை மகளிர் தம்மைப் புவியினை மதியாச் செல்வ
நன்மன வுறைப்பைக் கொண்ட நம்பியாம் யோக பாலன்
மன்னுளத் துறுகா மாதி வன்பகை தளர்வுற் றேங்கத்
தன்னிக ரில்லாச் செம்மல் தளர்நடை கொண்டா ரன்றே ௧௭.

63. மேதினி தான்மாந் தர்க்கோர் விளையாட்டு முன்றி லென்றுஞ்
சாதலும் பிறத்த லுந்திர் தரச்செயுந் தொழிலே யாக
ஓதுறு கன்மம் யாவும் உகந்தநல் விளையாட் டென்றும்
காதலிற் காட்டு வான்போற் கைக்கொண்டார் ஓடி யாடல். ௧௮.

64. நாடிய சிறும ணித்தேர் நயந்தினி துருட்டி மேலாம்
வீடது நாடி மேலை வினையெலாம் விட்டி யன்பு
கூடருட் செயலில் நிற்போர் குலவிய பேதை மாதர்
சேடுற மணலிற் செய்த சிற்றில்கள் சிதைத்தார் மன்னே. ௧௯.

65. சிறுபறை கொட்டி யார்த்துந் தெருவினி லோடி யார்த்தும்
கறுவிய வுட்ப கைகள் கதுமென விலக வார்த்தும்
முறுகிய பத்தி யோங்க முறுவலித் தினிதி ருர்த்தும்
பருவவை யாண்டிற் கற்பான் பயில்வுற்ற ரெண்ணெ முத்தே. ௨0.

---

1. செங்கீரையாடல் — குழவி வளர்ச்சியில் வரும் பருவங்களுள் ஒன்று. ஐந்தாவது மாசத்தில் இது நிகழும். ஒரு காலை மடக்கி ஒரு காலை நீட்டி, இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி இளங்கீரைத்தண்டு காற்றில் அசைதல்போலத் தலை நிமிர்த்தியசைந்தாடுதல் என்க.

## ச. கலைபயில் சருக்கம்

### வேறு

66. கலைபயிலும் பருவமதிற் கணக்காயர் ஓத்துரைப்ப
நிலைபெறவே பயின்றதன்மேல் நெடுங்குரவர் தம்மாட்டே
இலகிடுமெண் ணெழுத்தென்னும் இயற்றமிழின் சாதனமாக் க.
குலவுகலை பலவுணர்ந்தார் குரிசிலாம் பால்யருமே.

67. புலனெறிநூல் வழக்குடனே புகலுமுல கியல்வழக்குங்
கலைபயிலுங் காலைதனிற் கசடறக்கற் றுணர்ந்தாராற்
புலைதவிர்ந்த நெறிவாழ்வைப் புவிமாந்தர் காதலித்து உ.
நலம்பெறவே வழிநடத்த நானிலத்தில வரும்நம்பி.

68. தமிழ்மொழியிற் சிவநூல்கள் தகவுடைய வறநூல்கள்
அமிழ்தனைய பிறநூலும் அறிவுமிகப் பயிலுங்கால்
இமிழ்கடல்சூ ழுலகதனில் எழில்பெறுமாங் கிலமொழியுந் ங.
தமியேஞ்செய் தவம்போல்வார் தகுதிபெறக் கற்றறிந்தார்.

69. விளையுமுயர் பயிரதனை விளையுமுன மேயதனின்
முளையதனிற் றெரியுமெனு முதுமொழிக்கங் கிலக்காக
விளையுமொரு தீவினையும் மிகவிரும்பும் நல்வினையுங் ச.
களையுமுறை யாதென்னுங் கருத்துந்த வுங்கற்றார்

70. கற்பனநன் னூல்கற்றே கற்கலா நூல்விடுத்துக்
கற்றவர்க்கும் வரம்பாகிக் கன்மமெலாம் பிறர்க்குதவி
பற்றியுள வாமென்னும் பான்மையினி லுற்றதொழில் ரு.
எற்றெதுவோ வென்றுதமக் கேற்றதொழி லாய்ந்திட்டார்.

71. அன்னையார் சிவனூரின் அரியபதம் அடைந்திடவே
பின்னைத்தந் தந்தையுமோ பிறநாட்டில் வணிகநெறி
தன்னையே மேற்கொண்டு வாழ்ந்தவொரு தகைமையினால் சா.
இன்னினிய தந்தையரின் எழிற்றங்கை யிடஞ்சார்ந்தார்.

72. மொழிக்கரசர் தமக்கையாம் மூதறிவிற் சிறந்துலகம்
வழுத்தவரு திலகவதி யம்மையென வாழ்ந்தங்கண்
பழுத்தசிவ பத்தியினற் பண்புறு[1]முத் தம்மையெனும் எ.
விழுத்தகைய மாமியார் வளர்த்துவர மேம்பட்டார்.

73. ஆங்கிலமுஞ் செந்தமிழு மடைவுபெறக் கற்றதன்பின்
பாங்குபெறத் தொழிலொன்று பற்றுதற்காம் பருவமுற
ஆங்கிலர்கள் ஆண்டுவந்த அக்காலத் திரணைமடுத் அ.
தேங்குகுளங் கட்டுதற்குத் திட்டமொன்று வகுத்தார்கள்.

---

1. இவரை முத்துப்பிள்ளை என அழைப்பதும் உண்டென்பர்.

74. காடுகொன்று நாடாக்கிக் கவினுறுநற் குளந்திருத்தி
பீடுறவே வளம்பெருகப் பெரும்பயிர்கள் வளர்ப்பதற்கு
நீடுறுமை யாயிரவே லிக்குமிகு பயிர்த்தரைக்கா
ஓடிடநீர் பாய்ச்சுதற்கே யுகந்திடுமத் திட்டமென்ப. ௯.

75. பொறியியல்நூல் வல்லவனும் புவிபுகழும் [1]பிரவுனெனும்
அறிவியல்சே ரர்ங்கிலனுந் தலைவனென வமர்ந்தனனல்
வறிதுலக பந்தமறு மனயோக நாதனையே
குறியுடனே பொருள்களது காப்பாள ரெனத்தேர்ந்தான். ௧௦.

76. இத்திட்டந் தனிற்பண்ட சாலைக்கா வலராக
வைத்திட்ட பொறுப்பேற்று மகிழ்ந்தாற்றுங் காவலரை
எய்த்திட்ட எம்போல்வா ரீடேற [2]ஏதுவென
வுய்த்திட்ட நிகழ்ச்சியினை யுளங்கூர வுவந்துரைப்பாம். ௧௧.

77. கிளிநொச்சிப் பதியதனிற் கிழமைமிகு காவலனு
அளியுற்ற கடனுற்றி வருமந்நாள் அவர்நட்ட
தளிர்மிகுதே மாந்தருவொன் றிந்நாளுந் தழைத்தோங்கும்
களிமிகுவர் சாமியார் தருவென்பேர் கறபித்தே. ௧௨.

---

## ௫. சற்குருவைச் சார் சருக்கம்

வேறு

78. முட்டாத சிறப்புடைய மூதூர்கள் பலவற்றுள் முதிர்கலைசேர் வட்டுக்
கோட்டைப்
பெட்பாரும் ஊர்நீங்கி நல்லூரிற் குடியேறிப் பெருகுவயற் பயிர்கள்
செய்து
செட்டாக வாழ்வேளாண் குடிசிறக்கச் சேர்வல்லி புரமென்னுஞ் சீர்த்த
வத்தோன்
மட்டாருங் குழற்பொன்னு ரெனுமாதை மணமயர்ந்து மகப்பேறு
நான்கு வாய்த்தான். ௧.

---

1. Browne  2. இதனை ஏது நிகழ்ச்சி என்பர் மணிமேகலை ஆசிரியர்.

79. நால்மகவின் முதன்மகவாய்ச் செல்லப்ப னெனுநாமம் நன்குற்றே வாழ்ந்த சீரோன்
சீலமுணர் வினின்மிக்க யுவனாகி யரசாங்கச் சேவகஞ்செய் துலவும் நாளில்
மூலவினை யிறையருள்வந் தாட்கொள்ள வுலகபந்தம் முழுதகன்றே ஞானி யானான்
ஞாலமவ னுண்மைநிலை யுணராமற் பித்தனென நவில்கோலம் பூண்டு வாழ்ந்தான். ௨.

80. பொறிவழியாம் புலத்தாசை கெடுத்திட்ட செல்லப்பப் புண்ணியனும் புனித ஞானி
நெறியறியா வுலகரிவன் பித்தேறி னன்கொலென நினைவுகொளப் பயில்வோ னாகிச்
செறிபொழில்சூழ் நல்லையினில் நித்தலுமே நிட்டைசெயத் தேரடியில் நிலைத்தா னன்னான்
அறிவரிய ஞானியென வுணர்வதற்காம் [1]ஏதுவிலை அறியகிலார் மாந்தர் பல்லோர். ௩.

81. வசிகரண வாயுகொடு நிட்டையமர்ந் திருக்கைகுலை வான்செயல்கள் பலவா மிம்பர்
விசிறிகளை விசித்திரமாய்ச் செய்தார்ப்பன் தீஞ்சோறு [2]வெஞ்சனமும் பாகஞ் செய்வான்
பசிகெடவுண் ணாதவற்றைத் தடியடியால் உடைத்திட்டப் பானைசட்டி பார்ப்பான் தன்னுள்
கசிவில்லா தவன்போலக் கனன்றுரைப்பான் விரும்பிமிகக் கந்தையினைக் கட்டிக் கொள்வான். ௪.

82. புத்தகமே தலையணையாப் பன்னுங்கைத் தானிழைத்துப் பொருந்துதுயில் கொள்வான் மற்றோர்
மெத்தவுறு பித்தனென நம்பமெல முணுமுணுப்பன் வெடிச்சிரிப்பும் மிகவுஞ் செய்வான்
அத்தவென வையவென அன்புசெய்தே யணுகுநரை அணைக்காமல் நெடிது வைவான்
சித்துவித்தை கனையெள்ளிச் சிரிப்பன்சிவ ஞானியிவன் செயலுண்மை சிலரே தேர்ந்தார். ௫.

83. யாரையுமே குறிக்கொள்ளா [3]தயாசிதபிக்ஷா கொள்வன் ஏகாந்தத் தானம் போல
வீரமுனி யப்பருறை யிடமாதி போய்க்கொழும்புத் துறைபலசுகால் மேவி மீள்வன்
ஈரமுடன் தனைப்பணிவோர் பணிவைமறுத் தேதேதோ வெலாஞ்சொல்லிப் பேசிக் கொண்டே
[4]ஆரமதி சூடிமனங் கொண்டுசெலும் ஞானிகுணம் ஆய்ந்துணர்ந்தார் யோக நாதர். ௬.

---

1. ஏதுவிலை — காரணம் இல்லை. 2. வெஞ்சனம் — கறி.
3. அயாசிதபிக்ஷா — ஒருவரையுங் கேட்டு வாங்கிச் சாப்பிடாமல் யாராவது தேடிவந்து கொடுத்தால் வாங்கிச் சாப்பிடுவது.
4. ஆரமதி சூடி — ஆரமும் மதியுஞ் சூடிய இறைவனை.

84. பண்டுதொட்டு வருமிந்தப் பவத்தொடக்கை யறுக்குமொரு
பழையதவம் வந்து கூட
ஒண்டொடியார் மண்பொனிவை யெனுமிவற்றி லுறுநசையு
மொழிந்தருளால் ஓங்கும் நீல
கண்டனையே தஞ்சமெனக் கொண்டுளத்துக் காதல்செயுங்
கருத்துடைய யோக நாதர்
அண்டர்தொழு செல்லப்ப முனிவரைத்தாம் இடையிடையே
யணுகலுறும் பேறு பெற்றார். எ.

85. உடன்பயிலு மனமொழிமெய் கொடுதாஞ்செய் செயலெல்லாம்
உமைகேள்வன் செயலே யாகத்
திடமுடனே கொள்வரயல் உயிர்க்குச்செய் நல்வினையுஞ்
சேர்[1]வித்தாம் பிறவிக் கென்று
நடைமுறைச்சத் திநிபாதம் நணுகலுமே கிடந்தாலும் நடந்தாலும்
விழிப்பு றக்கத்
திடையுறினும் எக்கணமும் சிவசிந்தை யுணர்வின்பத்
திடைத்திளைக்குஞ் செல்வ ரானார். அ.

86. நடுநிசியில் விழித்திருந்து தனித்திருந்து தியானித்து நம்பனையே
வாழ்த்திப் பாடிக்
கடுகவுளம் வெருவுற்றே யரற்றுமொழி கேட்டவர்கள் காரணந்தா
னறியக் கேட்டால்
கடுவணிந்த கண்டனையான் வழிபட்டு மனமுருகிக் கதைத்தகதை
யுமக்கே னென்பர்
விடையூர்திக் கன்பினுறு சிந்தைதொழில் மொழியெதுவும்
விள்ளாரெம் யோகச் செல்வர். கூ.

87. இவ்வாறே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தென்றும் எழிலுதை
முடிவி லுள்ள
செவ்வியநற் றூரணையார் சிவத்தடைந்த சித்தத்தார் செயும்பணிகள்
புறத்தே செய்து
எவ்வமிலாக் கடமைதனி லிவர்க்கிணையார் எனவெவரும்
இயம்பவியந் திடவே வாழ்ந்தார்
கவ்வையுல கியற்பணியும் மிகையென்று கழித்தொரீஇக் கருத்துற்றார்
குருவை நாட. க0.

வேறு

88. நல்லூ ரென்றபேர்க் காரணம் நன்கினின் மலரவும்
வல்வி னைப்பகை மாய்ந்துமே மன்பதை யுய்யவும்
அல்லை யாள்[2]களன் அருள்செய வோருருக் கொண்டென
நல்லை வாழ்வதா நாடிச்செல் லப்ப[3]மான் நயந்தான். கக.

89. ஓங்கு செல்லப்ப தேசிக உத்தம மாமணி
தேங்கு மன்பர்கள் சேர்ந்தயல் சூழ்ந்திடத் திகழ்ந்து
வீங்கு பேரருள் வீற்றிருந் தாலென மேயவப்
பாங்க குற்றனர் பண்பமர் எங்குரு நாதர். கஉ.

---

1. வித்தாம் — வித்து ஆகும். 2. களன் — கண்டத்தையுடையவர்.
3. மான் — மகான்.

90. கன்று தாய்ப்பசு கண்டுடன் கடுகிய தன்மையின்
துன்று பேருணர் வூக்குறீஇத் தூண்டமுற் சென்றவர்
நின்ற போதன்பு கூர்பர வசநிலை நேர்ந்தார்
என்ப தன்றியே யிவருளக் கோளென்னென் றுணரோம். ௧௩.

91. ஆர டாநீ யென்றவ ரதட்டியுன் னுள்ளே
பார டாவெனப் பசியபுன் முறுவலும் பூத்துத்
தீர டாவுன பற்றெலா மென்றவர் தெருட்டத்
தேர்வின் நின்றனர் தெய்வநற் றொண்டர்சேர் குழுவில். ௧௪.

92. இருந்த சற்குரு நாதனும் இன்னருள் கூர்ந்து
பரிந்த சிந்தையச் சீடரின் பக்குவம் நோக்கி
வருந்த லொன்று(ம்)நீ யென்றுதம் வலத்திருக் கரத்தைத்
திருந்த மத்தகம் வைத்துயர் தீட்சையுஞ் செய்தான். ௧௫.

93. என்னை யென்றனக் கறிவித்த என்குரு நாதன்
பொன்னை யொத்தசீர்த் திருவடி சூட்டிடப் பூண்டனன்
என்னைப் போலிப்பே றெய்தின ரில்லையென் றேத்தித்
தன்னை யும்மறந் தன்புகூர் தகைசொலற் பாற்றே. ௧௬.

94. அத்த மத்தக தீட்சையின் பின்னரவ் வடிகள்
தத்து வப்பெரும் மந்திரந் தந்தது மன்றி
யித்து ணைப்பெரும் பக்குவம் எய்திடுங் காலம்
உய்த்தி டவ்விவண் உற்றனை யுறுதிகே ளென்றான். ௧௭.

95. எப்பொழு தோமுடிந் துள்ளதிக் காரிய மிதனைச்
செப்ப நாமறி யோமெனச் செப்பியே முழுதும்
ஒப்பி லாதபே ருண்மையென் றோர்தியென் றருளித்
தப்பி லாய்! ஒரு பொல்லாப்பு மிலையெனச் சாற்ற. ௧௮.

96. தார கப்பொரு ளிதுவெனத் தந்தவத் தலைவன்
ஈர நெஞ்சுட னெடுத்துரை வாசகங் கேட்டு
வீர முற்றனர் சீடரும்; வீந்தது பந்தம்;
யார தைச்சொல வல்லவ ரெம்மனோர்க் கெளிதோ? ௧௯.

97. வியப்ப தற்குமிங் கொன்றிலை வியந்திவ ணெய்த
நயப்ப தற்குமிங் கொன்றிலை நானில மதனில்
உயத்த கக்கொளும் உண்மையி துணருதி யென்றே
நயப்பு டன்மொழிந் தாண்டனன் ஞானநற் குரவன் ௨0.

98. ஆமை மீனினம் வாரண மாமிவை முட்டையைத்
தாமே யெண்ணியும் நோக்கியுந் தழுவியுந் தம்முரு
ஆமா றயர்ந்தென வான்மபோ தங்கெட வருண்ஞானம்
தாமாந் தன்மையை நல்கினன் தக்கசீ டருக்கே. ௨௧.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

வேறு

99. தனக்கு நேரிலாத் தனிச்சிவ போகம்
 தவத்தைச் செய்பவர் தமக்கினி தெய்தும்
நினக்கி யாதொரு குறையுமீண் டில்லை
 நீயும் யோகமர் நிட்டையை முயல்வாய்
எனவக் குரவனுங் கிசைத்தொரு நொடியில்
 இதயத் தின்பமார் சாந்தியும் நல்க
மனக்கு நல்லன கொண்டவெம் மண்ணல்
 வழுத்தி நின்றனர் தங்குரு மணியை. ௨௨.

100. செய்ய மேனியன் திரிபுர மெரித்தோன்
 சிறுமான் கன்றினைத் தாங்கிய கோலக்
கைய னுமையுறை பாதிமே னியனே
 கருணை யாற்குரு வாகநல் லூரில்
ஐய னுதிமால் நீக்கவந் தானென்
 னுட்கொள் ளப்படு சிந்தையேய் மகிழ்வின்
பொய்யெ லாந்தவி ரன்னவன் பாதப்
 போதை வந்தனை செய்துளம் நைந்தான். ௨௩.

101. வேத சாத்திரங் கடைந்துறு வெண்ணெய்
 வித்த கவ்வச னங்களுன் குடனே
ஓது சாத்திர தீட்சையுங் கருணை
 யுகந்த பார்வையார் தீட்சையும் பெற்றே
போத முருக்கொடு போந்ததோ என்று
 புகன்றி டத்தகு துங்கமார் குரவன்
பாத பங்கயம் பணிந்தனன் பின்னே
 பரவித் திரிதரு பான்மைய ரானார். ௨௪.

102. "எப்போ தோமுடிந் தது" வெனும் மந்த்ரம்
 "அறியோம் யா" மெனு மிணையிலா மந்த்ரம்
"அப்படி யேயுள" தென்னுமோர் மந்த்ரம்
 "அறிவார் யா" ரென அறைந்திடு மந்த்ரம்
செப்பின் "ஒருபொல் லாப்புமில்" லென்னுந்
 திவ்ய மந்திரம் "முழுதுமுண் மை" யெனச்
செப்பும் மந்திரங் குருவிடம் பெற்றார்
 திரித ருங்குரு நிழலெனத் தொடர்ந்தார். ௨௫.

103. மழித்த லுஞ்சடை நீட்டலும் வேண்டா
 பழித்த தொழித்திடி னென்றவள் ளுவர்சொல்
முழுக்கத் தழுவியே மயிர்முடி நீற்றணி
 மூடு மேனியர் தூயவெள் ளாடை
செழிக்கத் தாங்கித்தன் குருகுறிப் புளத்தே
 சேர்த்திச் சிவநெறி யொழுக்கமும் பூண்டே
[1] ஒழித்தி டம்பமே, மெய்ப்பொரு ளோர்வார்
 உவரோர் பித்தர்கொ லென்றனர் சிலரே. ௨௬.

---

1. ஒழித்திடம்பமே — இடம்பமே ஒழித்து என மாற்றிக் கூட்டுக.

104. குரவன் சென்றிடு மிடந்தொறு மவன்பின்
குலவு மன்பினிற் போந்தவர் பிச்சை
தரினங் கேற்றனர் தகவுடன் தொடர்ந்து
தலந்தொ றும்மழை தாங்கொறு வெய்யில்
உரனு டற்றினும் பசியுடற் றிடினும்
உறுதல் கொண்டுமே கடுநடை புரிவார்
விரவு மந்நியர் வியப்புரை பழிச்சொல்
விண்சொ லிவையென [1]வெறுப்புவப் பெய்தார். உஎ.

105. வணிக வீதிவாய்ச் சென்றிரு வருமே
வண்மைச் செட்டிமார் கடையெதிர் நிற்பர்
[2]எணமே தோகொடவ் விடமிருந் தேகி
இளைக்க [3]விரைஇ நகு லக்கிரி துன்னிக்
குணமார் தீர்த்தமா டாமலும் மீண்டு
குளிருந் தீர்த்தம தாடினு மென்பர்
பணிகொ ளையனும் அண்ணலும் பாங்கிற்
பண்ணு திருவிளை யாடலோ பலவால். உஅ.

106. கொழும்புத் துறையினிற் கோலமார் இருப்பைக்
குளிரேய் மரமுள தின்றுமம் மரந்தான்
விழுப்பே ரறத்தினைப் பண்டையிற் செய்த
மீக்கூர் பயன்கொலோ அண்ணலத் தருக்கீழ்
செழுமா நிலத்தினி லமருவர் அதுதான்
சிறுத்தொண் டர்மனை புக்கிடு துறவி
தழுவு நீதியின் மீண்டு[4]தா தகிக்கீழ்ச்
சார்ந்து வீற்றிருந் தருளிய தகை[5]போன்ம். உகூ.

---

1. வெறுப்பு உவப்பு என்பன எதிர்நிரனிறைப் பொருள்கோளின்படி நின்றன.
2. எணம் + ஏதோ + கொடு = எண்ணம் ஏதோ கொண்டு 3. விரைஇ — விரைந்து; சொல்லிசை யளபெடை. 4. தாதகி — ஆத்தி. 5. போன்ம் — போலும்; மகரக் குறுக்கம்.

வேறு

107. இன்ன வண்ணம் இவரொழுக எழிலார் ஆசான் செல்லப்பன்
அன்ன தன்மை யதுகண்டே யன்பு பெருக முகநோக்கிப்
பன்னு மீசன் தாள்பணியும் பணியில் ஊக்கிப் பெருதவி
மன்ன விமைகண் காப்பதுபோல் மாண்பு பெருகக் காத்தனனால். ௧.

108. மற்றோர் கதிரை வேற்சாமி என்னும் மாணி யொருவரையுஞ்
செற்ற புலன்க ளுடையவராஞ் சீர்சால் யோக நாதருடன்
உற்ற நல்லூர்த் தேரடியில் உயர்மேற் படிக்கட் சமாதிநிலை
பற்ற நிறுவித் தாமிடைபோய்ப் பரிவிற் பார்த்து மகிழ்வானால். ௨.

109. ஊரார் தம்மா லூற்றாரால் உறுமோர் தடையும் நேராமல்
ஏரார் சமாதி நிலையிலவர் இன்புற் றினிது நிலைப்பதற்கே
ஆரா வமுதா வமைகுரவர் அரணாய் நின்று காப்பாற்ற
நீரார் யோக நாதர்திட்டை நெடிதா வளரும் நிலையுற்றார் ௩.

110. துறவின் நிலைத்த தூமனத்தர் துதிசெய் யோக நாதர்தாம்
நறவ மலரேய் தண்டலைசூழ் நல்லூர்க் குரவன் ஆணைவழி
பெறுநற் பிச்சை யுண்டியொன்றே பேணி வாழும் வாழ்வுகொண்டார்
துறவிற் புகுநர் பற்றொழிக்கத் துணைக்கொள் சாதன மென்றோர்ந்தே. ௪.

111. நடந்தார் பெருமான் நல்லூரை நனிவிட் டேகிக் கால்நடையிற்
றொடர்ந்து சென்று கானகமுஞ் சோலை செறியுந் தடவரையுந்
தடங்கள் சூழ்ந்த தண்வயலுந் தனிவெஞ் சுரமும் இகந்தப்பாற்
கடம்ப மணிந்த புயக்குமரன் கதிர்கா மத்தி னருகுற்றார். ௫.

112. வழியிற் பசித்தா லிரந்துண்டும் மழையில் நனைந்தும் வெயில்வெப்பந்
தழுவி வெதும்ப மேனியடி சாலச் சிவக்கும் மெய்வருத்தம்
ஒழித்தும் மனத்தில் விளைப்பயனை யுவந்து துய்க்கும் பான்மையராய்
விழிநீர் பெருகப் பத்திமையே வேண்டிக் கதிரைத் திசைதொழுதார். ௬.

113. மலையின் மருந்தும் மிளிருமொரு மணியும் மந்த்ர வடிவுமாந்
தலைமைக் கதிரை யடைந்துசெவ்வேள் தாளிற் பணிந்து துதித்தப்பால்
அலைசூ ழிலங்கை மூர்த்திதலந் தீர்த்தம் அன்பின் வணங்கியவை
மலை[1]சீ பாதம் [2]முன்னேசம் மாவலி கங்கை யாதியவே. ௭.

114. இவ்வா றையன் துறவறம்பூண் டெங்குஞ் சென்று திளைத்தனரால்
கவ்வை யில்லா வாண்டுசில கழிய வையன் சுற்றத்தார்
எவ்வ மில்லா முனிவோராம் எழிற்செல் லப்பர் தமையணுகி
நைவு பெருக "நம்யோக நாதர் எங்கே?" யெனக்கேட்டார். ௮.

1. சீபாதம் — சிவனொளிபாதம் 2. முன்னேசம் — முனீஸ்வரம். இஃது இப்போது முனீஸ்வரம் என்னும் பெயரால் வழங்குகின்றது.

115. விஞவி ஞர்பால் " இனவேட்கை மிக்கீர் ! யோக நாதனெனுஞ்
சினமால் மயக்கந் தீர்காளை செத்தே போனுன் " எனச்செப்ப
நனவிற் கனவில் உலகொழுக்கம் நனிசெத் தானவ னெனுநுட்பம்
மனசில் ஓர்ந்தே யுணர்கிலராய் மடிந்தா ரெனவே யவர்மதித்தார். ௯.

116. மதித்த சுற்றத் தாரவர்க்கு மடிந்தார்க் காற்றுங் கடனுற்றி
உதித்த கவலை மிக்கவராய் உண்மை யறியா திருந்தனரால்
பதித்த சிந்தைப் பரனடியார் பரவும் யோக நாதருமே
கதித்த துறவால் திரும்பிவரக் கண்ட ஞான்றே மெய்தெளிந்தார். ௧0.

———

## ௭. ஆச்சிரமச் சருக்கம்

வேறு

117. துறவி னேங்கித் துதித்திட மன்பதை
அறனிங் கோருருக் கொண்டடைந் தன்னவர்
செறிகொ ழும்புத் துறைநெடு வீதிபாற்
குறியி டங்குடி கொண்டார் குரவனுர். ௧.

118. இருப்பை மரத்தி னடியக் குறிப்பிடம்;
விருப்பி னமரவ் விருட்சத் தயலினிற்
[1]குருக்கேழ் பொருள்விலை கூறிவிற் பார்கடை
திருத்த கவுண்டு செல்லப்பன் செல்வதே ௨.

119. அடிக்க டிகுரு வனுகுங் கடையது
தடித்த பத்தர் நடாத்து[2]தன் மைத்தனுர்
விடுத்து மற்றதை வேறிடஞ் சென்றனர்
விடுத்த வம்மனை வெற்றிட மாயதால். ௩.

120. ஆன வக்குடில் யோகநா தர்கண்டே
ஊன மின்றி யுறைந்திட வங்கணெம்
ஈன மெல்லா மகற்றத் திருவருள்
தானுந் தூண்டத் தவத்தினில் வைகினுர். ௪.

---

1. குருக்கேழ் — நிறம் விளங்குகிற 2. தன்மைத்தனுர் — தன்மைத்து + அனுர்

121 அன்று தொட்டவ் வகன்குடி சைநனி
துன்று மன்பர் தொழும்பரி சுற்றதாய்
ஒன்று முள்ளத் துயரிய பத்தர்கள்
நன்று சூழும் நலம்மிகப் பெற்றதால். ௬.

122. ஆச்ர மத்தின் அமைதி யொளிர்தர
[1]மீச்சி ரக்கரங் கொண்டடி யார்மிகப்
பூச்சொ ரிந்து வழிபடும் பொற்பதாய்
ஈச்சு ரன்னுறை கோயிலே யொத்ததே. ௬.

123. தொண்டர் வந்து தொழுவதும் அன்பொடு
கொண்டு வந்த கொழுங்கனி கையுறை
அண்டர் கோனுக் கருத்திப்ர சாதங்கள்
மண்டு மடியார்க்கு வகுத்துட னருளுவார். ௭.

124. ஏவ ருஞ்சென்றங் கின்புற வண்ணலை
மேவு மன்பின் வழிபடல் மேயினர்
தேவர் வாய்மையிற் றிருவருட் செல்வர்தாம்
ஓவி லாசி உறுதிகள் கூறினர். ௮.

125. கடிவ தற்குரி யோரைக் கடிவதும்
மிடித விர்த்தனர் வினைகளைத் தீர்ப்பதும்
[2]அடிமி சைவிழுந் தோருளத் தாவன
கடிதி னேர்ந்துசெய் கருணையுங் கொண்டனர். ௯.

126. நிறைவின் நீரதிவ் வாச்சிர மத்தினை
மறையும் வேதன்மால் தேவரும் வணங்கித்தாம்
முறையி டும்பரன் [3]சங்கமக் கோயிலென்
றறைவ தன்றிவே றென்சொல லாகுமே. ௧0.

வேறு

127. ஆச்சிரம மாயமைந்த வணிபெறுமக் கோயிலிலே
மூச்சுப்பேச் சற்றமரும் மோனநிட்டை யோகமுனி
வீச்சுவெண்மை நீற்றணியும் வெள்ளாடை யுடுப்பதுவும்
மீச்சிரங்கொள் மயிர்முடியும் வெகுசாந்த முகமுமுளார் ௧௧.

1. மீச்சிரக் கரங்கொண்டு = சிரம் + மீ + கரம் + கொண்டு. 2. அடிமிசை விழுந்தோர் ...... கருணையும் — வாய்விட்டுச் சொல்லக்கூசிப் பெரியோரைத் தரிசித்தாலே போதும் என்று வந்து வணங்குவோரும், மனத்திலே உள்ளவற்றைச் சொல்லாமலே வணங்குவோருமாகிய இவர்கள் சொல்லாமலே நினைத்த குறிப்பறிந்து, அவர்களுக்குத் தேவையானவற்றைத் தாமாகவே தமது வருங்கால உணர்ச்சியினால் உணர்ந்து நீக்கியருளும் கருணையும். 3. சங்கமம் — (குருலிங்க) சங்கமம், சிவனடியார். தாவரக் கோயில் ஒரே இடத்தில் உள்ள கோயில். சங்கமக் கோயில் — நடமாடுங் கோயில்.

128. தமைமறந்த நிட்டைகலை சமயமெலா மன்னவர்தாம்
[1]கமைவுடன்சே ரன்பருக்குக் கருணையுஞ்செய் தருள்வார்த்தை
எமக்கென்றும் இறைசிவன்காண் எம்பெருமா னடியவர்யாம்
நமக்கவன்றன் பணிகடனும் நாதனெமைத் [2]தாங்குவன்காண். கஉ.

129. அடைவதுமோ ஒன்றுமில்லை இழப்பதுவோ வதுவுமில்லை
முடிவதுவோ வென்றுமில்லை முளைப்பதுவு மென்றுமில்லை
சடையவன்செய் யாணைதன தாகமமும் வேதமுமாம்
உடையவனை [3]மறவாதவ் வொழுக்கநெறி கைக்கொள்வீர். கங

130. பொல்லாப்பிங் கொன்றுமில்லை புவனமவ னூடங்கு
கொல்லாமை கள்ளாமை கொண்டினிது வாழுமினோ
நல்லார்கள் நடுவினிலே நனியிருக்க நாடுமினோ
எல்லாரும வாழ்வதற்கிங் கினியநல வழியிதுகாண். கச

131. எங்கெங்கும் பறந்துபோய் எறிகடலின் நடுவங்கம்
தங்குங்கூம் புறுகாகம் தரைகாணு மீள்வுறுமால்
இங்குள்ள பலசமய நெறிபுக்கும் இப்பிறவி
[4]கங்குகரை காண்டலின்றும் சைவநெறி கரைசேர்க்கும் கரு-

132. என்றினிதே யின்னுரைகள் எடுத்துரைக்குந் திருவாயும்
நன்றினிது சொல்கின்ற நலங்கிளருந் தோற்றமுமாய்
என்றுமென துள்ளத்தே யெழுத்வைத்தாற் போன்றிலங்கக்
குன்றுறையுஞ் சடையவன்றன் கோலமுடன் வைகுறுநாள் கசு.

133. வண்டுமது போதின்வாய் மலர்த்திநுகர்ந் தார்ப்பனபோல்
தொண்டர்களும் நாடியவற் றெழுதுபணி பேணலுற்றார்
அண்டினவர் நம்யோக நாத[5]னருள் ஆசிகளால்
விண்டுமனக் கவலைதுன்பு மீளவெங்கும் பரம்பிற்றால் கஎ.

134. அந்தணரே யரசியலோர் அமைச்சர்களு மண்டினர்கை
வந்தசெட்டின் வணிகரொடு வயலுழுவோர் அணுகினரால்
சந்தமுற இல்லறத்தின் மாண்பினருந் தாமணைந்தார்
வந்தணையோ கந்நிலைத்தோர் துறவிகளும் [6]மகிழ்ந்துற்றார். கஅ.

135. நாடிவரு மவ்வவரின் நனிவேட்கைப் பயனுறுத்திக்
கோடியவாக் கொளுமாந்தர்க் கொண்டலையம் புலவேடர்
ஈடழித்தும் மலமாசின் எழுஞ்சத்தி தொலைப்பித்தும்
ஆடவரும் மகளிருமிங் கருளறத்தின் வாழ்வுறுத்தார். ககூ.

---

1. கமைவு — அடக்கம் 2. தாங்குதல் — பரிபாலித்தல்; வேண்டத்தக்கதறிதல், வேண்டமுழுதுந் தருதல் 3. மறவாது — "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை என்று சிவன்றாளினை" என்றபடி என்றும் மறவாது.
4. கங்கு — எல்லை. கங்குகரை — எல்லையாகிய கரை என்பதாம். 5. அருள் ஆசி — அருளும் ஆசியும்; அருளால் இரங்கி வேண்டும் பொருள் முதலியவற்றை ஈதல்; ஆசி — இன்ப வாழ்வுக்குரிய இனிய நல்லுரை வழங்கல்.
6. மகிழ்ந்துற்றார் — உற்று மகிழ்ந்தார் என விகுதி பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்க.

## அ. செல்லப்ப சுவாமிகள் சிவபதம் எய்திய சருக்கம்

### வேறு

136. ஆயுங் கிறித்த வப்தந்தொள் ளாயி ரத்தோர் பஃதாண்டில்
சேயின் நல்லூ ராலயத்தின் தேரடிப் பாங்கெம் யோகர்க்கே
ஏயுந் திட்சை யுபதேசம் இயற்றுசெல் லப்ப முனிபின்னர்த்
தாய்பின் தொடருஞ் சேய்போலத் தனைத்தொடர் சீடரைக்
கடைக்கணித்தான். ௧.

137. முறையால் யோகம் பயில்சீடர் முதிர்பக் குவங்கண் டகமலர்ந்த
இறையாங் குருசெல் லப்பமுனி எதிரு மன்பர் குறைதீர்த்தும்
முறையின் வேண்டும் நீதயறம் முன்னி மொழிந்துஞ் சில்லாண்டால்
நெறியின் யோக முறையாலே நிறைசிவ கதிபதம் பெற்றானல். ௨.

138. துறந்தே யுடல்விடு நாட்புதுமை சொல்வ ருலகர் முனிவனுமே
நிறைந்த அன்பால் வருமொருவர் நிலவ வருளி விடுத்தவுடன்
குறைந்த நாழி தன்னுள்ளே கூட்டின் நீங்கு புட்போலப்
பிரிந்த துயிரு மப்போது வெடிபோ லோசை பிறங்கிற்றே. ௩.

139. குரவன் நோய்வாய்ப் பட்டதையெங் குருவாம் யோகர் கேட்டாங்கே
குரவற் பார்க்கச் சென்றவர்க்குக் [1]கூற்றாற் கலந்தேன் விசாரிப்பான்
விரைவில் வந்திங் குறுவானேன் விரவிப் பார்க்க என்னுண்டோ?
உடனா முணர்வின் ஒடுங்கியுள்ளே என்னை யுன்னிற் காணொன்றான். ௪.

140 சொல்லா யிரத்துத் தொளாயிரத்துப் பதினைந் தெனுமச் சுபவாண்டில்
[2]எல்லுத் தரஞ்செல் லயனமதில் ஏர்பங் குனியாந் திங்களதிற்
பல்லோர் பரவும் அசுவினிநாள் பரமன் செல்லப் பக்குரவன்
நல்லோர் மதித்து வழிபடவே நல்லூ ரதனிற் [3]சிவமுற்றான். ௫.

141. இறப்பும் பிறப்பும் இலாக்குரவன் இருந்தபடியே யுளனென்று
மறவா துன்னிற் காணொன்றே வகுத்த வாணை வழியோகத்
திறத்திற் பொலிதம் மாச்சிரமந் திரா துறைந்து சிவயோகர்
விறற்றின் குரவன் பதம்போற்றி வியந்தார் தினமும் அவன்புகழை. ௬.

142. இன்ன பரிசங் கிருந்தருளும் எழிலார் யோக வள்ளலுமே
சொன்ன திருவாச் சிரமத்தில் தொண்டர் துதிக்கப் புகுந்தருளும்
நன்னாள் ஆண்டு தொளாயிரத்துப் பதினான் காக நவின்றிடுவர்
அந்நாள் முதலா வாங்கொளிர்வ அரன்துதி பூசை யோகநிலை. ௭.

---

1. கூற்றால் - சொல்லால்.

2. எல் + உத்தரஞ்செல் + அயனமதில் - சூரியன் வடதிசை நோக்கித் திரும்பிச் செல்லுகின்ற உத்தராயண காலத்தில்.

3. சிவம் - முத்தி.

143. தந்தை யனைய தவக்குரவன் தமக்கு ஞானந் தருநாளில்
சந்தங் கமழுந் தருவிற்செய் தருபா துகையாந் திருவடிகள்
எந்தை யினிதா வமைப்பித்தங் கியல்பா வணங்கி யியற்றினரால்
சிந்தை கவருந் திருவடியின் தொடர்பா லுள்ள திருப்பூசை. அ.

வேறு

144. திருவ டிப்பெருஞ் சீர்த்தி யெமைநிகர்
ஒருவ ராலுணர் வொன்றிடக் கட்டுரை
தருவ தொல்லுமோ சத்திய ஞானமே
[1] திருவ டிய்யெனச் செப்பிடும் நூல்களே. கூ.

145. திருவ டிச்சிரஞ் சூட்டப்பெற் றூரப்பர்
மருவு வல்வினை மாளப்பெற் றூரவர்
திருவ டிப்பெருந் தீட்சை யுடன்மணி
அரிய வாசகர் அடிப்பூசை கொண்டனர். ௧0.

146. அருணை டம்புரிந் தருள்வதுந் திருவடி
இருமை யின்பம்வீ டீவதுந் திருவடி
திருக்கொள் சுந்தரர் சிரத்துற நீண்டதும்
அருந டத்தின்ப மளித்ததும் திருவடி. கக.

147. திருவடி யேசிவ மாவது தேர்ந்திடில்
திருவடி யேசிவ லோகஞ்சிந் தித்திடில்
திருவடி யேசெல் கதியது செப்பிடில்
திருவடி யேதஞ்சம் உட்டெளி வார்க்கென கஉ.

148. திருவ டிப்பெருஞ் சீரதைச் செப்பினர்
திருவ ருள்வழிச் சென்றநன் மூலனர்
திருவ டித்தனி ஞானஞ் சிவமாக்கும்
திருவ டித்துதி பூசைசெய் யென்பரால். கங.

சருக்கம் எட்டுக்குந் திருவிருத்தம் 148.

முதற் காண்டம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்,

---

1. திருவடிய்யென என்பதில் ய் சந்தம்பற்றிய விரித்தல் விகாரம். அடுத்த செய்யுளின் முதலாம் அடியில் வருவதும் அவ்வாறே சந்தம்பற்றிய விகாரமாம். செய்யுள்கள் 147 உம், 148 உம் குளகம். 148 ஆம் செய்யுளின் ஈற்றடியிரண்டும் முடிந்தது முடித்தல் என்னும் உத்தியால் தொகுத்து முடிக்கலாம்.

உ

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் காண்டம்

## ௬. செல்லாச்சியம்மை சருக்கம்

வேறு

149. சுன்னாகத் துயர்வேளாண் குடும்பந் தன்னில்
தோன்றிவளர் செல்லாச்சி யம்மை யென்பார்
பன்னாகப் பணிபூண்டோன் றன்னை யென்றும்
பத்தியுடன் பரவுகின்ற பான்மை மிக்கார்
முன்னாகும் பிறப்பிற்செய் புண்யத் திம்மை
மூள்பக்தி யோகநெறி பூண்ட வம்மை
பின்னார்செஞ் சடையண்ண லருளாற் றம்பால்
விளங்குபல சித்திவினை வாய்க்கப் பெற்றார். ௧.

150. இல்லறத்தி லம்மைதன் பதியைப் பேணி
இயல்புடைய மூவர்க்குந் துறந்தார் துவ்வார்
செல்கதியற் றிறந்தாராம் திறத்தர் கட்குஞ்
செய்கடன்கள் தென்புலத்தா ராதி யாகச்
சொல்புலத்தைந் திறனோம்பல் செய்தா ரில்லின்
தூவிளக்காய் மகாரிருவர் குலவி ளக்கா
நல்லநிலை வாழ்ந்ததொரு வியப்போ நாதன்
நல்லுயிர்விட் டேகுநா ளறிந்துஞ் சொன்னார். ௨.

151. கணவனார் பிரிந்ததற்பின் கற்பின் வாழ்க்கைக்
காரிகையார் மேற்கொள்ளுங் கைம்மை நோன்பின்
உணவுதனைச் சுருக்குதலும் உறங்குங் காலை
ஒண்பாயல் வேண்டாது தரையின் மீது
பணிவுகொள உறங்குவதும் பாலிற் றூய
பண்பாடை யுடுப்பதூஉம் பொற்றோ டாதி
அணியனைத்துந் தவிர்வதூஉம் ஆகி வாழ்ந்தார்
அரன்சின்னத் திருநீற்றை யணிந்தார் மேனி. ௩.

152. சிவலிங்க மொன்றருளாற் கிடைக்கப் பெற்றுத்
தினமுமதிற் பூசைதுதி செய்பே றுற்றார்
எவர்வீடும் எவ்விடமுஞ் செல்லா மற்றம்
இனசனக்கொண் டாட்டமதூஉம் இறந்து வாழ்ந்தார்
ஐவர்புலனைந் தவாய்ச்செல்லும் பொறிய டக்கிக்
கருத்தொடுங்கிப் பலநாழி நிட்டை கூடித்
தவவலிமைக் கனலோங்கத் தலையி லுள்ள
சடைநிலத்துத் தோயமிக நீண்ட தம்மா. ௪.

153. புலித்தோலும் நிலந்தோய நீண்டே யோங்கும்
புனிதமயச் சடையும்வெண் ணீற்றுப் பூச்சும்
பலித்தவாக் கும்வாய்மைப் பண்புங் கொண்ட
பத்தினியார் தவமகிமை பரவிற் றஃது
நிலவலயந் தன்னினடு நாட்டிற் பண்பு
நிறை[1] திலக வதியரன்ருள் தொழுது தொண்டு
பலபுரிந்து தம்பிமரு ணிக்கி யாரைப்
பரசமயத் தின்மீட்டாள் தகைமை யொக்கும். ௫.

154. இறையருளாற் பெற்றவிந்தத் தவத்தின் வாழ்க்கை
இயைந்தபே ரம்மையுமே எங்க ளையன்
நிறையாளன் யோகமுனி யருள்பெற் றேரே
நீளிலங்கை வாழவரு தவத்தின் தூய்மை
பறைசாற்ற வரும்பான்மை இவ்வா றற்றேர்
பலரெங்கள் யோககுரு வருளா லென்றே
அறைகுவதும் மிகையாமோ மலையே யில்லா
அணியாழ்நாட் டருங்குணத்தின் மலையே போல்வார். ௬.

155. தீராத நோய்கள்பல தீர்த்தும் அன்பால்
தீனர்களாய்த் தமையடைந்தோர் தம்மைக் காத்தும்
ஆராத கருணையொடு மவரைத் தேற்றி
யன்பினே டருள்புரிந்தும் அவனிக் கேயோர்
நேரான சிவபக்தை யாகும் அம்மை
நிலவுலக வாழ்வொரீஇப் போன ஞான்று
சீரான முறையிலுடல் தகனஞ் செய்யச்
சீர்க்குரவன் யோகமுனி பணித்திட் டாரே. ௭.

156. சொன்னவிந்த அம்மையுமே தூய சித்தி
சொலற்கரிய விதமாகப் பெற்றி ருந்தார்
பன்னகா பரணன்றன் அருளும் பெற்ருர்
படிமீதி லுள்ளோரைத் தெருட்டி யுள்ளார்
என்னவா றுலுமுளத் தூய்மை யற்றேர்
எவரையுமே தெரிந்தணுக வொட்ட கில்லார்
மன்னவரே யாலுைம் மதியா தென்றும்
மனந்திருத்து கழற்றுரைகள் வருக்க வல்லார். ௮.

---

1. திலகவதியார் தமக்கு நிச்சயித்த கணவன் இறந்த பின்பு தம் ஆயுட்காலத்தைச் சிவவழிபாடும் சிவத்தொண்டுகளுஞ் செய்து தவச் செயலாற் கழித்தார். அதுபோல இவ்வம்மையாரும் கணவனிறந்தபின் எஞ்சிய ஆயுட்காலத்தைச் சிவத்தியானமும் வழிபாடுஞ் செய்து, தவநெறியிற் கழித்தமை பொதுத்தன்மையாகும்.

157. அடியவர்கள் தன்மைகளும் அவரை யாளும்
ஆதியருட் டிறந்தானும் அளத்தற் காமோ ?
முடிபுதனை ஏதுவின்யாம் முடித்தல் வேண்டா
[1] முன்னரேயஃ தாளுடைய பிள்ளை சொற்றார்
படியின்மிசை யருள்பெற்றோர் பான்மை யெல்லாம்
பகரினினி வரும்பத்தர்ப் பூறு சாரம்
அடியொற்றிக் கொள்ளமுன்மா திரிகை யாமால்
அன்னாரின் அடிச்சுவட்டை அநுச ரிப்பாம். கூ.

158. கண்டவெலாஞ் சிவமேயாய்க் கண்டே யெம்மைக்
காணவைக்குந் தனிக்குரவன் கழல்கள் போற்றி
விண்டவெலாம் மெய்ப்பொருளே யாகுந் தெய்வ
விழுப்பொருளே யாகவுரை மேலோன் போற்றி
அண்டர்களும் பெறற்கரிய வருளே போற்றி
அன்பர்களை யென்றென்றுங் காப்போன் போற்றி
முண்டகநற் பாதங்கள் நோவ முன்னாள்
முருகனுறை கதிர்காமம் நடந்தோன் போற்றி. க0.

---

## க0. கதிரை யாத்திரைச் சருக்கம்.

வேறு

159. மின்னும் வேற்கைப் பிள்ளை யாக
விளங்கு கந்தன் கதிரையை
முன்னித் தாம்செய் யாத்தி ரைக்குள்
முதல தின்மேற் புதுமையை
மன்னு யோக குரவர் பிற்கால்
வருகை தம்பாற் செயுமன்பர்
உன்னி யேற்கும் அறிவ தாமென்
றுணர்ந்து சொற்ற விதமிதால். க.

---

1. "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா" என்று ஆளுடையபிள்ளையார் தமது திருப்பாசுரத்திற் கூறியது கொண்டுணர்க.

160. ஆயி ரத்துத் தொளாயி ரத்தோர்
பஃதென் ஆண்டில் ஐயனை
தூய தங்குரு வானை யின்வழித்
துறவி யாகிப் புறமூலாய்ப்
போய யாத்திரை கதிரை நோக்கி
மற்றோர் முசிலிம் புருடரும்
ஆய மந்திர தந்தி ரங்கள்
அறிந்து ளேனென் றினைந்தனர். உ.

161. கோண மாமலை வழிய தாகக்
குறுகி மட்டக் களப்பினிற்
சேனு லாவு மரங்கள் சேர்ந்து
செறிந்த நீர்மைப் பொத்துவில்
கான லாம்நடுக் கானி டைவழி
மறித்து நின்றகாட் டெருமையுள்
பேண லில்லதொன் றிவ்வி ரண்டு
பேரெ திர்க்கத் தொடங்கிற்றே. ங.

162. மந்தி ரந்தெரி முசிலிந் தம்முடை
மந்தி ரம்பலி யாமையால்
முந்தி யங்கொர் மரத்தி லேறி
முடங்கி யஞ்சி யொடுங்கினர்
வந்த மேதி யெதிர்நின் றெங்குரு
மாறு நோக்கலின் மேதியும்
செந்த மூல்வல நோக்க மஞ்சித்
திரும்பி யோட்ட மெடுத்ததே. ச.

163. ஊனஞ் சேர்பசு ஞானங் கொண்டே
யுளுற்று பாவ மலைத்தையும்
ஈனந் தீர வெரிக்க வல்ல
எங்குரு நோக்குக் கெதிரதாக்
கான மேதி யணுக லொல்லுமோ?
கதறி யோடி யகன்றதே
ஞான வீரக் குரவர் பார்வை
நக்கு முடிமரம் உற்றதே. ரு.

164. மரத்தி லேமறை மந்திர வாதி
மரத்தை விட்டுட னிறங்கியே
சிரத்தை யோடெம தையன் முன்னர்ச்
சிரத்தைத் தாழ்த்திக் கரங்களால்
உரத்த தோளொடு தோள ழுந்த
உளங்க ளிப்புறத் தழுவிமேல்
தரத்தின் நின்னைவெல் தகுதி சான்ற
தன்மை யாளரில் லென்றனர். கா.

165. அண்ணா லிவ்விதம் அனுகு மூறுகள்
அனைத்தும் வென்று கதிரையில்
நண்ணரிப் போற்றிநல் லருட்கண் பார்வை
நயந்து மேல்விடை கொண்டு[1]மீன்
வெண்ணரி யம்பாந் தோட்டை மாத்தறை
ஈடில் காலி வழியதா
மண்ணரிஸ் மேம்படு கொழும்பு சேர்ந்து
மருவி வைகினர் எங்குரு. ௭.

166. கொழும்பிற் கொச்சிக் கடையி னிற்கரி
வேலை செய்பவர் கூட்டத்தில்
தொழும்பர் போல்நடை கொண்ட ரன்பதம்
தோய்ந்த சிந்தையிற் றெருக்கரை
பழுதில் நித்திரை யாகு மல்லொடு
பகல்க ழிஇப்பல நாட்செலத்
தொழுந்த கைக்குரு கண்டி செல்வழித்
தொடர்ந்து செல்கைமேற் கொண்டனர். ௮.

167. என்றிவ் யாத்திரை கொண்டுறுந் திங்கள்
இருமூன் ருக இடைதனில்
துன்று முடைபழுப் பேறியே கந்தல்
துறுமிப் பாதம் நடையினிற்
கன்றி யும்மனங் கலங்க லேயின்றிக்
காலை போல நடந்தனர்
சென்று மாத்தளைச் செல்வ மாநகர்
சேர்ந்த னர்திரு வருள்கொடே. ௯.

வேறு

168 இத்த கைமையின் எம்முனி சேறலும்
பத்தர் துன்புமை பங்கின னேர்ந்துதன்
சித்தம் பூத்துச்செய் சீரருள் ஆடலொன்
றித்த ரையறிந் தேத்திடக் கூறுகேன். ௧௦.

169. மலைய கத்திற்பல் லாண்டுகள் வாழ்ந்தனன்
நிலையு றப்பெறும் நீர்த்தர சுத்துறை
நலந கர்ப்பெரு மராமத்து நற்செயற்
றலைவ னுஞ்சர வணமுத் தென்பவன். ௧௧.

170. அரன்ற ளைப்பணி யன்புமி தாரனுன்
இரவி னிற்றுயி லேற்ற கனவினில்
தெரியத் தோன்றிய சிவன்எம் முனிவரர்
பருவ ரற்றிரு வுளங்கொடு பகருவான். ௧௨.

1. மீன்வு + எண்ணி.

171. எந்த மடியவன் இளையில் துறவினன்
கந்தன் கதிரைக்குக் கால்நடை யாகப்போய்
வந்து ளான்உடல் வருந்திக் களைத்தனன்
அந்த நம்பியை யாதரித் தோம்புதி. கங.

172. இன்னும் அன்னவன் நடக்க இசைகிலேன்
மன்னும் நோன்பில் வலுத்த வவன்றனைத்
தன்ன தூர்க்குப் புகைவண்டி தன்னிலே
இன்னு ரைகொளீஇ யேற்றுதி யென்றனன். கச.

173. விழித்தெ ழுந்தமெய் யன்பன் சரவணன்
விழிப்புக் கொண்டெதிர் பார்த்து வருகையைப்
பழுத்த துறவினெம் பரமன் வருவழி
இழுத்த காந்தத்தின் ஊசிபோல் ஏற்றனன். கரு.

174. அண்ணை லையவன் அன்பால் வணங்கித்தி
வண்ண மேனியன் வழங்கிய வானையை
யுண்ம கிழ்வுடன் உரைத்திட ஐயனும்
அண்ண லானைநன் ருருக [1]என்றனர். கசா.

175. கந்தை யாடையைக் களைந்து கவினுறச்
சந்த மாரும்புத் தாடை தரிப்பித்து
முந்த வெந்நீர் முழுக்குமங் கார்வித்து
முந்தைப் பாக்கியம் முன்னி மகிழ்ந்தனன். கஎ.

176. ஒருதி னத்தின்மே லொருவர் இல்லினில்
தரிப்பொ [2]ரதிதித் தகவன் றென்றையன
அரிய பத்தர் அளித்த நிதியுளே
உரிய பயணச் செலவினை [3]யுற்றனர். கஅ.

177. போற்று செலவுடைப் புண்ய குரவனோர்
மாற்ற மின்றியவ் வழிசெல வுட்கொளீஇ
நீற்றைப் பூசிய நிமல னருளினைப்
போற்றி யாழ்நகர்ப் புகைர தங்கொண்டார். ககூ.

178. முற்று மாசைதீர் முனிவ ரிவரென
அற்றை நாளையற் கண்டே சரவணன்
பற்றிற் செய்விருந் தோம்ப வதுபற்றிச்
சொற்ற குரவன்வாக் கெட்டிற்றுத் தூயர்க்கே. உ0.

---

1. ஐயன் என்றனர் — உயர்த்தற் பன்மை கருதிவந்த பால்மயக்க வழுவமைதிச் சொல்.

2. அதிதி — (அ + திதி) விருந்தினன். ஒருவர் இல்லில் ஒரு நாளின்மேற் றங்கி யிராதவன் என்ற காரணம்பற்றி வந்த பெயர்.

3. உற்றனர் — பெற்றனர்.

வேறு

179. கதிரையை நோக்கி யண்ணல் கடுவழி நடந்த காலை
அதிசயம் என்னத் தக்க வருஞ்செயல் பலநி கழ்ந்த
முதியவூர் வெருகல் ஆற்றின் முன்னதாச் செல்லும் போதில்
எதிருறு வயிற்று நோயால் இடர்மிக எய்தி னரால். உக

180. வயிற்றினைக் குடைந்தும் பல்கால் வயிற்றினி லுளைவு கண்டும்
குயிற்றிய துன்பஞ் செய்த கொடியவந் நோயா லண்ணல்
பயிற்றிய நடையுஞ் சோர்ந்து பயணத்தைச் சிறிதே தாழ்த்திச்
செயற்கருஞ் செயல்பு ரிந்த செல்லப்பர் தாணி னைந்தார். உஉ

181. வெருகலாற் றினிலே தண்ணீர் குடிப்பதுங் கரையில் மேவும்
உருகெழு மணலிற் சற்றே யுறைவது மாகி ஐயன்
சிரமமுற் றிருந்த காலை சென்றவோர் வண்டிப் பின்னுக்
கரம்பிடித் தேந டந்தார் கழிந்ததே வருத்தந் தன்னால். உங

182. செல்லப்பர் கருணை யாலோ சிவபிரான் கருணை யாலோ
மல்லுற்ற வருத்தந் தீர்வின் வழுத்தியே ஐயன் சென்றார்
அல்குநோய் குறையோ தன்பர்க் கருள்வழி காட்டு மையன்
புல்லுமூழ் எதிருந் தம்நோய் போக்குமா றுருவி யப்போ? உச

183. மற்றுமோ ரிடத்தி லையன் வழியிலே வெயில்க னற்றச்
செற்றிடு பசியுந் தண்ணீர்த் தாகமுஞ் சேர்த்து வாட்ட
உற்றிடு மிளைப்பி னாலே யோரிடத் தமர்ந்து கொள்ளச்
சொற்றிடு வேடர் சாதித் தூயவர் கண்ணுற் றாரால். உரு

184. தாகத்தைத் தீர்க்கத் தண்ணீர் தருகென வையன் கூற
ஆகுமோ வெம்பால் நீரேற் றருந்தல்; யாம் வேடர்; நல்லீர்;
ஆகவின் தருதல் பாவம்; அஞ்சுதும் என்ன ஐயன்
ஆகும்; தம் குருவி னாணை யறிவுறீஇப் பருகி னரால் உசு

185. [1]மண்டனில் வேட ரான கண்ணப்பர் வழங்கும் ஊனும்
திண்டிறற் குகனும் வேடன் செறித்திடு முணவும் பண்டே
அண்டர்நா தனும யோத்தி யண்ணலும் உவந்தார் ஐயன்
உண்டிகொண் டுவந்தார் வேடர் உவகையிற் பணிந்தா ரங்கண். உஎ

186. உயிர்கொளும் மாண்பை யன்றி உடற்குறுங் கீழ்மை மேன்மை
வயிரமாக் கொளாமை ஐயன் மனத்துற வறச்சீர்க் கொள்கை
அயர்வறப் பூண்ட வாழ்வாம்; அனுக்கரெஞ் ஞான்றுங் கண்டார்
உயர்குணம் இனைத்தைப் பன்னி யுரைத்திடல் எமர்க்கிங் காமோ? உஅ

---

1. இச்செய்யுளில் முன் இரு வாக்கியங்களுக்குமிடையே "அதுபோல" என்னுஞ் சொல் அணியிலக்கணம் பற்றி விரித்துப் பொருள் கொள்ள நின்றது. வடமொழியில் இது பிரதிவஸ்தூவமாலங்காரம் எனப்படும். தண்டியலங்காரகாரர் இதனை மறுபொருளுவமையணி என்றும், விசாக-பெருமாளையர் தொடர்முழுதுவமையணியென்றும் மொழிபெயர்த்துக் கூறுவர்.

187. இன்னுயி ரான வெல்லாம் இறைவனின் வடிவ மென்றும்
உள்ளிடும் மெய்யு ணர்ச்சி யுற்றிடி லின்ப மென்றும்
மன்னுயி ரெல்லாந் தம்போல் மதித்தொழு குவதே நீதி
என்னவும் பாடும் ஐயன் ஏதுதான் செய்வார் வேறு. ௨௯

188. ஏழையா யிறிக்ஷா வண்டி யிழுத்திடும் ஒருவன் எங்கள்
வாழ்விற்கண் கண்ட தெய்வம் இவரென ஐயற் சுட்டித்
தாழ்விலா அன்பு பூண்ட தன்நல னுரைப்ப வையன்
ஏழைகள் மீதுங் கொண்டாள் ஈரமெங் [1]கணிப்புள் ளாமோ? ௩௦

189. நம்பியுங் கொழும்பு தன்னில் நண்ணரிய காலை யங்கே
யம்புவிக் கினிய ஆனைக் குட்டியென் றறையுஞ் சித்தர்
எம்பெரு முனிவன் கையில் எழிற்சதம் ஐந்தை யீந்து
தும்பிக்கை யாகும் ஈது நம்பிக்கை யென்று சொற்றார். ௩௧

190. சேர்அரு ளாச லத்தின் சீர்த்திரு மனைக்குஞ் சென்று
சோர்வுறீஇப் பிச்சை யேற்றார் சுவாமியின் பெருமை யந்நாள்
தேர்ந்திலர் அதிதி பூசை செய்தனர் சில்லாண் டின்பின்
ஓர்ந்தனர் மதித்தார்; பல்லாண்(டு) ஊழ்முறை வாழ்ந்து மாண்டார். ௩௨

191. இறந்தபின் கணவர் எய்து கதியென்னென் றுசாவில் லாட்குச்
சிறந்தவோர் கதியி லேதான் சேர்ந்திருக் கின்றார் அன்னார்
குறைவுறுங் கவலை வேண்டா குலாவுநின் கடன்க ளெல்லாம்
திறம்பட வியற்று கென்றே செப்பின ரெங்க ளையன். ௩௩

---

1\. கணிப்புள்ளாமோ — கணிப்பு + உள்ளாமோ — கணிப்பு — அளவிட்டுச் சொல்லுதல்; உள்ளாதல் — உட்படுதல் அல்லது அடங்குதல். உள்ளாமோ — அடங்குமோ? ஓகாரம் எதிர்மறை. அடங்காதென்றபடி.

## கக. தலயாத்திரைச் சருக்கம்

வேறு

192. வாழ்வு நடாத்தலோர் யாத்திரை யாமென
வாய்மை கூறையன் ஈழத்தி லன்றியும்
சேழ்மி குந்தலம் பாரத நாட்டினில்
கிளைத்த பற்பல வுற்றரன் பாதங்கள்
ஊழிற் சிரங்கொளி இச் சிந்தையி லன்புமிக்
கூற்றெ டுத்தவெள் ளத்தினி லாழ்ந்துமேற்
சூழும் பேரரு ளின்பத்தின் பேற்றினைத்
தொடர்ந்து பெறவுளங் கொண்டனர் காதலால். க

193. தக்கி ணத்துள மூர்த்திதீர்த் தந்தலந்
தருமு றைப்படி மூழ்கி வணங்கியே
மிக்க வுத்தர திக்கினும் எய்தியே
விரிச டைப்பிரான் காட்சிபெற் றின்புறீஇ
இக்கண் சேது விராமன நீச்சரம்
எழுவா யாகச்சீர்க் காசிய தந்தமாத்
தக்க நற்றல யாத்திரை செய்தனர்
சச்சி தானந்த இன்புற ஐயனே உ

194. வண்ட மிழ்வளர் நாடுக ளன்றியும்
வான்ம லைவளர் கேரள நாட்டினும்
பண்ட ழைமிசைப் பாடற்றெ லுங்கினும்
பண்பிற் [1]காவிரி சந்தனக் கன்னடம்
விண்டு மாகயி லைமிம வான்மலை
வாய்க்குஞ் சாரலின் விளங்கு தலங்களும்
அண்டித் தீர்த்தமும் மூர்த்தியுங் கண்டையன்
அன்பின் ஆனந்தம் மீதுற லாயினர். ௩

195. கேர ளத்திசைக் கொல்லத்து மேவினர்
கேண்மை கொண்டநல் லன்பர்கள் எங்குரு
பேரிற் கொண்டவோர் பத்திவிஸ் வாசமும்
பெறுநல் லாசியும் சொற்றிடக் கேட்டனம்
ஆரும் நல்லருள் அண்ணலு மங்கிருந்
தற்ப னேனையோர் பொருளென வுன்னியே
தேரத் தீஞ்சுவை வாசக அஞ்சலைச்
செங்க ரங்கொடு நீட்டியென் பாலுய்ந்தார். ச

1. கா - சோலை.

196. அன்ப ராயனு கெவ்வேவர்க் கும்மண்ணல்
    ஆன்மி கத்துயர் போதனை வாக்கினில்
இன்ப தாகவே தீட்டுநல் லஞ்சலின்
    ஏறும் வாசகம் வேதசாத் திரங்களாம்
என்ன லாகும்; அவ் வஞ்சல்மற் றென்றினை
    ஏய்ந்த யாத்திரைக் காசியில் நின்றவர்
இன்னு மோர்முறை தீட்டிய வாறிதை
    எம்ம வர்க்கவாத் திரயாம் கூறுவாம். ௫

197. தேடித் திரிந்தியான் காசிவிச் வேசனைச்
    சேர்ந்து கண்டனன் என்னுளுங் கண்டனன்;
வாடித் திரிந்தினி வருந்தலிர்; [1]தேடிய
    வண்ணப் பூடது காலுட்சிக் குற்றதால்;
நாடுங் காசிசார் நாட்டிலும் மக்கள்
    நம்மைப் போலவே வாழ்கிறா காண்மினோ;
கூடும் நூதன காரண மொன்றும்
    கூறற் கிவணிலை; யின்னது வாய்மையே. ௬

198. "இன்று கண்டவிச் வேசற்கு மஞ்சனம்
    ஏற்ற பூசையென் கைகளி னாற்றினன்
அன்றி மற்றும்யாழ்ப் பாணத்த ராயினோ(டு)
    அன்றும் மேலெதிர் காலத்தர் யாவர்க்கும்
துன்று தீவினை தீரநற் பேறுறச்
    செய்கன் மச்சிவ புண்யமெ லாஞ்செய்து
நன்று முடிந்தன நீரினிப் பூமிமேல்
    அன்பு பூண்டரன் நல்லடிக் கீழ்வாழ்க" ௭

199. என்று தங்கையால் எழுதிய அஞ்சலை
    எங்க ளையனெம் மெல்லோர்க்கும் ஆசியும்
துன்று நல்வழித் தூண்டுப தேசமுஞ்
    சொல்லி யுய்த்தனர்; எங்குர வன்மனத்(து)
என்றும் நல்லருள் ஊறிச் சுரக்கயாம்
    ஏன்ற போதனை கொண்டிவண் வாழ்தலை
யன்றிச் செய்குறு காரியம் மற்றொன்றில்
    ஆர்வங் கொள்வது நன்மதி யாகுமோ? ௮

---

1. "தேடிய பூண்டு காலிற் சிக்கியது" என்பது ஒரு பழமொழி பூடு - பூண்டு, மூலிகை; [பகுதிப்பொருள் விகுதிபெற்றுப் 'பூடது' என்றாயிற்று.] 'ஆல்' என்பது ஆதலால் என இடைக்குறை விகாரம் பெற்றது. இச்செய்யுளும் அடுத்துவரும் செய்யுளும், சுவாமிகள் காசியிலிருந்து எம்மவர்க்கு இங்கே எழுதியனுப்பிய கடிதத்து வாசகக் கருத்துக்களை அதன்கண்ணே வரிசைக் கிரமத்திலே அமைத்து விவரிப்பன: அதற்கு இயைய, தேடித்திரிந்து......... ..................என்னுளுங் கண்டனன்; + இனி + [நீர் விணாக என்பொருட்டு] வாடித்திரிந்து + வருந்தலிர்; [ஏனெனில்] தேடிய பூண்டு காலிற் சிக்கியது. (= அகப்பட்டது) + [அதுபோல; யான் நாடிய விசுவேசனைக் கண்டேன்.] ஆதலால் எனக் கொண்டுகூட்டிப் பொருள் காண்க.

200. இன்னும் பற்பல எங்குரு வின்னருள்
ஏன்று செய்இதம் எண்ணரி லடங்குமோ ?
மன்னு தம்மரு குற்றநல் லன்பர்க்கு
வாய்ந்த இன்னலோய் மார்க்கமுங் கூறுவர்;
'நன்ன யத்தெய்வ முண்டென நம்புக
நல்ல ருள்பெறப் போற்றுக தஞ்சமா
இன்ன திற்பெரி தின்புற லாகுமற்
றென்ன தோன்றினும் எண்ணுவ கையுறீர்.' கூ

201. 'என்னை காரண மென்றிடில் யாங்கள்செய்
எந்தச் செய்கையும் அவன்தரு மாற்றலால்
துன்னி ஆகுவ "எல்லாம வன்செயல்,
என்வ லத்தொன்று மில்லை"யீ துண்மையே
மன்னும் பேரறி வாற்றல்கள் வாய்ந்தவன்
மற்றைச் சிற்றறி வுஞ்செய லும்முளோம்
அன்ன வன்னெம்மு ளார்ந்தறி வித்தெமை
ஆட்டு விக்கயாம் ஆடுறும் பம்பரம்.' க0

202. அப்ப ரம்பொருள் ஆருயிர் யாவைக்கும்
அரும்பெ ருங்கரு ணைத்திறங் கொண்டென்றும்
செப்பு மைந்தொழில் செய்குறும்; எம்திறம்
தீர்வி லாணவ கன்மமா யையெனும்
மூப்புன் பாசப் பிணிப்பிடர் மையலின்
மூழ்கித் தவித்தலாம்; நீக்கிப்பே ரின்பதை
எப்போழ் தும்முற ஈசனை நீர்சரண்
எய்திப் போற்றலே காரணம் என்றனர். கக

---

## கஉ. சிவதொண்டன் இதழ்ச் சருக்கம்

வேறு

203. கருவாய் வழியைக் கடக்கவொரு புணையா யுதித்த கதிரொளியாம்
பெருமான் உலகத் தன்புசெயும் பிறழா வடியர் தமர்க்கெல்லாம்
ஒருமா நெறியைக் காட்டுதற்கே யுவந்து மனத்தி னுட்கொண்டு
திருவா ரிதழொன் றுலாவரவே திட்ட மொன்று வகுத்தனரால். க

204. பவவாண் டாகு மாயிரத்தின் தொள்ளா யிரமுப் பத்தைந்தும்
தவச்சேர் ஆண்டின் மார்கழியில் தகவார் கமலா சனியென்று
நவமா நிறுவு மச்சகத்தில் நயமார் திங்க ளிதழாகச்
சிவமார் தொண்ட னெனும்பெயராற் சிறப்புற் றேங்கத் தொடங்குவித்தார். உ

205. தேவர் தமக்கு வைகறையாச் செப்பப் பெறுமத் திங்களதிற்
பூவார் திருவெம் பாவைதிருப் பாவை யிசையாற் பொலிவுறவே
நாவாற் பாடி மாந்தரெலாம் நம்பன் திருமால் வணங்குறுமச்
சேவை தனிற்கொள் பயனும்போல் சிவதொண் டனுமங் குதித்தனனே. ௩

206. திங்கள் தோறும் இதழ்விரிக்குஞ் சீரார் தெய்வ மலரிதிலே
எங்கும் எந்த மதத்தும்வாழ்ந் திருக்கும் எவரும் வெறுத்தகுசொல்
மங்க விரோதச் சொலுமின்றி மாதே வன்றன் மகிமையுடன்
தங்கும் பாசத் துயிர்க்குறுதி சாற்றக் குரவர் பணித்தனரால். ௪

207. பொருட்பாற் படுத்துஞ் செய்திகளும் புன்மை யின்பச் செய்திகளும்
மருட்பாற் படுத்தும் வகைதெரிந்து மற்றிங் கவற்றைத் தவிர்த்துநிதம்
விருப்பா விறைவன் பணிநிற்கும் மேலாஞ் செய்தி பேசுகென
ஒருப்பா டுறவே யுளங்குளிர வுறுதி யாகப் பணித்தனரால். ௫

208. ஐயந் திரிபும் வீந்தொழிய அருளுந் தெருளும் ஏய்ந்தொளிர
வையம் வானுல கின்புறவே மையல் மோகம் ஆதியற
மெய்யன் பிரக்கம் மேவிடவே [1]வெருள்வுந் தீங்கும் [2]ஒவிடவே
துய்யன் வாய்மை துணிந்தென்றுந் தோற்றி நிலவப் பணித்தனரே. ௬

209. இன்ன சஞ்சி கைமகுடம் "எண்ணு வார்நெஞ் சில்நண்ணி
மன்னும் ஈசன்" என்றதனை வகுத்தார் வாசகர் உட்கொளற்கே;
இன்னும் பரனைத் துதித்துலவ இருக்க நிற்க வேலைசெய்ய
உன்னும் பழக்கம் கைவரும்[3]மற் றுயிர்நீங் கும்போ தும்முறுமே. ௭

210. கற்றூர்க் கெல்லாங் கண்டினிமை கசிந்து பரனைச் சரண்புகுந்து
நிற்றற் கேற்ற நெறிவகுக்கும் நிகரில் மறையும் ஆகமமும்
சொற்ற ஒப்பில் பேருண்மை தொகுத்துக் கூறுந் தூயதமிழ்
நற்சிந் தனைப்பா அணியதற்கு நல்கிக் குரவர் உதவினரே. ௮

211. உலகம் உவப்பத் தமிழ்வளர வோங்குஞ் சைவ நீதிமல்க
அலகில் பேரன் போடுதித்த அணியார் தெய்வச் சிவதொண்டன்
நலப்பேர்த் திங்கள் இதழென்ன நாடும் பாலா ரிட்டமுதற்
சலனம் இன்றித் திருவுடனே சகத்துப் பொலிந்து நடந்ததரோ. ௯

212. இளமை கூர்ந்த சிவதொண்டன் எழிலார் மலராய் வளர்ந்தோங்கி
வளமை கூர ஆதரிப்போர் மலியப் பெற்றன் னோர்தமரும்
உளமுந் தூய ராகிநிதம் ஒழுக்கம் பேணி ஓங்கினரால்
அளவை யில்லா அருண்மல்க அண்ணல் காட்டும் நல்வழியால். ௧௦

---

1. வெருள்வு - அச்சம்; 2. ஒவிடவே - நீங்கிடவே; மற்று - வினைமாற்று;

# ௧௮. சிவதொண்டன் நிலையச் சருக்கம்

## வேறு

213. இந்தநல் வழியி னூக்கி யெழிற்சிவ தொண்டன் நீதி
வந்துகை யுறச்சா தித்தல் வளம்பெறற் கிடம தாகச்
சுந்தர நிலையங் காணத் தோன்றருட் குறிப்பா லையன்
நந்தன வாண்டில் இன்னும் நம்மவர்ப் பணித்து மாங்கே. ௧

214. சிவதொண்டன் சபையை ஆக்கிச் சீரியோர் பலரைக் கொண்டு
நவபல பணியு மாற்ற நங்குரு அருள அன்பர்
உவமையி லுவப்பி னேடு மோங்கிய வண்ணை தன்னில்
தவம்மிகு செயல்கள் மல்கத் தகுதிசால் நிலையங் [1]கண்டார். ௨

215. மேகமார் ஐப்ப சிப்பேர் மேவுநற் றிங்கள் தன்னில்
மாகமார் தோற்றத் தோடு வயங்கிடும் நிலையத் தின்சீர்
ஆகுபல் வகைய வெல்லாம் அடைவினிற் கூற வல்லார்க்(கு)
ஆகும் ;மற் றெமக்கிங் காகா(து); ஆசையோ விளம்ப வூக்கும். ௩

216. இருதளம் மேல்கீ ழாக இலங்கிடும் நிலையந் தன்னிற்
பெருகுறு தியானத் துக்கா மேற்றளம் பிறங்கச் செய்தார் ;
வரு[2]கீழிற் புராணஞ் சாத்ரம் வயங்கிசைத் தமிழ்வே தாது
[3]உரன்தரு படனம் பாரித் துரையுடன் பயில்வும் நேர்ந்தார். ௪

217. மறுவரு தியானஞ் செய்யும் மண்டபச் சுவர்ப்பு றத்தில்
மறைமுத லோங்கா ரத்தின் வடிவுடன் பொருளு மாகுங்
குறிசிவ லிங்கம் மத்தி கூறிரு பாற்க ணேசர்
நிறைதர ஓங்கா ரத்தின் உள்ளொளிக் கோலம் நேர்ந்தார். ௫

218. இவ்வித நேர்தற் கேது இவ்விதி வழிச்செல் வாரைச்
"செவ்வனே சிவதொண் டன்பேர்ச் சீரகஞ் சேர்மின் உய்தித்
திவ்விய சிவத்தி யானம் செய்துதி பூசை யாற்றல்
[4]பவ்விய புராண சாத்ரம் பண்முறை பயில்வீர்" [5]என்றல். ௬

---

1. கண்டார் - ஆக்கினார். 2. கீழ் - கீழேயுள்ள மண்டபம். கீழ் கீழ்த்தளமாகிய மண்டபத்துக்கு ஆகுபெயர். 3. உரன்தரு படனம் பாரித்துரை - திட்ப அறிவைத் தரக்கூடிய புராண படனமும், அவற்றின் பொருளை விரித்துரைத்தலும்; பாரித்துரை முதனிலைத் தொழிற்பெயர். உரன் திட்ப அறிவுக்கு ஆகுபெயர்;

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" என்னுங் குறளிற் பரிமேலழகருரையானுமுணர்க. சாத்திரமும் பாரித்துரைத்தலும் சித்தாந்த வகுப்புகள் மூலமும், பயில்வு திருமுறைகளை இசையுடன் பயிற்றுவித்தல் மூலமும் நடைபெறும்; 4. பவ்வியம் - உண்மை, சுபம், பயன். 5. என்றல் - என்று அறிவுறுத்தத் திருவுளங் கொண்டமை.

**219.** மேலுள தியான மாடம் மேம்பரம் ஆ(ம்)மா தேவன்
வாலிய பாத பீடம் வயங்கிடம்; வாத ஊரர்
நூலுப தேச ஞானம் நுவன்றதம் குரவ ஞானை
கோலிய பாத[1]பூசை உன்னிக்கொள் நிகழ்ச்சி [2]யிங்காம். ௭

220. தெய்வநன் மறையு மாலும் தேர்கிலா நம்ம பாதம்
உய்யவே பீட மீதே யுளுற்றிநம் அடியீ ரெல்லாம்
மெய்பெறத் தாபித் தஃதை நம்மரு ளுருப்பா வித்துச்
செய்குவிர் பூசை யென்ற [3]சிவக்குரு [4]பணிநேர் இஃதே. ௮

221. 'எய்துமா றுடத்தி னேற்றம் இயைந்துளிர்! ஈசன் பூசை
மெய்மொழி மனமொ ருங்க விதிவழி யன்பா லாற்றல்
உய்நெறி; பயப்ப தூஉமாம் உறுதி; நற் கதியுங் காட்டும்;
கைவரச் செய்விர்' என்று காட்டினர் வழியா பர்க்கே. ௯

222. புராணமண் டபமென் றேதும் புண்ணிய மன்றில் நாளும்
புராணங்க ளாக மங்கள் புனிதமாம் வேத நூல்கள்
விராவிய தோத்தி ரங்கள் விரியுநற் சாத்தி ரங்கள்
அராவணி சடையோற் போற்றும அனைத்துநூ லாய வைத்தார். ௧௦

223. மோனமா யிருந்து நாதன் முடிவிலாப் பாத பீடத்
தியானமார் பூசை தன்னைச் செய்தற்கே மேல்மன்(று); [5]அந்யம்
ஞானநற் சிந்த னைப்பேர் நற்றுதித் தமது பாடல்
கானமோ டோதல் கேட்டல் காண்டற்கும் உரித்தாச் செய்தார். ௧௧

224. ஆண்டுதோ றனுகும் மாசித் திங்களம் மண்ட பத்தில்
மாண்சிவ நிசிய னென்பு மருவிநால் யாமம் கண்கள்
பூண்துயில் துறந்தன் றேங்கப் பூசையும் புரிந்தே யன்பர்
ஆண்டவன் புராணங் கேட்டல் அருமுறை ஓதல் செய்வார். ௧௨

---

1. பூசை உன்னி + கொள் நிகழ்ச்சி. பூசை உன்னி - பூசையை அநுசரித்து; கொள்நிகழ்ச்சி - கைக்கொண்டு செயலாற்றும் நிகழ்ச்சி (அது போன்ற நிகழ்ச்சி), 2. இங்கு + ஆம் - பூசை நிகழ்ச்சி மேன்மாடத்தின் கண்ணே நிகழும். கோலிய- குருவாய் வந்த சிவபிரான் திருவாதவூரடிகள் முதலிய சீடராகிய அடியார்க் கெல்லாம் இட்ட கட்டளையைத் திருவாதவூரடிகள் புராணம் மண்சுமந்த சருக் கம் 83ஆம் 84ஆஞ் செய்யுள்களாலும், அக்கட்டளைப்படி அவர்கள் பாதபீடப் பூசையைச் செய்திருந்தமையை அப்புராணத்தில் திருவம்பலச் சருக்கம் 10ஆம் செய்யுளாலும் அறிக. 3. சிவக்குரு - சிவமாகிய குருமூர்த்தி (குருமூர்த்தி வடிவு கொண்டெழுந்தருளிய சிவபிரான் என்றபடி) என இருபெயரொட்டுப் பண்புத் தொகைப் பொருளது. 4. பணிநேர் இஃது - இட்ட கட்டளைச் செயல் நிகழ்ச் சியை நிகர்க்கும் இங்கே நிகழும் பாதபீட பூசை நிகழ்ச்சியும்; "நேர்" உவம வுருபாகிய இடைச் சொல்லடியாகப் பிறந்த வினையடி; இஃது இங்கே நேரும் (நிகர்க்கும்) என்ற வினைமுற்றுப் பொருட்டாய் நின்றது. "கொலையிற் கொடி யாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்" (செங்கோன்மை 10) என்ற குறளிற் போல; 5. அந்யம் - மற்றது.

225. பங்குனி யிரண்டாஞ் சோம வாரமும் பாத [1]பிடக்(கு)
இங்கொரு விசேட பூசை யியற்றுவர் அன்பர்; நல்லூர்ப்
பொங்கருட் சேய்தேர் மீதூர் பொலிவிழா நாள்ம கேசன்
சங்கமர் பூசை யன்ன தானமுஞ் செய்வ ரீண்டே. கங

226. ஐப்பசிச் சிவதொண் டன்பேர் ஆலயந் தோறஞ் செய்த
திப்பிய நாள்வி ழாவும் தேவர்வை கறைப்போ தென்று
செப்பிடும் மார்க ழிப்பேர்த் திங்களா திரைநாட் செய்யும்
ஒப்பிலா விழாவும் மேற்கொண் டுஞற்றுவ ரன்ப ரிங்கே. கச

227. திங்கள்தோ றியற்றும் யாகத் திவ்விய பேரைப் பூண்டு
மங்கள மாக வன்பர் வந்தனை தியானஞ் செய்து
பொங்குபே ரின்பம் ஆரப் பொலியுநாள் நிகழ்ச்சி யெல்லாம்
மங்கிடா திங்குத் தானே வளம்பெற நிகழும் மாதோ. கரு

## வேறு

228. இன்ன ஆதிய ஏர்சிவ புண்ணியம்
உன்னிச் செய்குறு பூசையாம்; ஒப்பற
மன்னு முப்பொருள் வாய்மைசித் தாந்தநூல்
பன்னல் கேட்டிடல் பாரிப்பர் ஞாயிறில். கசு

229. நால்வர் பாடிய நன்முறைப் பண்முனர்க்
காலை யிற்பல மாணவர் கற்றுமேற்
சாலும் மற்றருட் பாவிசை சாற்றுதல்
வாலி திற்பயில் வகுப்புமஞ் ஞாயிறில். கஎ

230. வேண்டு கோள்செயும் அந்நியர் வேண்டிய
காண்ட கும்மவைக் களந்தொறுஞ் சென்றன்பு
தூண்டும் நல்லறு பான்மும்மைத் தொண்டரின்
நீண்ட காதையிந் நிலையம் விரிக்குமே கஅ

231. நேரும் தொண்டுசெய் நீள்கடன் பூண்மாணரி
ஆரும் நுண்மதி மாணவர் மாணியம்
சேர்த்தண் ணுமலைப் பல்கலைக் கழகமாட்(டு)
ஓரும் பண்ணிசை யூட்டிற்(று) உயர்கலை ககூ

232. சைவ மாணிகள் சற்குரு நல்கிட
உய்வ கைப்பெறு தீட்சை யுடன்மந்த்ரச்
செய்ய போதனை செவிக்கொண் டொழுகுறும்
தெய்வ அனுட்டானஞ் சேரப் பயிற்றியும். உ0

---

1. பாத பிடக்கு - பாதபீடத்துக்கு; அத்துச்சாரியை தொகுத்தல் விகாரம் பெற்றது செய்யுள் விகாரத்தால். "மாடக்குச் சித்திரமும் மாதகர்க்குக் கோபுரமும்" என்புழிப் போல.

233. நீட இணையன நின்று நிலவவே
கூடும் வருமானம் கொண்டிடற் கேற்பதாத்
தேடுஞ் சேம நிதியெனக் கொண்டநல்
மாட மிரண்டு வயங்கிலக் கம்பெறும். உக

234. கீழ்பா லிலங்கையும் கேழ்வட பாலிதூஉம்
தாழ்வ தின்றியே தம்முளன் போங்கிட
வாழ வும்வழி பாடுகள் மாணவும்
ஊழி நீதி யொழுக்கமே லோங்கவும். உஉ

235. மட்டக் களப்புக் கயலுள மாண்புறு
சிட்டர் சேருஞ்சித் தாண்டிக் கருகுள
மட்டற் றபுகழ்ச் செங்க லடியினில்
[1]பெட்ட தாஞ்[2]சிவ தொண்டன் பெருநிலை. உங

236. வான ளாவிய மாபெருந் தோற்றத்தின்
தேன ளாவிய தீங்கனிச் சோலையென்
கானஞ் சூழ்சிவ தொண்டனிற் காண்புறூஉம்
[3]ஞான பூசையும் [4]நற்செயல் யாவுமாம். உச

237. பக்கத் தேபல ஏக்கர் நிலங்களை
மிக்க செந்நெல் விளைத்திட வாங்கியே
ஒக்க வேயவை யுறுபயன் நல்கிடத்
தக்க சேம நிதியாச் [5]சமைத்தனர். உரு

238. நுகளில் சைவர் கொழும்புத் துறையினில்
மகளிர் ஏழைய நாதையர் வாழ்வுறத்
தகைசார் தையல்கைப் பணிவிவ சாயங்கள்
மிகப்ப யில்வுற விடுதி யமைத்தனர். உசா

239. நெசவு செய்தொழில் நெடும்பயிர்த் தோட்டமேல்
இசையும் பஃறொழில் ஏற்பச்செய் தாச்ரம
வசதி வாழ்க்கை மருவித்தேர் வுற்றபின்
இசையி னீங்கித்தாம் ஏற்பரே நல்லறம். உஎ

---

1. பெட்டதாம் — விரும்பிக் கட்டப்பட்டதாம். இது கி. பி. 1965 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் நிகழ்ந்தது தம்முளன்பு ஓங்கிட வாழவும், வழிபாடுகள் மாணவும், ஒழுக்கம் மேலோங்கவும் பெட்டதாம் என வினைமுடிபு காண்க.
2. சிவதொண்டன் பெருநிலை — சிவதொண்டன் என்னும் பெருமை வாய்ந்த நிலையம்.
3. ஞானபூசை — மேல்மண்டபத்தில் நடக்கும் திருவடிபூசை, தியானம் முதலியன.
4. நற்செயல்யாவும் — கீழ்மண்டபத்தில் நடக்கும் புராணபடனம், திருமுறை வகுப்பு, பலவகை விழாக் கொண்டாட்டங்கள் முதலியனவாம்.
5. சமைத்தனர் — அமைத்தனர்.

## ௧௬. மதுவிலக்குச் சருக்கம்

வேறு

240. கதுமெனச் சீறுநர் காமத் தீயினர்
விதிர்விதிர்ப் பெய்துநர் மிகைசேர் மூச்சினர்
பதமறு முணர்வின ராக்கிப் பண்பழி
மதுவினவே றெதுகாண் மாண்ப ழிப்பதே. ௧

241. அறிவினை யழித்திடும் ஆன்றசீ ரகற்றிடும்
செறிதரு மறிஞருஞ் சிறிதும் மதித்திலாக்
குறிகளும் விளைத்திடும் கோபம் வளர்த்திடும்
பொறிபுலன் மயக்கிடும் புன்மை யளித்திடும். ௨

242. தீமையைப் பயந்திடுஞ் சிறிய ராக்கிடும்
தூய்மையைக் கெடுத்திடும் துயரம் வீக்கிடும்
நாமமும் மதுவென நவிலு மன்னது
தோமறு முயிர்கொலத் தொக்க நஞ்சுமாம். ௩

243. நாணினை யோட்டிடும் நகைவி ளைத்திடும்
காணுமாண் பெண்களைக் கடிந்த கற்றிடும்;
கோண்மொழி செய்கைமேற் கொள்ளத் தூண்டிடும்;
காண்மதுத் தீமைகள் கணிக்கத் தக்கவோ?. ௪

244. என்றெம தையனும் எடுத்துக் கூறியே
நன்றுநம் நாடுய நன்மது விலக்கினை
ஒன்றிய சிந்தையி னுளுற்று விரெனத்
துன்றிய வன்பர்க்குச் சொல்வகை பற்பல. ௫

245. நாட்டினிற் பற்பல நலமிகு கழகங்கள்
கூட்டியே மதுவிலக் காகுங் கோதில்சீர்
வேட்டிடும் பணிகளும் வியக்கச் செய்திட
ஆட்களை யேவினர் அதன்பயன் கண்டனர். ௬

246. கொலைபுலை தவிர்த்திடக் கூறி யன்பரைக்
கொலையில ராக்கினர்; "குலவுசுற் றமுமிதம்
நிலைபெற வேண்டுதிர்; நீளுரை சாதனை
பலவழிக் கொளுவியப் பயனு றுத்துவீர். ௭

247. ஆசையுட் பட்டவர் அல்லற் பட்டனர்
ஆசையற் றவர்களே அல்லல் நீங்கினர்
ஆசையே யல்லல்க ளனைத்தின் காரணம்
ஆசைய தின்மையே அருஞ்சுகம்" என்றனர். ௮

248. காமத்தின் றிமையைக் கடுஞ்சொலின் கீழ்மையை
[1]நாமத்தை யழித்திடும் நாசமார் சூதினை
ஆமெனுஞ் சிறப்பினை யகற்றுசிற் றினத்தினைப்
[2]போமெனத் தள்ளுமி னெனப்புகன் றருளினர். ௪௮

249. நன்றியை மறந்திடா நற்குறிக் கோளுறீஇ
வென்றசீர்த் [3]தஞ்சமா மேவுட விளமையே
துன்றிய செல்வமுந் தூயநற் [4]சதமல
என்றரன் அருள்சதம் என்றுபோ தித்தனர். ௫0

250. செருக்கினை யறுத்தனர் செய்தவத் தால்வரும்
பெருக்கினை மிகுத்தனர் பெரிய ரின்றுணை
பொருப்பினும் வலியது போற்றுமி னென்றனர்
அருத்தியி னையன்சீர் அறைதற் கொல்லுமோ?. ௫௧

---

1. நாமம் — புகழ்.

2. போம்என — நம்மைவிட்டுப் போக (நீங்க)த் தக்கனஎன்று கருதி.

3. தஞ்சமா — (இன்பவாழ்வுக்கு) ஆதாரமானவையாகக் கொள்ளற்கு. 'ஆக' என்பது 'ஆ' எனக் கடைக்குறைந்து நின்றது.

4. சதம் — நித்தியமானது, அழிவற்றது. சதமல்ல — நித்தியப் பொருள்களல்ல, நிலையற்ற (அழிவுடைய) பொருள்கள். சதமல்ல என்றும், அரனருள் சதமென்றும் போதித்தனர் என எண்ணும்மை விரித்துரைக்க நின்றது.

வேறு

251. வாழுமிப் பிறவி வாழ்க்கை வளர்பரி பாகத் தான்மா
ஊழினிற் கொள்ளும் யாத்ரை உறுதக வதனை யோர்ந்து
வாழ்விவண் பயிறல் வேண்டும் வழிபல அவற்று ளொன்று
சூழ்பர னுலாவிற் றெண்டர் தொடர்ந்தவற் போற்ற லாகும். க

252. பாத்திர அடியார் தெய்வம் பாங்கிற் சூழம் பாத
யாத்திரை யதுமாம் அன்ன திதயமுட் கொள்ளும் ஐயன்
தோத்தரத் தொண்டன் மீதே தொழுபாத பீடம் போற்றும்
யாத்திரை விழாக்கொள் பாங்கை மீங்கியாஞ் சிறிதே யாப்பாம். உ

வேறு

253. எத்திக் கினிலும் எங்கும் உள்ளோர் எழுகின்ற
பத்திப் பெருக்கால் உந்தப் பெற்றுப் பணிவோராய்
முத்திக் கரைக்கே நடப்பார் போன்று முந்துவார்
அத்தன் யோகன் யாத்திரைச் செலவின் அடியார்கள். ந

254. கோயில் ஒன்றிற் குலவிடல் பாதக் குறிநிறுவி
ஆய பூசை யனைத்துங் காண்பார் அடியார்கள்
தூய சிந்தனைத் துதிப்பா அமைதியிற் சொற்றிடலும்
ஆயே யனையான் யாத்திரை வழிபா டதன்பண்பாம். ச

255. சைவப் பெரியோர் தத்துவ வுண்மைச் சாத்திரத்தின்
உய்வைத் தருபல உயரிய பத்தித் திருமுறையின்
மெய்ம்மைப் பொருள்விரி வுரைசெவி மேவி வியத்தலுமாங்(கு)
ஐயன் பாத யாத்திரை, யங்கம் நேர்வண்ணம். ரு

256. அறுசுவை யுண்டி யமைத்தே யன்பர்க் களிப்பார்கள்
மறுசிகை நீக்கி யுண்போ ரும்மதை மரீஇயுண்பர்
உறுகளை தீர்ந்தே யுவகை கொண்டங் குறைவார்கள்
அறிவன் பாத யாத்திரைச் செலவுளோர் அங்கமிதே. சா

257. யானே யெனதென் றற்றே யெல்லாம் அவன்செயலாய்த்
தானே நினைவுறத் தருதிரு வடிபுனை தரு[1]மஞ்சம்
வானூர்ந் துலாவர வன்றேன் கொண்டடி யார்மீள்வர்
ஆனோர் சாந்தத் தையன் யாத்திரை யமைவுறவே. எ

1. மஞ்சம் — இதனைக் கேடயம் என்றும் வழங்குவர்.

258. [1]முன்னே கொடிநிரை [2]முன்னணி செல்ல முறையதனிற்
[3]பின்னே அடியார் துதியணி பெருகொலி பிறங்கிடுமால்
மின்னே ரிடையார் [4]பின்றொடர்ந் திசைப்பர் மெல்லிசைப்பண்
என்னே! அப்பன் யாத்திரை [5]யணிசொலும் பாங்குறுமோ? அ

259. பாலர் முதியோர் பாவைய ராடவர் பதவிச்சீர்
மேலோர் அல்லோர் செல்வர் மிடியர் பக்தியொடு
வாலி தின்னிரை நிரையா வகைபெற வருவார்கள்
ஆலித் துறுமடி யார்பத் திக்கோர் அளவுண்டோ? கூ

260. மழையென் றஞ்சார் வெயிலிற் றளரார் மகிழ்கூர்ந்து
பழகிய வீரப் படையினர் போலப் பார்ப்போரைக்
குழையச் செய்யும் பக்திக் கோலங் கொடுநடப்பர்
அழகன் [6]குரவன் யாத்திரை வழிபா [7]டதுவாமால். க0

261. விண்ணைக் கவரும் வியனுர் கீதம் மிகவோங்க
மண்ணோர் வானோர் பார்த்தும் கேட்டும் மகிழ்பூப்பர்
பண்ணைப் பழித்த மொழியார் பாடும் பரிசென்னே!
அண்ணல் பாத யாத்திரை வழிபா டதுவாமால் கக

262. இன்ன பரிசின் ஈடுறு தொண்டர் இனிதேகச்
[8]சொன்ன கும்பம் தீபம் தூப சாரங்கள்
துன்ன வாயிலிற் கொண்டெதி ரேற்றுத் துதிப்பார்கள்
மன்னும் வழியினர் அன்னார் பக்தி வகுப்பெளிதோ? கஉ

263. தொட்ட யாத்திரை தொண்டன் நிலைய மாடியிடங்
கிட்டிப் பாத பீடம் நிறுவிக் கிளர்பூசை
மட்டில் லன்பொடு செய்து மகிழ்வார்; இதன்பயனே
[9]பெட்டு முயல்வதிவ் வுலகர் தொண்டன் பெரும்பணியே. கங

---

1. முன்னே — பாதபீடத்து மஞ்சத்துக்கு முன்பாக.
2. முன்னணி — முன்னே செல்லும் வரிசையொழுங்கு.
3. பின்னே — கொடி நிரைக்குப் பின்னாக.
4. பின்றொடர்ந்து — மஞ்சத்துக்குப் பின் தொடர்ந்து நிரையாகச் சென்று;
5. அணி — அழகு.
6. குரவன் யாத்திரை வழிபாடு — குரவராகிய யோக சுவாமிகள் தொடக்கி வைத்த பாதயாத்திரையிற் பங்குபெற்ற அன்பர்கள் நடாத்திய வழிபாடு.
7. அதுவாம் — மேலே சொல்லப்பட்ட அத்தன்மையதாகும்; (குறிப்புவினைமுற்று).
8. சொன்ன கும்பம் — சுவர்ணகும்பம்; பொன்மயமாக விளங்கும் பூரணகும்பம்.
9. பெட்டு — விரும்பி.

வேறு

264. யாழ்வல் பாணன தென்னும் பேர்புனை
யின்ற மிழ்பொலி நாட்டிலே
கேழ்கி ளர்ந்திடு யாத்தி ரை [1]முதல்
கிளக்கிற் கீழ்த்திசை கைதடி
வேழ மாமுகன் மேனி கொண்டருள்
விங்கு கோயிலிற் றொடங்கியே
ஏழ்த லம்புகழ் அன்பிற் செய்திடும்
இனிய யாத்திரை என்பவால்; கச

265. இன்ன தன்பினர் எழில்வ ளம்பல
வேய்ந்த வுத்தர திசையினில்
சுன்னை யம்பதிக் கதிரை மாமலைத்
தூய கோயிலிற் றொடங்கிமேற்
சொன்ன பூசையும் துதியு மாதிய
துன்னச் செய்துசெல் யாத்திரை
மூன்னும் பாதைசீர் முகிழ்ப்பத் தொண்டனை
முன்னிட் டேறத்தான் [2]அடைவதே. கரு

266. மேற்றி சைதனில் ஆனைக் கோட்டையில்
மூத்த நாயனுர் வியன்றளி
போற்றி யவணிருந் தெழுந்த யாத்திரைப்
புனித வூர்வலம் ஆங்கதன்
நாற்றி சைக்கணும் வதிவோ ருங்கூடி
நயந்து செய்தநல் லெழிலதால்
ஏற்ற முன்னையின் பயனை வென்றதே
[3]யிதன்ப யன்தெரி கிற்பினே. கசு

267. பின்னர்த் தென்றிசைப் பிறங்கும் யாத்திரை
பிள்ளையார் மண்கும் பான்கோயில்
முன்னர்ச் செய்துதி யாதி முற்றியே
முந்து மன்பர்சூழ் மொய்த்திட
நன்கின் வீதியின் இக்கரைப் பண்ணை
நடைகொ ளும்[4]முலாக் கொட்டடி
பன்னு வண்ணைச்சங் கரன்பால் வீதியிற்
பல்லோ ரெதிர்கொடு பணிந்தனர். கஎ

---

1. முதல் — இஃது 23-9-62 ஞாயிற்றுக்கிழமையன்று நிகழ்ந்தது.
2. இது 30-9-62 ஞாயிற்றுக்கிழமையன்று நிகழ்ந்தது.
3. இது 14-10-62 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.
4. இஃது 21-10-62 ஞாயிற்றுக்கிழமையன்று நிறைவெய்தியது. யாத்திரையின் கண்ணே, மண்கும்பான் கோயிலில் செயற்பால துதியாதியன முற்றப் பெற்று, அன்பர் சூழ மீளும் உலாவினைக் கொட்டடி வீதியிலும், வண்ணைச் சிவன் கோயில் வீதிகளிலும் உள்ளவர்கள் எதிர்கொண்டு பணிந்தனர் என வினைமுடிபு காண்க.

268. போர்மு கத்திற்குத் தலைவன் முற்செலப்
புடையிற் சேனைநேர் போதல்போல்
வீர அன்பர்கள் [1]வேண்டும் யாத்திரை
யுலாப்பின் காங்கேயன் வீதிவாய்
ஆர்வ முற்றவண் வாழ்வோர் ஆர்த்தெதிர்
கொடுப ணிந்திட அடைந்ததால்
தூரம் பேர்பெறு தொண்டன் மாடமேல்
துன்னி யாங்கவர் வணங்கவே; ௨௬அ

269. [2]பார்வை மான்முதல் மாக்க ளைக்கொடு
பற்றைக் [3]கான்மாவைப் பற்றல்போல்
ஆரும் பக்குவத் தன்பர் செய்தவம்
அவர லாப்பிறர் ஆதரம்
கூரக் கண்டதே வழியிற் கூடிடக்
கொள்ளும் வலையிது வாமெனத்
தேரும் யாத்திரை திசைகள் நான்கிலும்
சேர்த்த வாறையன் சீர்த்தியே. ௨௬௯

---

1. வேண்டும் யாத்திரை — விரும்பிக் கைக்கொண்ட பாதபீட யாத்திரை. அன்பர்கள் பாதபீடத்தை முதன்மையாகக் கொண்டு, அதற்கு முன்னும் பின்னும் அணிவகுத்துச் சென்ற தவக்கோலத் தோற்றத்துக்குச் சேனைத்தலைவன் முற்செல்ல, சேனைவீரர் முன்னும் பின்னும் போர்க்கோலத்துடன் அணிவகுத்து உடன்செல்லும் செலவுத்தோற்றம் ஒப்பாய் வந்த வினையுவமை என்ற அணி (வினையுவமம்) "போர் முகத்திற்கு.................யாத்திரையுலா" என்ற பகுதியில் அமைந்துள்ளது.

2. பார்வைமான் — பார்வை மிருகமாகிய மான்;

3. கான்மா — காட்டில் வாழும் மிருகங்கள்.

### வேறு

270. உலகமோர் குடும்ப மென்ன ஓதுமெம் ஐயன் "எல்லா
உலகு(ம்)மிக் கூரும் மேலைத் தேயமுங் குணபால் உள்ள
தலமதுந் தொண்டன் நீதி தழுவிடின், சங்க ரன்பால்
நிலவருள் பெறும்பே றெய்தும் நினைவணம் அவை"யென் றோர்ந்தார். க

271. மேனாட்டு ஞானத் தூது விடுப்பவர் போல அண்ணல்
கானுடுங் கடலும் நீந்திக் கலைநுதல் ஞானம் வல்லோர்
மேனாட்டி லுள்ளோ ருக்கு விழுமிய சைவ மார்க்கந்
தானாட்டும் உண்மை செப்பத் தயையொடுஞ் செலுத்தி னரால். உ

272. குருகெழு துறைக்கொ ழும்பிற் கூடியே தொண்டன் றூதர்
உருக்கொ[1]ளா யிரத்துத் தொள்ளா யிரத்தறு பான்மூன் றுற்ற
திருத்தகு [2]மேடத் திங்கள் சேர்நல [3]நாளில் [4]ஐவர்
பொருத்தமார் கப்ப லேறிப் புண்ணியற் றெழுது போந்தார். ங

273. கடலெளி தாருஞ் செல்வக் கவினகர் போல வாய்ந்த
வடிவுகொள் [5]'சுசான்'பேர்க் கப்பல் வல்விரைஇ மூன்றும் நாளில்
குடிமலி [6]பம்பாய் நிற்கக் கூழிஇப்பிர யாணஞ் செய்தோர்
படிவழி யிறங்கி யூரைப் பார்த்தனர் சிறிதே யாங்கு ச

274. புறத்தவர் அகத்த ராகிப் போகுறு கப்பல் ஓர்பான்
திறத்துறு நாலாம் நாளில் [7]'சுயெஸெ'னுங் கால்வாய் அண்மி
மறித்தபே ரலைதாக் குண்டு மாண்பொழிந் தூச லாடப்
பொறுக்கலார் தலையோ டுள்ளம் பொறிகலக் குற்று ரன்றே ரு

275. அடுத்தநாள் தெளிவுண் டாக அமைதியாம் நிலைகொண் டார்கள்
தொடுத்தநற் பயணத் தங்கண் துய்ப்பன துய்த்தின் புற்று
நடுக்கடல் விநோதம் மேவி நலமுற வேகி னர்செல்
கடற்றுறை தோறுங் கப்பல் தங்கிட நகர்கள் கண்டார். சா

276. [8]ஏடினைக் கண்டார் பின்னர் எகிப்தினில் [9]கெய்ரோ கண்டார்
கூடிய [10]நேப்பிள்ஸ் கண்டார் கூறு[11]ஜிப் ரோல்டர் கண்டார்
நீடிய [12]தில்ப ரிப்பேர் நிகரிலாத் துறைமு கத்திற்
பாடணை பதினெட் டாநாள் பண்பினி [13]லிலண்டன் சேர்ந்தார். எ

---

1. கி. பி. 1963 ஆம் ஆண்டு. 2. மேடத் திங்கள் — சித்திரை (April) மாசம்.
3. நாளில் — 29 ஆம் நாளில்.
4. தூதர் ஆகிய ஐவர் என இயைந்து பொருள்படும்.
5. Chusan என்னும் பெயருள்ள கப்பல். 6. Bombay. 7. Suez Canal.
8. Aden. 9. Cairo. 10. Naples. 11. Gibralter. 12. Tilbury. 13. London.

277. நண்பரா யுறைவோர் வந்து நல்வர வேற்க ஐவர்
பண்பயில் தேன்கள் கூரும் பன்னிறப் பூக்கள் சேருந்
தண்டலை போல வோங்குந் தனிச்சிறப் பிங்கி லாந்தின்
மண்டுதென் மேற்கி லுள்ள [1]டோல்பினை யடைந்தார் மன்னே. ௮

278. உடோல்பின்பேர்ச் சதுக்கஞ் சேரும் [2]உரோட்டினி இல்லஞ் சேர்ந்தே
படாடோப மாக வாய்ந்த படித்தள [3]மாடி தன்னில்
[4]அடாத்தகைத் தறுநூற் றின்மேல் அணையிரு பத்து நான்காம்
விடாதபே ரிலக்க வீட்டில் வியனிலை யறைகள் சேர்ந்தார். ௯

279. அங்கவர் தங்கும் நாளில் ஐயனை நினைந்து போற்றித்
துங்கமார் கூட்டங் கூடி இறைவனைத் துதித்து நின்று
பொங்குநற் சிந்த னைப்பேர்ப் பாடலும் பண்ணும் போற்றித்
தங்கிய திருவின் மிக்க சங்கரன் அருளைப் பெற்றார். ௧௦

280. [5]பக்கிங்காம் மாளி கைநற் பாராள்மன் றுள்ளேய் [6]மக்கள்
தக்கபே ரவையுஞ் சந்தப் [7]பிரபுக்கள் சபையும் வேந்தர்
திக்குகள் பலவின் ஈட்டிச் சேமித்த பொருட்பல் லீட்டம்
தொக்க[8]நூ தனசா லையுமே துன்னியே தூதர் இன்னும் ௧௧

281. பற்பல [9]இடங்கள் கண்டார் பரிவுகொள் சபைகள் கூட்டிப்
பற்பல சமயத் தார்தம் கொள்கையும் பண்புங் கேட்டார்
நற்பல சைவக் கொள்கை நலங்களும் விரித்து ரைத்தார்
சொற்பெறு தடைவி னுத்தாம் துகள்பட விடுத்தார் மாற்றம். ௧௨

282. சித்தாந்தக் கொள்கை தம்மைச் சிறப்புற ஆய்ந்து விண்டார்
கர்த்தாவின் கொள்கை கண்ணுங் கிறித்தவர் வார்த்தை கேட்டார்
எத்தாலுஞ் சைவ நீதி இங்கிதம் பொருந்தப் பேசிச்
சுத்தாத்து விதத்தின் உண்மை சொற்றனர் ஆங்கே தூதர். ௧௩

283. இலண்டனில் [10]ஆக்க போட்டில் எழில்பெறு [11]கேம்பி றிட்ஜில்
நலன்மிகு [12]மாஞ்செஸ் டர்ப்பேர் நகரினிற் பிறவு மான
பலன்தரு கலைவ ளர்க்கும் [13]பல்கலைக் கழகந் தம்மில்
உலந்திடா அறிவு மல்க உற்றிடுஞ் [14]சபைகள் தம்மில். ௧௪

---

1. Dolphin Square, London, S. W. 1. 2. Rodney House. 3. Flat 624.
4. அடாத்தகைத்து — பிறிதொரு மாளிகையாற் பெறமுடியாத தகைமையுடையதான. இவ்வடை பின்வரும் வீடென்பதோடியையும். 624 ஆம் இலக்க வீட்டில்.
5. Buckingham Palace; இச்செய்யுளும் அடுத்த செய்யுளும் குளகச் செய்யுள்.
6. மக்கள் தக்க பேரவை — House of Commons. 7. House of Lords.
8. நூதனசாலை — British Museum.
9. Tower of London, Ceylon Sports Club முதலிய இடங்கள்.
10. Oxford. 11. Cambridge. 12. Manchester. 13. Universities.
14. Institute of World Culture முதலிய சபைகளில். பதினான்காஞ் செய்யுளும் பதினைந்தாஞ் செய்யுளும் குளகச் செய்யுள்.

284 சேர்ந்துளார் கூட்டங் கூட்டிச் சிறப்புரை நிகழ்த்தீர் என்ன
நேர்ந்துரை விரித்தார்; அன்னார் நிகழ்த்துமா சங்கைக் கெல்லாம்
நேரிதிற் சமாதா னங்கள் நெஞ்சகம் மகிழச் சொற்றார்
போந்தநற் றாதர் ஐயன் போதனை பிறழ்வின் றாக. ௧௫

---

## ௧௭. மலேசிய எழுச்சிச் சருக்கம்

285. இன்னணம் அன்னோ ராங்கே யிருதிங்க ளுக்கு மேலா
மன்னிய தலங்கள் கண்டும் மாசபை பலவுஞ் சென்றும்
இன்னிதிற் கலந்து வைகி இன்பமார் அன்பின் ஐயன்
சொன்னவா நடந்துந் தூய சிந்தைய ராகச் சூழ்ந்து. ௧

286. [1]ஆனியாந் திங்கள் தன்னில் அணிபெறும் பதினே ழாம்நாள்
வானூர்தி நிலையஞ் சேர்ந்து [2]"கொமெற்"றெனும் வான ஊர்தி
தானெதி ரேற்க வேறித் தழற்கதி ருதிக்குங் கீழை
வான்றிசை நோக்கி வந்தார் வந்திடும் வழியி லன்னார். ௨

287. பண்டைய பெருமை சேரும் பார்புகழ் [3]உரோம ரூரும்
மண்டிய சிறப்பின் வைகுங் [4]கராச்சியும் மற்று மங்க
கொண்டநற் சீர்த்தி யோங்கிக் குலாவுபன் னகர்க டந்து
எண்டிசை போற்றுங் [5]கற்கத் தாவினி லிறங்கி னாரால். ௩

---

1. ஆனி மீ 17 ஆம் நாள் (தமிழ்த் திகதி); ஆங்கிலத் திகதி 1-7-63 ஆகும்; இதற்கு முந்திய செய்யுளும் இச்செய்யுளும் குளகச் செய்யுள்.

2. The Comet. 3. Rome. 4. Karachchi. 5. Calcutta.

288. இறங்கினோர் [1]வேலூர் மத்தென் றிடுமடம் மற்றும் ஆங்கே
துறவருட் டுங்க ராம கிருட்டினர் விவேகா னந்தர்
முறையுரு நினைவு கூரும் முதன்மைசால் சமாதி போற்றிச்
சிறந்திடு துறவி மார்செஞ் சீடர்[2]பன் னெறியுங் கண்டார். ௪

289. கண்டபி னடுத்த நாளே ககனஞ்செல் ஊர்தி யேறிப்
பண்டமார் துறையிற் கப்பல் பலதங்குஞ் சிங்கப் பூரை
அண்டின ரவர்கள் தம்மை யங்குளோர் வரவேற் றூர்கள்
விண்டலத் திரவி யானேன் மேல்கடல் குளிக்கும் போதில். ௫

290. சிவதொண்டன் நிலையத் தின்னோர் திருவருள் யோக சுவாமி
அவணிருந் தனுப்ப வந்த அறிஞராம் என்று தேர்ந்து
பவமகல் உள்ளத் தோடு பத்தியின் வரவேற் றூர்கள்
சிவனருட் சமய வுண்மைச் சிறப்புரை சபையிற் கேட்டார். ௬

வேறு

291. திருவி னீள்நகர்ச் செவ்விய வீதிதோ(று)
உருவ மாடமீ துற்றிட வீக்கிய
அருநி றக்கொடி [3]யாடுவ தொண்டரை
[4]வருக என்றுகை காட்டிய ழைப்பபோனம். ௭

---

1. Belur Math.

2. பன்னெறி (பலநெறி) — போதனையும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் எனும் மூவகைச் சாதனையுமாகிய ஒழுக்க நெறிகள். (போதனை துறவிகளாகிய குருமாருக்கும், கேட்டல் முதலாகிய சாதனைகள் இல்லறம், துறவறம் என்னும் இருதிறத்தாராகிய சீடர்களுக்கும் உரியவை) போற்றி என்னும் பதம் மடம் போற்றி (மடாலயத்தினைப் போற்றி) எனவும், சமாதி போற்றி (சமாதியைப் போற்றி) எனவும் ஈரிடத்தும் தனித்தனி இயைந்து பொருள் தந்தது. "நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும் வித்தகர்க்கல்லா லரிது" என்னுங் குறளில் அரிது என்னும் ஒரே மொழி 'கேடும் அரிது, சாக்காடும் அரிது' என இரண்டெழுவாய்க்கும் தனித்தனி பயனிலையாக இயைந்து பொருள் தந்து நின்றாற்போல. இலக்கணக் கொத்தில் ஒழிபியல் இறுதிக்கண்ணே வரும் "உயர்திணை இயற்பெயர்" எனத் தொடங்குஞ் சூத்திரத்தில் "ஒருசொல் நின்றே தனித்தனி யுதவுதல்" என்பது இதற்கு இலக்கண விதியாகும்.

3. ஆடுவ — ஆடுவனவாகிய கொடிகள்;

4. வருக என்று கைகாட்டி யழைப்பபோன்ம் — வருவீராக என்று கையினாற் குறிப்புச் செய்து அழைப்பன போலும்: கொடியாடுவ என்ற எழுவாய் அழைப்பன போன்ம் என்ற வினைப்பயனிலை கொண்டு முடிந்தது. இச்செய்யுளில் தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. போன்ம் (போலும்) என்பது ஈண்டுத் தற்குறிப்பேற்றவணிக்குரிய உருபு: இதனை, "அன்ன போலெனும் அவை முதலாகிய சொன்னிலை விளங்குந் தோற்றமு முடைத்தே" எனத் தண்டியலங்காரத்தில் வரும் 57 ஆஞ் சூத்திரத்தா லறிக.

292\. பற்பன் னூறெனக் கூடிய பத்தர்கள்
பொற்கு டந்திபம் பூவணி மண்டபம்
தற்ப ரன்னுறை தண்டளி முன்றிலென்(று)
உற்ற பல்வயின் சொற்பொழி வாக்கினர். ௮

293\. தண்ட மிழ்ப்பெரு மக்கள் தழைத்துள
பண்டைத் தொல்பதி [1]கோலாலம் பூரினில்
மண்டு [2]பல்கலைக் கழகத்தும் மற்றுள
தண்ட மிழ்ச்சைவப் பேரவை தம்மிலும்; ௯

294\. [3]மலாக்கா நகர்தமிழ் மாண்[4]சிறம் பான்நகர்
சிலாக்ய வளம்பல தேங்கும்[5]ஈப் போநகர்
குலாவூர் [6]பிராய்கப்பல் குறுகு[7]பி னங்கெனும்
நிலாவு பல்பதி நீள்சபை தம்மிலும். ௧௦

295\. சென்று சென்று திருமுறை சாத்திரம்
துன்று சீர்ப்பொருள் பாரித்த தூயுரை
நன்று கூடிய நற்றமிழ் மாந்தருக்(கு)
ஒன்று காதலின் ஓர்ந்துரைத் தார்தூதர். ௧௧

296\. பேரெ ழுச்சிகொள் பெட்பார் மலேசியா
ஆர்வ மிக்கபே ரன்பர்கள் பண்புற
ஈர மிக்கநன் னெஞ்சின் [8]அருநிதி
சேரக் கொடுத்தார் சிவதொண்ட னுக்கவண். ௧௨

297\. இவ்வ கையனூர் எந்சிவ தொண்டனை
எவ்வ மில்குரு பரனையும் ஏத்திச்செய்
[9]பவ்வி யம்மது பகருந் தரத்ததோ?
அவ்வ ணம்ஐவர் தங்கடன் முற்றிற்றால். ௧௩

298\. [10]ஆடி மாசமூன் றாநாள் வெள்ளியில்
கூடு மன்பர்பால் கொள்விடை கூறைவர்
மாட மல்கு கொழும்புக்கு வந்தனர்
நாடி ஏத்தினர் குரவரை நண்ணியே. ௧௪

299\. அன்ன சற்குரு வாசியும் பெற்றனர்
சொன்ன சொற்படி ஆற்றிய சொற்றனர்
மன்னு மலேசிய மக்களின் ஆர்வத்தைத்
துன்னு மன்பிற் றுலக்கினர் பல்வகை ௧௫

---

1\. Kuala Lumpur. 2. University of Malaysia. 3. Malacca. 4. Seramban
5\. Ipoh. 6. Prai. 7. Penang. (Port Dickson, Taiping முதலாம் இடங்களி லும்.) 293 ஆம் செய்யுளும், 294 ஆம் செய்யுளும், 295 ஆம் செய்யுளும் குளகச் செய்யுள்.
8\. ரூபா 50,000/- கொண்ட நிதி. 9. பவ்வியம் — பயன்.
10\. ஆடி மீ 3 ஆம் நாள் தமிழ்த் திகதி (ஆங்கிலத் திகதி ஜூலை 19 ஆம் நாளா கும்.)

300. இருந்த இவணவை எல்லாமுட் காண்வலார்
திருந்த அன்பர்கள் செப்பிய செய்தியை
விருந்து போற்செவி மீதுகொண் டார்த்தனர்
அரும்பெ ருங்குரு வாசியாம் அன்னதே. ௧௬

---

## ௧௮. பணிபலபுரி சருக்கம்

### வேறு

301. கைவினை புரிந்து கங்கா தரன்கழல் போற்றிக் காண்கென்(று)
உய்யுமா காட்டும் ஐயன் ஓங்குமட் டக்க ளப்பில்
செய்யசிர்ச் சிவானந் தப்பேர்ச் செல்வவாச் சிரம இல்லம்
மெய்வரத் தொடங்கல் கேட்டார் வெண்பொன்கை விசேட மீந்தார். ௧

302. [1]தொடங்கிய விபுலா நந்தத் தூயநல் லடிகள் ஐயன்
தடங்கழல் போற்றும் பண்பிற் றன்னளி [2]முன்புஞ் சார்ந்தோர்
நெடுங்கலை விஞ்ஞா னத்தின் நேர்மையுந் தமிழ்ப்பாண் டித்யத்
திடமுமே பெரும்பே ராசன் சீர்த்திகள் பரவ வாழ்ந்தோர். ௨

303. [3]ஆசியோ டையன் ஈந்த அந்தக்கை விசேடத் தாலே
மாசிலாச் சிரமந் தானும் மாண்புட னோங்கி இன்றும்
தேசுடன் திகழ்வ தென்று செப்புவர் ஆங்குற் றோர்கள்
வீசொளி பூத்துச் சைவம் விளங்கிடத் தமிழும் ஓங்க. ௩

---

**1.** தொடங்கிய — ஐயன் அளித்த வெண்பொன்னைக் கைவிசேடமாகப் பெற்று, நிதி திரட்டிக் கட்டட வேலை தொடங்கிய.

**2.** முன்பும் — துறவறம் பூணுதற்கு முற்பட்ட காலத்தும்.

**3.** ஓங்கித் திகழ்வது எனவும், விளங்கவும் ஓங்கவும் திகழ்வது எனவும் இயைத்து எச்சமுடிவுகள் காண்க. "மாசில் ஆச்சிரமம் + ஆசியோடு...... கைவிசேடத்தால் + மாண்புடனோங்கி + சைவம் + வீசொளிபூத்து + விளங்கிடும்படியாகவும், தமிழும் ஓங்கும்படியாகவும் + இன்றும் தேசுடன் திகழ்வது" என்று + ஆங்குற்றோர்கள் + செப்புவர் எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

வேறு

304. செங்கலடிச் சித்தாண்டி வயல்க டம்மிற்
சீர்பெருக விளைந்தமுதற் செந்நெற் பாகம்
இங்குவந்து சேர்ந்தவுடன் இன்ப மெய்தி
என்புநெகு சேவைதிக முடியார் கொள்ளப்
பங்குபிரித் தீந்திட்டார் பலராங் கன்றோர்
பகிர்ந்தளித்த நெற்கூறு பெற்ற காலை
பொங்குமருட் பேறெனறே பூரித் தாரால்
பூரித்தோர்க் காசிகளும் புகன்று ரையன். ௩

305. [1]முன்னாளிற் காஞ்சியிற்செய் தவத்தின் அம்மை
முன்னிறுவுஞ் சிவலிங்க பூசை செய்கால்
முன்னனுகிக் கம்பைநதி மூளும் வெள்ளம்
முதல்வனுருக் குலையாமல் இருகை நீட்டித்
தன்னுறுமார் பகத்தணைத்துப் பூசைச் செய்கை
தழுவியதால் உவந்தீசன் காட்சி தந்து
மன்னுமறம் வளர்க்கவவட் கிரண்டு நாழி
வழங்கியநெல் லொக்குமையன் வழங்கு நெல்லே. ௫

306. [2]இவ்வாறே காஞ்சியினிற் காமக் கோட்டத்
தெம்மன்னை கொண்டவிரு நாழி நெல்லால்
செவ்வனறம் எண்ணான்கும் வளர்ந்த என்ப
சீர்க்குரவன் இந்நாட்டில் என்றும் மன்னி
எவ்வமிலா வறம்வளர்க வென்று வாழ்த்தி
இகத்துக்கும் பரத்துக்கும் உதவு மாறு
பவ்வியஞ்சேர் அருள்கொண்டு பகிர்ந்த நெல்லால்
பலஅறங்கள் வளர்ந்தனவென் றோர்ந்தா ரன்பர். ௬

வேறு

307. சங்கானை கிழக்கிலுறு சரவணமுத் தென்பவன்றன் தகைசால் மைந்தன்
மங்காத கந்தவரோ தயக்கழகத் தாங்கிலம்[3]மேல் வரவுங் கற்றோன்
இங்கிலாந்தி னரசிங்கு நிலவுங்கால் நிலவளவை இயற்றும் பாங்கில்
மங்காதேய் விகிதரெனத் தியத்தலவை கொழும்பாதி வயங்க வாழ்ந்தோன். ௭

---

1. இவ்வரலாற்றைப் பெரிய புராணம் திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணத்தில் வரும் ௫0 ஆம் இலக்கச் செய்யுள் தொடக்கம் ௭0 ஆம் இலக்கச் செய்யுள் வரை உள்ள செய்யுள்களால் அறிக.

2. 'இவ்வாறே............ என்ப' என்பது உவமான வாக்கியம். 'எவ்வமிலா... ......... வளர்ந்தன' என்பது உவமேய வாக்கியம். இரு வாக்கியங்களுக்கு மிடையே 'அதுபோல' என்னும் உவம உருபு வாசகம் தொக்கு நின்றதை விரித்துரைக்க, ''அகர முதல எழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு'' என்னுங் குறளிற் போல. இஃது எடுத்துக்காட்டுவமையணி.

3. மேல்வரவும் — மேலோங்கி வளரவும்; உம்மை எச்சவும்மை. அது தமிழறிவோடு சைவசமய அறிவும் வளர என்ற பொருளைத் தழுவிக் காட்டிற்று.

308. நயக்குரவன் சீடனுமாம் இளைப்பாறிக் கைதடிமீண் டுற்றே வாழ்ந்தான்
வியத்தகவாழ் நாளெலாநைட் டிகப்பிரம சரியமெனும் விரதம் பூண்டோன்
உயத்தகுநல் உபதேசம் பெற்றவழி தழுவிமுறை யொழுகுஞ் சீலன்
நயத்தகுபேர் மார்க்கண்டுச் சுவாமியென இன்றுமன்பர் நாட வுற்றான். அ

309. ஆங்கிலநாட் டரசபரி பாலனத்தில் ஈழஞ்சார்ந் தாண்டோர் தம்முள்
பாங்குறுதே சாதிபதி சோல்பரியாம் நாமமுறும் பண்பா ளன்றன்
தேங்குபுகழ் மூத்தமகன் 'ராம்ஸ்போதப்' பெயர்பூண்ட சீமான் நாடி
யாங்கணுமே கிட்டாத மனச்சாந்தி யெங்குரவ னிடத்தே பெற்றான் கூ

310. நங்குரவ னவன்றனக்கோர் மார்கழியில் ஆதிரையாம் நலநாள் சாரத்
தங்குமுப தேசமொடு தருசந்த சுவாமியெனத் தந்தே நாமம்
செங்கலடிச் சிவதொண்டன் நிலையத்தின் நிர்வாகச் சிறப்பும் நல்கப்
பங்கமறப் பூசைதுதி பண்முறைசாத் திரம்படனம் [1]பரித்தே வாழ்வான். க0

வேறு

311. சிவநெறியுஞ் செந்தமிழுந் தழைவி யோங்க
சீரியஐந் தெழுத்துத்திரு நீறும் பொற்ப
அவவினைக்கே ஆளாத லகன்று மாந்தர்
அரியசிவ புண்ணியத்தை ஆர்வத் தாற்ற
பவத்துயரின் நீங்குபண்புஞ் செயலுங் கொண்டு
பலபடியால் அருட்டிக்க வழியுங் காட்டி
உவந்தொழுக நாட்டியவர்க் குடனாய் நின்ற
ஒருமுதல்வ ரெனயோக முனிதாம் வாழ்ந்தார். கக

312. பிறவியெனும் பௌவத்துன் பலைகள் மோதப்
பெருகுமவாச் சரக்குப்பெய் தோணி மீதே
உறுமதியாங் கோலூன்றி யலைவேற் காங்கே
உயர்முத்திக் [2]கரைகாட்டும் விளக்கே என்னத்
[3]தறைமுழுதும் போற்றுதுற வருள்சேர் ஞானம்
தாங்கியுல கின்மோகந் தடிகொ ழும்புத்
துறைமருவும் யோகமுனி பதங்கள் போற்றிச்
சொன்மாலை சூட்டினேன் மகிழ்மீ தூர்ந்தே க௨

313. வாக்காய நோக்காலும் பரிசத் தாலும்
வளர்மனத்தின் மீன்கோழி யாமை முட்டை
ஆக்கமுற்றுப் பிள்ளைமைப்பே றுறுவித் தல்போல்
அகமுறுபா வனைசெயல்வாக் கவைமுன் னிட்டே

1. பரித்து — தாங்கி; நிர்வகித்து என்றபடி.
2. கரைகாட்டும் விளக்கே என்ன — கலங்கரை விளக்கம்போல. உவமஅணி; உருவகஅணி எனினுமாம்.
3. தறை — தரை; பூமி.

தேக்குபரி பாகநிலை கொளுவி யன்பர்
சிறந்திடுபே றெய்தநல்குங் குரவன் யோகம்
பூக்குமலர்ப் பாதங்கள் தினமும் போற்றிப்
புத்தின்பந் திளைக்கவரு பிறவி வாழி. கங

314. இமிழ்திரைநீர் சூழவனி மீதே யிங்ஙன்
எத்தனையோ மொழிவகைக ளிருந்திட் டாலும்
தமிழ்மொழிபோ லினியதொரு மொழியுங் காணோம்
சங்கரன்போ லினியதொரு தெய்வங் காணோம்
நமசிவய மந்திரம்போல் நலதுங் காணோம்
நம்யோக குரவன்போற் குருவுங் காணோம்
அமிழ்தனையான் திருவடியைப் பாடி ஆடும்
அடியவரை யெந்நாளும் அகன்றி டோமே. கச

315. ஆணவத்தின் வயப்பட்டோர் அறிவா லெய்தற்
கரியானை யணிகொழும்புத் துறையி னானைப்
பேணுமவர்க் கண்ணுபெருந் திருவைச் சோதிப்
பெரியானைப் பேசுந்தோ றினிதாந் தேவைக்
காணுதற்கிங் கெளியானைக் கருதுந் தோறும்
கன்னலெனத் தேனென்னக் கனியே யென்ன
மாணமிழ்த மென்னஇக பரத்தி னின்பம்
வழங்குமுனி பாதமெம்முள் மன்னி வாழி. கரு

316. அடியவர்க்கு நெறிகாட்டு மையன் ஆவுக்(கு)
அருத்தவுண வதுகைக்கொண் டணுகும் போழ்து
தடங்குடில்கட் டுண்டஅதூஉம் [1]அவாவிற் றுள்ளித்
தாவிமேற் பாயக்கீழ் விழுந்தார் ஆங்கே
தொடைப்பூட்டு நொந்ததுகண் டன்பர் கிட்டித்
தூக்கியவர் உறைவிடத்தே இருத்தி வைத்ய
நடைமுறையிற் சிகிச்சைகளும் செய்து வேண்டும்
நற்பணியும் புரிந்ததினி விரிப்பாம் மன்னே. கசு

---

1. அவாவிற்றுள்ளி ..... பாயக்கீழ் விழுந்தார் — அவாவில் + மேல் + துள்ளி + தாவி + பாய + ஆங்கே + கீழ்விழுந்தார் — ஐயன் மீதும் உணவின் மீதுங் கொண்ட ஆசையினால் உயரத் துள்ளி முன்னங் கால்களை உயர்த்திப் பாய்ந்து கிட்டவர, ஐயன் உடனே அப்பொழுது அதன் கால்கள் தம்மீது பொருந் தாதபடி திடீரெனப் பின்வாங்கியமையால் கீழே விழுந்தார்;

## ௧௧. திருவடி பெற்ற சருக்கம்

வேறு

317. ஆசில் வருடம் ஆயிரத்துத் தொள்ளா யிரத்தறு பானொன்றில்
மாசித் திங்கள் தனிலோர்நாள் வழக்கம் போலப் பசுவுக்கு
மாசில் உணவை யளிப்பதற்கு வள்ளல் எங்கள் குருபரனும்
கூசா தாவின் கொட்டிலிடம் குறுகி யுணவைக் கொடுத்தனரால். ௧

318. மாடார் அதுமேற் றுள்ளியெழ மருங்கொட் டாவகை திடீரெனப்பின்
பாடே கடிதிற் றிரும்பிவிழப் பக்கத் தொருதொடைப் பூட்டெலும்பங்(கு)
ஊடே முறிந்து விட்டதந்த உடனே நிலத்தில் அமர்ந்துவிட்டார்
பீடே மிகுபெம் மாற்கீது பிராரத் தத்தொன் றுற்றதுகொல். ௨

319. எதிர்பா ராத இன்பதுன்பம் இந்தப் பிறப்பி லெய்துவதை
விதியின் பயனும் என்பரதை விஞ்சித் தடுத்தல் ஆவதன்றே
[1]மதியின் நுட்பம் வாய்ந்தவர்க்கும் சிவாநு பூதி மான்களுக்கும்
[2]விதியூ றெல்லாம் வினைவ[3]வெனின் [4]வாதை யில்லை யுயிர்க்கென்ப. ௩

320 அன்ன தன்றித் தம்அன்பர் எய்தக் கடவ பெருந்துன்பை
உன்னித் தாமேற் றுற்றதுகொல் ஒன்று மறியோ மென்றுங்கே
அன்பர் பேசி அலமந்தார் ஔட தந்தேர் மருத்துவரால்
என்பு பொருந்தி நேர்படினும் எழுந்து நடக்க கிலரானார். ௪

321. சில்வி னியங்கு நாற்காலி கொண்டிங் குலாவச் செய்தனரால்
ஒல்லும் வகையில் தியானாதி உஞற்றி அமரச் சயனிக்க
நல்ல புதிய கட்டில்நாட் கடமை யெலாஞ்செய் வாய்ப்பமைந்த
இல்லுந் தந்தா ரன்பர்களும் இனிதி னையன் வாழ்ந்தனரால். ௫

322. முன்னாட் பார தப்போர்வீழ்ந் திடும்[5]வீ டுமன்றான் முடிவெய்தல்
துன்னும் [6]பருவ நிலையுற்றான் எனினுந் தூய வரவலியால்
மன்னும் உயிர்தான் மாறாமல் வதிந்தே உத்த ராயணம்வந்(து)
ஒன்றும் வரையும் சரசயனம் உற்றே வாழ உளங்கொண்டான். ௬

---

1. மதியின் நுட்பம் வாய்ந்தவர்க்கும் — ("சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு, அபாயம் ஒருநாளும் இல்லை — உபாயம், இதுவே மதியாகும் அல்லாத எல்லாம் விதியே மதியாய் விடும்" (நல்வழி செ. 5) என்ற ஔவையார் பாட்டிலே, "சிவாய நம ..........மதியாகும்" என்றதை அநுசரித்து நடக்கும் நுட்பமதி பொருந்தியவர்க்கும். 2. விதியூறு — பிராரத்த வினையாகிய நியதியால் உண்டாகுந் தீங்குகள். 3. எனின் — எனினும் (உம்மை தொக்கது.) 4. வாதையில்லை உயிர்க்கு என்ப — பிராரத்தவினை உடலோடு ஒழியும்; உயிரை வாதியாது என்ப. நீற்றறையில் வைத்தமை, சமணர்கள் நஞ்சூட்டியமை போன்ற துன்பங்கள் உடலை யெய்தின. ஆனால், அவை உயிரைத் தாக்கி வருத்தவில்லை என்ற அப்பர் சுவாமிகள் வரலாறு போன்றவை உதாரணங்களாம். 5. பீஷ்மர் என்னும் வடசொல்லது திரிபு.
6. பருவநிலை — பக்குவநிலைமை.

323. கொண்டு வாழ்ந்தோன் தருமன்முடி கொண்டாள் காலத் தைவர்க்கும்
பண்டை யரச தருமமுதல் பரிவிற் போதித் தானதுபோல்
மண்டி யிருப்பி னிருந்தையன் வருமன் பர்தம் பணிவினவ
விண்டே பாதயாத் திரையாதி வெருகைங் கரியம் புரிவித்தார். ௭

324. ''எடுத்த பணிகள் சிவதொண்டன் நிலையத் துருற்றி யித்தீவின்
அடுத்து வாழும் அன்பர்க்கிங் காவநல்ல நெறிபயிற்றி
விடுத்த தமையும்; வேறில்லை'' என்றே கொழும்புத் துறையிற்றும்
தொடக்கு திருசே ரடிப்பூசை துதிசெய் நாளை [1]எதிர்பார்த்தார். ௮

325. துங்க பங்குனி ஆயிரத்துத் தொள்ளா யிரத்தோ டறுபான்நான்(கு)
அங்கண் ஆயிலி யத்திருநாள் அடிப்பூ சைக்காந் தினமென்றே
பங்கி லன்பர் திருப்பாடல் பன்ன இரவின் கடையாமம்
தங்க ஐயன் கூடுநிட்டை தரித்தே [2]சமாதி நிலைசார்ந்தார். ௯

326. இம்மா சமாதி யெய்திநிலம் இகந்தே சென்ற செய்தியதை
அம்மா அணுக்கத் தொண்டரெலாம் அறிந்தே நெஞ்சந் துணுக்குற்றுர்
இம்மா யப்பே ருலகின்கண் யாம்நின் துணைதப ஏகினையால்
பெம்மான் எம்பால் வாராயோ பெட்பார் அருண்மொழி தாராயோ. ௧௦

327. ஆக்கம் அழிவும் இலதுயிரால்; அநித்தப் பொருளுல குடலாதி;
வாக்கே மனமுடல் மற்றவைநாம் மாதே [3]வன்னருள் பெற்றுய்தற்(கு)
ஆக்கப் பெற்றவை எனவேதம் அறைவ தறிமின் செய்ம்மினெனு
ஊக்குங் குரவா! எமக்கினியார் உய்யும் நெறியிங் குய்த்துதவ. ௧௧

328. இந்தத் திருமே னியைமுறையா லெரிவாய் மடுப்ப விட்டிடுவார்
பந்தந் தவிர்த்தோய்! நின்னருள்சேர் பார்வை யொடுநீ பாடிடுநற்
சந்தத் திருப்பா டல்மற்றுந் தகவார் போதனை ஆஞ்ஞையெலாம்
இந்தப் பிறவியில் யாமெய்தற் கினிவாய்ப் பிலையென் றேங்கினரே. ௧௨

329. ஒன்பது பத்தாண் டகவைவாழ் வுற்றுந் தளராத் திருமேனி
மன்பதை யுய்ய உலாவியருள் வழங்குந் தெய்வத் திருமேனி
இன்பத் தேனூ றுபதேசம் இணங்க இயம்புநின் திருமேனி
மன்னி யிவணினி வாழ்தற்கு மாணு தென்றோ மறைந்தாய்நீ. ௧௩

330. மயக்க உலக வாழ்க்கையெனும் மாபே ரலைகடல் மோதஉலை
தயக்கத் துடன்சார் பவர்க்கவைதாம் தவிர அருள்புரி தயாநிதியே!
உயப்போக் கிவணி எமக்கருளென் றுன்னி நைந்தும் அரற்றகிலார்
பயக்கும் புன்கணீர் பொழிஇமௌனம் பரம்பக் கலங்கின ரடியரெலாம். ௧௪

---

1. ஏன் எதிர்பார்த்தாரெனில், தாம் அந்தியச் சமாதிநிலை கூடுதற்கு என்க. அது வருஞ்செய்யுளில் ஓர்ந்துணரக் கிடக்கின்றது.
2. சுவாமிகள் சமாதி எய்திய ஆங்கிலத் திகதி 23-4-64 திங்கட்கிழமையாகும்.
3. னகரம் இரட்டித்தது. விரிக்கும்வழி விரித்தலாகிய செய்யுள் விகாரம்.

331. இந்தச் செய்தி வாளொலிதூ தோலைப் பேச்சறிந் தெண்டிசையோர்
வந்தார்; கலையா நிட்டைவதி குரவன் வதனங் கண்டவரும்
எந்தங் குருபர! இங்கெமைநீ இகந்துறு துன்பந் தாங்ககிலோம்
நைந்தோ மெனவுட் கையாறு நண்ணி [1]மௌனத் தலமந்தார். ௧௫

332. கத்தோ லிக்கக் குருமார்கள் களத்த பௌத்த பிக்குக்கள்
ஒத்த புரொட்டெஸ்ட் டானுறுவர் ஓங்கும் முஸ்லிங் களும்வந்து
வித்தி யாசம் இல்லாமல் மேவி ஐயற் கஞ்சலியைச்
சுத்த சைவ ருடன்நெஞ்சத் தன்பு துளும்பப் புரிந்தார்கள். ௧௬

333. ஒருமுன் னுள்ளவ் கறைப்போழ்தில் ஒழியா நிட்டை கொள்ளையன்
திருவா ரண்மையிற் சூழன்பர் செய்தி யும்புலர் மறுநாளில்
வருமெண் டிசையோர் செய்தியுமிவ் வண்ணம் ஆகஅந் நாள்முற்றும்
அருகில் அன்பர் திருமுறைநற் சிந்த னைப்பா படித்தமர்ந்தார். ௧௭

334. [2]அடுத்த நாள்புத வாரத்தின் அதிகா லைக்குரு திருமேனி
எடுத்துப புனித நீர்முதலா எனைப்பல் பொருளால் அபிடேகம்
தொடுத்துப் புரிந்து புததாடை தூய நீறு சாந்தமலா
தொடுத்த மாலை யணிந்துபூந் தொட்டில நடுவிமா னத்திருத்தி. ௧௮

335. வெண்துங் கச்சிர முடிதாடி வெண்ணீ றுடை சத்வகுண
எண்மே னியெலாம் உருத்தெழுந்த தென்ன இலங்க எழில்முறுவல்
நண்ணரிப் பூத்த முகம்பொலிய நறைப்பூ விமான மீதமர்ந்த
கண்ணேர் குருமணிக் காட்சிகவின் காண்பார்க் கிருகண் போதாவே. ௧௯

336. கண்டி கொழும்பு முத[3]லூராற் ககன வூர்தி கார்கள்புகை
வண்டி யாதி பலவூர்ந்தும வந்து சேர்நத அடியார்கள்
மண்டு பல்லா யிரமக்கள் வணங்கிப் பத்திப் பாடலொடு
துண்டி வரைக்கும் உடன்சென்றார் தூயோ னிறுதி யாத்திரையில் ௨௦

337. துண்டி மயானம் அடையச்செல் தூயோன் விமான வூர்வலந்தான்
மண்டும வீதி யிருமருங்கும் மணிததோ ரணமா வாழைநிரை
கொண்ட தீபம கும்பமலர் குலவும் பனிநீ ராலாத்தி
கொண்டு போற்றி எதிர்கொண்டார் குடிமனை தோறும் வதிபவரே. ௨௧

338. பெண்பா லடியார் திருமுறைகள் பின்செல் அணியாப் பெரிதிசைத்தார்
பண்ணார் நற்சிந் தனைப்பாடல் பாடி முன்னணி யாண்சென்றார்
எண்கொள் கலூரி யினைஞரணி இயைந்தே யிருபால் தொடர்ந்துவர
வண்டேய் அஞ்சலிப் பூமாரி மாண விமானஞ் சென்றதம்மா! ௨௨

---

1. மௌனத் தலமந்தார் — வாய்விட்டுப் புலம்புதலின்றி மௌனம் பூண்டு கலக்க முற்றனர்.
2. 334 ஆம் செய்யுளும் 335 ஆம் செய்யுளும் குளகச் செய்யுள்.
3. ஊரான் — ஊர்களிலிருந்து; ஐந்தாம வேற்றுமை நீக்கப் பொருளில் வந்தது

339. பரம னுடுஞ் சுடலைதனைப் பரம ஞானித் திருமேனி
மருவி யடைந்த காலத்து மணியொன் பானமே லாயிற்றே
எரியுண் பூமி விமானமதை இறக்கி அஞ்சலி செய்தாராய்ப்
பரவிப் பாடிச் சூழ்போந்த பல்லா யிரவர் சூழ்ந்தமர்ந்தார். உங

340. [1]சாந்தி னிந்தனம் பலஅடுக்கிச் சாரக் கிடத்தித் திருமேனி
வாய்ந்த கற்பூ ரச்சோதி மயமா வண்ணஞ் செய்தார்கள்
மாய்ந்து சோதி நீறாக வகையால் என்பு சாம்பரிவை
ஆய்ந்து வெள்ளிக் குடம்பலவி னடங்க மடுத்துச் சேமித்தார். உச

341. கண்ணா ரப்பின் காடாற்றிக் கருதி என்பின் சாம்பரெச்சம்
திண்ணொன் றள்ளித் தீர்த்தத்தே சென்றுய்த் தாரதன் பின்மீண்டார்;
கண்ணோ ரையன் வாழ்பூமிக் கவினக் கட்டினர் சமாதிநிலை
நண்ணா என்புக் கலசமொன்று நாட்டிப் பூசை துதிசெய்தார். உரு

342. கண்ணார் காட்சிக் கரியானாய்க் கடைக்காற் சமாதி எய்திடினும்
உண்ணா டடியார்க் கொளிர்பவராய் உலவும் ஐயன் [2]ஆணைதீர்(வு)
ஒண்ணா முறையா லொழுகித்தா முறுதி பெற்றார் ஓங்கன்பர்
பண்பா டெமர்க்குப் பண்டையன் பாங்கிருந் தறைகுந பரித்தமை[3]போல்.

343. [4]உணவுப் பொருட்டாப் பயிர்த்தொழிலும் உயிரோங் குறச்சிவ தொண்டனும்நல்
வணமா நிலவ வற்புறுத்துந் தீர்க்க தரிசன வளம்போற்றி
மணமும் மலரும் போலன்பர் மனத்துள் ளமர்குரு பதம்போற்றி
கணமார் அடியார்க் குறுதிபுகல் கருத்தும் வாய்மையும் போற்றிநிதம். உஎ

---

1. சாந்தின் இந்தனம் — சந்தனக்கட்டைகளாகிய விறகு.

2. ஆணைதீர்வொண்ணா முறையால் — (சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் இட்ட) ஆஞ்ஞையாகிய கட்டளை மொழியிலிருந்து தவறாத முறைப்படி.

3. போல் — போல. இது ஒழுகி என்னும் வினைகொண்டு முடிந்தது. 'பண்பாடு...... போல் + தாம் + ஒழுகி + உறுதி பெற்றார்' என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க.

4. உணவுப் பொருட்டாப் பயிர்த்தொழில் வற்புறுத்தும் தீர்க்கதரிசனவளம் போற்றி — எதிர்காலங்களில் உணவுப் பஞ்சம் ஏற்படும்; அதன் பொருட்டு இக்காலத்தே பயிரிடுந் தொழிலாகிய விவசாயத்தில் பெரிதளவாக ஈடுபட்டு ஆக்கப்பாடுற வேண்டும் நீங்கள் என்று வருமுன் காப்பாகும் எச்சரிக்கை வார்த்தைகளால் வற்புறுத்திச் செய்வித்த நீண்ட தூர எதிர்கால நிகழ்வை உணர்ந்த ஞானக் காட்சியின் பொலிவு துதித்துப் புகழத்தக்கது. போற்றி — போற்ற (புகழ) ப்படத்தக்கது; போற்று + இ = போற்றி; செயப்படு பொருட்பெயர் விகுதி பெற்ற வினைப்பெயர்; இதனை வடநூலார் 'கிருதந்தப் பெயர்' என்ப; 'ஊருணி' போல்வது.

## நூற்பயன்

### வேறு

344. தண்ணளி கொழிக்கும் யோக சுவாமிகள் சரிதம் இந்நூல்
கண்ணியன் புடனே கேட்டோர் கற்பவர் உலக மோகப்
பண்பினில் வாழ்வா ரேனும் பத்திமார்க் கம்பூண் கொள்கைப்
புண்ணிய ராகி ஈசன் பொற்பதஞ் சேர்ந்து வாழ்வார். உஅ

## மங்கல வாழ்த்து

### வேறு

345. அந்தணர் வேள்வி வாழி யருஞ்[1]சைவ நீதி வாழி
முந்துநங் குரவர் யோக முனிவர்தம் சரிதம் வாழி
[2]சந்ததம் [3]குருமார் ஈசன் சங்கமர் சேவை வாழி
முந்துசீர் அடியார் வாழி முழுதுல குயிரும் வாழி. உகூ

சருக்கம் பத்தொன்பதுக்கும் திருவிருத்தம் 345.

இரண்டாம் காண்டம் முற்றிற்று.

சிவயோகசுவாமிகள் திருச்சரிதம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

---

1. சைவநீதி — சரியை, கிரியை, யோக, ஞானங்களாகிய நால்வகை நெறிமுறை யொழுக்கங்கள்.

2. சந்ததம் — எப்பொழுதும், எக்காலத்திலும்;

3. குருமார் ஈசன் சங்கம சேவை — குருலிங்க சங்கம வழிபாடு.

உ
சிவமயம்

சுவாமி புகழ்

என்னும்

# சிவயோக சுவாமிகள் புகழ்ப்பாமாலை

செந்தமிழ்ச்சிரோமணி, பண்டிதவித்துவான்
**க. கி. நடராஜன்** B. O. L., Dip. Ed.
அவர்கள் இயற்றியது.

...லைத சேவை
...ாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

## சுவாமி புகழ்

என்னும்

# சிவயோகசுவாமிகள் புகழ்ப் பாமாலை

### விநாயகர் துதி

வெண்பா

நலந்தரு நற்பத நிழலெந் ஞான்றுங்
கலந்தவர்க் கீந்து கருணை — மலர்ந்தருளும்
ஆனந்தக் கற்பக வேழத்தி னற்புத
[1]ஆனனத்தாய்! முன்னின் றருள்.

### குருபரன் துதி

மேகம் வரக்கண் டுளங்களித்து விரிக்குந் தோகை மயிலாடப்
[2]பூகம் மகிழ்ந்து தண்டரளம் பொழியுங் கொழும்புத் துறையதனில்
ஏக முனிவ ராய்த்திகழ்ந்தெம் இடர்கள் களைந்தே யாட்கொண்ட
யோக குரவன் திருவடியென் னிதயத் தலத்தி லோங்கிடுமே.

## க. குருபரன் வரிப்பாட்டு

### தாழிசை

1. ஆசையெலாங் கட்டறுத்திவ் வவனியிலே வாழும்வகை
மாசறவே காட்டியருள் மாமுனிவன் யோகநாதன்
பாசமெலாம் வேரறவே பண்ணிவைக்கும் புண்ணியனந்
தேசிகன்சீர் கேளாத செவியென்ன செவியே
செல்வன்சீர் கேளாத செவியென்ன செவியே.

2. அறியாமை யகற்றியுண்மை யறியவைத்த சிற்பரனைக்
குறியாகக் கோணைக் குருவாக வந்தெமக்கு
நிறையின்பந் தந்தவன்றன் நீண்முடியுஞ் செய்ய
திருவடியுங் காணாத கண்ணென்ன கண்ணே
தெய்வத்தைக் காணாத கண்ணென்ன கண்ணே.

3. அல்லலறுத் தானந்தம் ஆக்கியெமை யாண்டருளிச்
செல்வமெலா முவந்தளித்த சிற்பரனைத் தற்பரனைத்
தொல்வளங்கள் சேர்கொழும்புத் துறையோக நாதனையே
நல்லதமிழ் பாடாத நாவென்ன நாவே
நங்குருவை யேத்தாத நாவென்ன நாவே.

16-8-60.

---

1. ஆனனத்தாய் - முகத்தையுடையவரே. 2. பூகம் - கமுகு.

## ௨. வணக்கப் பஞ்சகம்

1. பஞ்சென வொளிருந் தாடி பரிந்திடுங் குளிர்ந்த பார்வை
விஞ்சிடுங் கருணை யுள்ளம் வேண்டுவ வளிக்கும் வண்மை
தஞ்சமென் றவரை யென்றுந் தாங்கிடும் நோன்றாள் கொண்டு
செஞ்சொலால் ஓம்பும் யோகச் செல்வனே! வணங்கு கின்றேன்.

2. அன்புரு வாகி யெம்மை யாட்கொண்ட வள்ளால்! ஏழை
துன்பமே போக்க வந்த துரிசறு குருவே! கோவே!
மன்பதை மயங்கா வண்ணம் வழிகாட்டி யாள வந்த
இன்பமார் வடிவே! யோக நாதனே! வணங்கு கின்றேன்.

3. ஐம்புலன் நீயே யல்லை ஐந்துபூ தங்க ளல்லை
வெம்பிடுங் கரண மல்லை வேறுமுக் குணங்க ளல்லை
வம்பென வந்த விந்த வடிவுநீ யல்லை யென்ற
செம்பொரு ளுருவே! யோக தேவனே! வணங்கு கின்றேன்.

4. ஐந்தெனுந் தொகையைக் கொண்ட ஆற்றல்சால் புலனர் தம்மை
மைந்துடன் வயப்ப டுத்தி வாழுதி மண்மே லென்றாய்
ஐந்தெனும் புலன்கள் மீறி யலமரச் செய்யும் போது
வந்துநீ யருள்வாய் யோக வள்ளலே! வணங்கு கின்றேன்.

5. ஐயனே வணங்கு கின்றேன் அப்பனே வணங்கு கின்றேன்
மெய்யனே! வணங்கு கின்றேன் விகிர்தனே! வணங்கு கின்றேன்
மையல்வாழ் வதனி லெய்தும் மயக்கங்க ணீக்கி யாளுஞ்
செய்யபொற் பாதா! யோகச் சீரியோய்! வணங்கு கின்றேன்.

6-11-60.

## ௩. காத்துக்கோட் பத்து

1. இருடிகள் முனிவர் சித்தர் இவர்களை நூலிற் கேட்டோம்
இருடியே! முனிவா! சித்தா! இன்றுனை நேரிற் கண்டோம்
மருடரு பார்வை யெல்லாம் மாற்றியே யாண்டு மேலாம்
அருடரு யோக மூர்த்தி! அடியனைக் காத்துக் கொள்ளே.

2. நதியினைச் சடையில் வைத்த நாதன்றாள் மறவாப் பேற்றைப்,
பதியினை, நின்பால் என்றும் பத்திசெய் பெரியார் தம்மை,
நிதியென வொன்றாக் கொள்ளும் நின்னருந் தொண்டை நல்காய்
கதியது வேறு காணேன் அடியனைக் காத்துக் கொள்ளே.

3. பட்டியிற் சேர்த்தே னென்றாய் பகர்குறி சுட்டே னென்றாய்
பட்டியாம் மகனாய் இன்னும் படிறனாய்த் திரிகின் றேனை
மட்டறு மின்ப வெள்ள வாரிதி வழங்குங் கோவே!
கட்டறுத் தாண்டென் ஐய! அடியனைக் காத்துக் கொள்ளே.

4. நல்லவ ரினத்திற் சேர்ப்பாய் ஞானமு மன்பும் நல்காய்
அல்லவை யெல்லாம் நீக்கி யாண்டருள் யோக நாதா!
சொல்லெலாம் மௌன மென்றாய் தொழில்களும் மௌன மென்றாய்
நல்லருட் குருவே! தேவ! நாயனைக் காத்துக் கொள்ளே.

5. தொட்டவை யெல்லாந் துன்பம் தோன்றிடும் எவையுந் துன்பம்
பட்டவை யெல்லாந் துன்பம் பாரினிற் பிறப்பே துன்பம்
மட்டவிழ் கமல பாதம் வழுத்துத லொன்றே யின்பம்
கட்டமே யொழிக்குந் தேவ! கடையனைக் காத்துக் கொள்ளே.

6. தியானமே யறியேன் செய்யுஞ் செபதப மறியேன் வீணே
மயானஞ்சேர் வாழ்வை நம்பி மனத்தினிற் களிக்கின் றேனே
தியானமும் உன்றன் பாதஞ் சிந்தித்த லொன்றே யன்றித்
தியானம்வே றறியா இந்தச் சிறியனைக் காத்துக் கொள்ளே.

7. எப்போதும் உன்னை யேயான் கண்டிடல் வேண்டும் எந்தாய்!
எப்போதும் உன்னை யேயான் எண்ணிடல் வேண்டும் ஐயா!
எப்போதும் உன்றன் சீர்த்தி ஏத்திடல் வேண்டுந் தேவா!
எப்போதோ முடிந்த தென்போய்! எளியனைக் காத்துக் கொள்ளே.

8. உருகிடும் உள்ளம் வேண்டும் உன்னையான் பற்றல் வேண்டும்
பெருகிடும் அன்பு வேண்டும் பேணுநற் சிந்தை வேண்டும்
அருகினிற் பெரியோர் வேண்டும் ஆண்டகை! அருளும் வேண்டும்
குருபர! யோக நாத! குறித்தெனைக் காத்துக் கொள்ளே.

9. ஏடவிழ் கொன்றை சூடும் எம்பிரான் கருணை வெள்ளம்
ஊடகந் ததும்ப வேண்டும் உள்ளநெக் குருக வேண்டும்
வீடுறும் மார்க்கம் வேண்டும் வியன்பெருங் குரவா! யோக!
ஆடகப் பாதா! தேவா! அடியனைக் காத்துக் கொள்ளே.

10. துறவினை யறியேன் யோகத் தூநெறி யறியேன் ஞான
நெறியினை யறியேன் நாதா! நீயெனைக் காத்துக் கொள்ளே
வறியனைக் காத்துக் கொள்ளே வள்ளலே காத்துக் கொள்ளே
உறவுநீ நல்ல வெல்லாம் உய்த்தெனைக் காத்துக் கொள்ளே.

11-11-60.

## ச. திருப்புகழ்

*("சரணகமலாலயத்தை" என்னுந் திருப்புகழ்ச் சந்தம்)*

உலகதனி லேச னித்துப் பலபருவ மேக ழித்திங்(கு)
    உடலைமெய்யென் றேம தித்தென் — இறையோனை
  ஒருகணமு மேநி னைந்துள் ளுருகுகுண மேபெ ருத
    ஒருகசட னுமெனையும் — பொருளாக்கிப்
பலவழியி லேதி ருத்திப் படியின்மிசை யேயி ருத்திப்
    படிமுறையி லேவ ளர்த்த — படிவோனே
  பவமதனை மாற்ற வல்ல நவமுறை யிளைப்பு கட்டிப்
    பகர்வரிய பாதம் உற்று — வழிபாடு
நலமுமுற வேயு ஞற்றக் கலகலப்பெ லாம கற்றி
    நவிலமுடி யாத வின்பம் — அளித்தோனே!
  நறுந்தமிழின் மாலைபெற்றே யுறும்பெரிய நேச முற்றே
    நகைமுகஞ்செய் தாளு மென்றன் — குருநாதா!
வலம்புரியின் [1] நித்தி லத்தை மகிமைபெறு கற்ப கத்தை
    வரைதருமி ரத்தி னத்தை — நிகர்வோனே!
  மலரடியை நாயெ னென்றும் மறந்தலிலா மாண்ப ளிப்பாய்
    வளர்கொழும்புத் தண்டு றைசேர் — பெரியோனே!

*6-1-63;*

## ரு. குருபரன் சரணப்பத்து

1. ஒன்றைவிட் டொன்று பற்றி யோடிடுங் குரங்கோ ஆசை
என்றிடும் பெருங்காற் றாடே யெய்திய பஞ்சு தானே
என்றிடத் தக்க நெஞ்சை இனிதுநின் திருவடிக்கீழ்
நின்றிடச் செய்வாய் யோக நின்மலா! சரணு னக்கே.

2. பெற்றதைச் சிறிதே யாக்கிப் பெறுதன பெரிதாக் காட்டி
அற்றைநாட் டொடக்கம் என்னை ஆட்டிடும் ஆசை நோயைப்
பற்றறக் களையும் மார்க்கம் பகர்ந்தனை கருணை யாலே
மற்றதன் வழியே நிற்கும் மதுகைதா சரணு னக்கே.

3. உலகமே மின்னல் போன்ற துன்பதம் பனிவ தொன்றே
நிலையென வோர்ந்து நின்றன் நீள்பெரும் பணியில் நின்றும்
அலைவிலாப் போதங் கொண்டும் ஐய! யான் உய்வ தற்குக்
கலைபல தந்தாள் யோகக் கருணையே! சரணு னக்கே.

29512

1 நித்திலத்தை - முத்தை.

4. குடமது வுடைந்த பின்போ மண்ணெனக் கொள்வ தையா
சடமதும் இறந்த பின்போ பொய்யெனச் சாற்றல் சாலும்
சடமது பொய்யதென்று சகசமா யுணர்ந்துன் பாதம்
திடமுறப் போற்றச் செய்வாய் தேவனே சரணு னக்கே.

5. சொல்லினுற் பொருளால் தர்க்கத் தொடர்பினுல் தொடர வொண்ணு
நல்லருள் நெறியை நாடும் நல்லவர் அவையில் வைத்தாள்
அல்லுடன் பகலெஞ் ஞான்றும் ஐயநின் அருள்ப ழுத்த
சொல்வழி நிற்க வைத்தாள் தூயனே! சரணு னக்கே

6. கன்னலாய்க் கனியாய்க் கண்டு தேனெடு சருக்க ரையாய்
உன்னருள் சுவைக்கக் கண்டும் ஓரொர்கால் மறந்தே மாயை
தன்னிலே யின்னம் விழ்ந்து தவிக்கவேன் வைத்தா யையா!
இன்னருள் யோக நாதா! எந்தையே! சரணு னக்கே.

7. அருளது திரண்டே யிந்நாள் அரும்பெறல் வடிவே யாகிப்
பொருளிது வென்று காட்டிப் பொற்பொது நடுவண் நின்று
திருநடஞ் செய்யும் ஐய! சிர்க்குரு பரனுய்த் தோன்றி
இருளெலாம் இரிய வைக்கும் எந்தையே? சரணு னக்கே.

8. சும்மாவிங் கிருத்த லேதான் சுகஞ்சுக மென்று சொன்னுய்
அம்மாவிங் கிதனை யேதான் அருமறை தானுஞ் சொல்லும்
பெம்மானே! யோக மூர்த்தி பேரருட் பிழம்பே! இந்த
வெம்மாயக் காடெ ரித்தாள் விமலனே! சரணு னக்கே.

9. நவந்தரு ராட்டி னம்போல் நானுமே சுழன்றெஞ் ஞான்றும்
பவந்தனி லகப்பட் டேகிப் பாலனுய்க் குமர னுகி
உவந்துபின் வயோதி கத்தில் உவர்ப்பது கொண்டு வாடித்
தவந்தனை நாடச் செய்யுந் தயாபரா! சரணு னக்கே.

10. தினியி னுசை யுண்டேல் திகைப்புறச் செய்து நாளும்
யோனியி னுசை யுண்டாம் யோகமும் கைகூ டாதே
ஊனினைப் பெருக்கும்; உள்ளம் ஒடுங்கிடா; ததனிற் றப்பி
ஞானம தடைதி யென்ற நாதனே! சரணு னக்கே.

6-8-61.

## ௩. உந்தி பறத்தல்

*பாடிப்பற பாடிப்பற உந்திபற பாடிப்பற*

1. போகமே கண்கண்ட பொருளென் றுலகினில்
ஓகை கொளும்மாந்தர் உறுசூழல் சேராமல்
வேகந் தணிவித்து மெய்யன்பு கொளவைத்த
யோகநா தன்புகழ் பாடிப்பற
உய்யுநெறி தந்தவனைப் பாடிப்பற.

2. விண்ணரின் னிழிந்திடும் வியனகர் போன்றொளிர்
தண்ணறும் மதுமலர்த் தண்டலை ஈழத்தில்
உண்ணரின் னுருக்கியொண் ணெறிதனைக் காட்டுமெம்
கண்ணானான் புகழ்தனைப் பாடிப்பற
காதலர்கள் கண்மணியைப் பாடிப்பற.

3. நல்லூரிற் செல்லப்பர் நமக்கீந்த பாக்கியத்தை
எல்லாரும் பெறவைத்த இன்பமார் பெருமானைக்
கல்லைப் பிசைந்தினிய கனியாக்க வல்லவனைச்
சொல்ல அரியவனைப் பாடிப்பற
சுருதி கடந்தவனைப் பாடிப்பற.

4. நவநவ மாகவெழு நற்சிந் தனைமுன்றில்
பவமகல நாஞ்சிறிய பாலர்போற் றவழ்ந்துய்ய
அவநிலையை யெய்தாமல் அவனிகடைத் தேறவரும்
தவமுனிவன் தன்மையினைப் பாடிப்பற
தரணிக்கோர் அரியேறைப் பாடிப்பற.

5. பொய்யர்க்குப் பொய்யாகிப் புனிதநிலை நன்குணர்ந்த
மெய்யர்க்கு மெய்யான வேதியனைத் தேசிகனை
உய்ய வுலகுயிர்கள் உருவம் எடுத்தவனை
ஐயனவன் தன்மையினைப் பாடிப்பற
ஆண்டவன் தன்மையினைப் பாடிப்பற.

6. காதினாற் கேட்பதற்கும் கண்ணாலே பார்ப்பதற்கும்
பாதசேவை செய்வதற்கும் பரிசித் தறிவதற்கும்
ஏதுக்க ளாலறியாப் பாதியுரு பெண்ணானேன்
மேதினியிற் குருவானான் பாடிப்பற
மேலினிக் குறைவில்லைப் பாடிப்பற.

7. மண்ணுலகில் யாஞ்செய்த மாதவத்தை என்னென்பேம்
கண்ணாகிக் கருத்தாகிக் காண்பரிய பேரொளியே
நண்ணுவார் வினைதீர்க்க நம்மைவந் தடுத்தவெம்
கண்மணியின் தன்மையைப் பாடிப்பற
கலம்பகச் சிங்கத்தைப் பாடிப்பற.

8. கன்னற் கனியமுதைக் கலம்பகத் துறைவோனைப்
பன்னற் கரியானைப் பரவிப் பணிவதற்கு
முன்னின்ற மாமுனியை மூர்த்தியைக் கீர்த்திசேர்
என்னாதன் ஆற்றலினைப் பாடிப்பற
என்குரவன் பண்பதனைப் பாடிப்பற.

9. மாற்றிப் பிறக்கவழி வகைவகையாச் சொன்னானை
சீற்றமுற் றென்வினைகள் தீர்க்கவழி கண்டானைப்
போற்ற வினியானைப் புரையொன்று மில்லானை
நீற்றொளிர் மேனியனைப் பாடிப்பற
நீயேநா னென்றவனைப் பாடிப்பற.

10. சீவர்கள் சிவத்தொண்டு செய்துய்யச் 'சிவதொண்டன்'
மேவருஞ் சிறப்பிதழை வெளிவரச் செய்தவனை
ஏவரும் அறியாத விரகசியப் பெட்டகத்தைக்
காவலனைப் பாவலனைப் பாடிப்பற
கலம்பக நாயகனைப் பாடிப்பற.

5-11-61.

## ௪. அடையாளங் கூறல்

அடையாளங் கூறக்கேள் அடையாளம்

1. நிலையான வாழ்வுதரும் ஒருவனைநீ அறியாயோ?
உலகில்வே றொப்பில்லா உயர்யோக நாதன்றான்
அலகிலாக் கருணைவடி வானவெங்க ளப்பன்றான்
அலையற்ற ஆழ்கடல்போல் விளங்குவனோர் அடையாளம்.

2. அரைதனிலே பட்டேனுந் துவரேனு மணிந்தறியான்
நரைவெள்ளை முடியுடையான் நம்பினோர் அகமுடையான்
கரையில்லாக் கருணைபொழி கண்ணணையான் கலம்பகத்தில்
உறைவான்காண் எஞ்ஞான்றும் உயர்குரவன் அடையாளம்.

3. அன்பெல்லாம் அகத்திருக்க அதனையே மறைப்பான்போல்
வன்புமொழி பேசிடுவான மறைமுகமாச் சோதிப்பான்
என்பெல்லா முருக்குமவன் இனியஉப தேசங்காண்
இன்பளிக்குந் திருத்தோற்றம் எழிற்குரவன் அடையாளம்.

4. அறிவானே நடப்பதெல்லாம் அறிந்துகொண் டறியான்போல்
விரிவாகக் கேட்டிடுவான் விறையர மாறுதே
அறிவார்யார் என்றிடுவான் அறிவாக விளங்குமவன்
குறியொன்று மில்லாத குரவன்றன் அடையாளம்.

5. சொன்னத்தைப் போல்வார்த்தை சொல்லுவான் அங்கவற்றின்
பன்னரிய பொருளுணரப் பலகாலஞ் செல்லுமே
மின்னொத்த இடையாளே! மேதினியில் அவன்போல
வன்னப்பேர் அழகுடையார்க் கண்டதில்லை அடையாளம்.

6. கண்டபடி வைதிடுவான் கண்டுபோ லவையிளிக்கும்
பண்டைவினை யெல்லாமே பறந்தோடுங் கண்டாய்நீ
தண்டமிழிற் பாடுவான் தன்னுள்ளே நகைத்திடுவான்
அண்டினர்க்கோ வங்கங்கே அருள்புரிவான் அடையாளம்.

7. நல்லூரிற் செல்லப்பன் நயந்தளித்த நன்மகன்காண்
எல்லவரும் அறியவவன் பெருமையெலா மெடுத்துரைப்பான்
நல்லமகற் பெற்றதந்தை நற்றவமே தவமன்றோ?
புல்லறிவோ ரறியாத புண்ணியன்காண் அடையாளம்.

8. விடமான சம்சார விருட்சத்தில் ஒப்பில்லாத்
திடமான சுவைதரூஉஞ் செழுங்கனியைச் சேர்ந்தேன்யான்
நடமாடுங் கோயிலாம் நாதனவன் திருச்சேவை
அடைவதுவே அப்பழமாம் ஆரமுதிங் கடையாளம்.

9. பழமுதலாப் பண்டங்கள் கொண்டுபோ கைதனிலே
பழமெல்லாம் வருவார்க்குப் பகிர்ந்தளிப்பா னன்பினைப்போல்
பழமறையுங் காணுத பரமனவன் நன்மையினை
எழுதியான் காட்டுதற்கு முடியுமோ அடையாளம்.

10. அடையாளங் கடந்தவனை அருளுருவாப் படிந்தவனைப்
படியெழுத முடியாத பரமனுங் குருபரனை
முடியாத பேரன்பு முகிழ்த்துயர்ந்த நெஞ்சினொடும்
படிமிது படிந்துநீ பணிவாய்காண் அடையாளம்

3-12-61.

அ. செவ்வி கூறல்

1. திருவளர் மார்பன் ருனுந் திசைமுக னுதி யோரும்
உருவறி யாது நிற்க உண்ணினை ந் துருகுவோர்பால்
மருவியே யருள்பா லிக்க வந்தருள் வடிவே யென்கோ
குரவனு யெழுந்த யோகக் கோவினை யின்று யானே.

2. அருவினை வயப்பட் டோராய் ஆணவ விருளின் மூழ்கித்
தெருளுறு நெறியு மின்றித் திகைத்திடும் என்போல் வாருக்
கருணெறி காட்டி யாளும் ஆரமிழ் தென்கோ தெய்வக்
குருமணி யாகும் யோகக் கொழுந்தினை யின்று யானே.

3. விளக்கினை வைத்துக் கொண்டு மின்மினிக் காய்ந்தார் போல
அளக்கலாப் பேரின் பத்தை அறிகிலா தலமந் தேனுக்
குளக்கசி வுண்டு பண்ணும் ஒப்பிலா மணியே யென்கோ
துளக்கமே யில்லா யோகத் தோன்றலை யின்று யானே.

4. காரிருட் குகையிற் சேர்ந்து காணுநல் லொளியி ழந்தே
ஈரமும் அன்பு மின்றி இரும்புநேர் மனத்தி னேற்கு
நேரினில் நெறியைக் காட்டும் நிகரிலா மணியே யென்கோ
கூரிருட் கொளியாம் யோகக் குரிசிலை யின்று யானே

5. நிலையிலாப் பொருளை யென்றும் நிலையெனக் கொண்டு பற்றி
அலைதரும் புன்மை நீங்கா அறிவிலா எம்ம னோர்க்கு
நிலையிது வென்று காட்டும் நின்மல வடிவே யென்கோ
மலைவிலா அறிவாம் யோக மன்னனை யின்று யானே.

6. நலமது வின்றி யுய்யும் ஞானமு மின்றி நல்லோர்க்
குலவலு மின்றி நல்ல குணமது மில்லா தேற்கு
நலமெலாந் தந்தே யாண்ட ஞானநல் வடிவே யென்கோ
நிலமதில் தோன்றும் யோக நீதியை யின்று யானே.

7. நானுரென் றறியா தேற்கு நானேநீ யென்று ரைத்துத்
தேனுகி யமுத மாகித் தித்திக்க ஆண்ட செல்வக்
கோனுகும் எந்தை தன்னைக் கோமள மூர்த்தி யென்கோ
தேனுவாய் வந்த யோகத் தெய்வத்தை யின்று யானே.

8. அத்தனுய் அன்னை யாகும் அரன்கழ லேத்தா தென்றும்
பித்தனுய்ப் பேய னுகிப் பிதற்றிடும் ஒருவ னேனுக்
கெத்தனை யரிய னுனேன் எளியனுய் வந்தா னென்கோ
முத்தினை மணியை யோக மூர்த்தியை யின்று யானே.

9. தாழ்த்திடுஞ் சென்னி யின்றித் தைவரும் உள்ள மின்றி
வாழ்த்திடும் வாயு மின்றி மலைந்திடும் மத்த னேற்கு
வீழ்த்திடுங் குறியி னின்று விரைந்தெடுத் தருள்வா னென்கோ
காழ்த்திடுந் தெய்வ யோகக் கனவரை யதனை யின்றே.

10. உருவமர் அருளே யென்கோ உரைசெய வரியா னென்கோ
திருவமர் செல்வ மென்கோ தித்திக்கும் அமிழ்தே யென்கோ
திருமணி தானே யென்கோ தெய்வமே யென்கோ மேலாம்
ஒருவனுய் நின்ற யோக ஒளியினை யின்று யானே.

3-6-62.

## ௯. திருவிருத்தம்

### கட்டளைக் கலித்துறை

1. சீரா ரிலங்கையிற் சேர்தரு மண்ணலைச் செந்தமிழ்சேர்
ஊரா மியாழ்நகர்க் கோர்பெருங் காவலை யுய்யுநெறி
வாரா தவர்க்கும் வழிகாட்டி யாள்யோக வள்ளலையே
ஓரா வுளங்கசிந் துள்கியெஞ் ஞான்று முரைநெஞ்சமே.

2. இருள்வழி யீர்த்திடுந் துன்பப் படலம் எழில்மறைத்துப்
பொருள்வழி காட்டுமெய்ஞ் ஞானத் திருவிழி போய்மறைந்த
குருடரும் நெஞ்சங் குழையவைத் தாளுங் குருமணியாம்
அருளுரு வாயவெம் மானையெஞ் ஞான்றும் அடைநெஞ்சமே.

3. வாழ்த்த வெனக்கருள் வாரம்வைத் தாண்ட மலர்ப்பதத்தைப்
பாழ்த்தவென் சிந்தை பதியச்செய் தாலன்றிப் பாவியென்யான்
சூழ்த்துநின் றென்றுந் தொழுதுய்வ னோவின்பத் தொல்கடலின்
ஆழ்த்தும் பெருமான் அடியையெஞ் ஞான்றும் அடைநெஞ்சமே.

4. இரும்பினைக் காந்தம் இழுக்கின்ற வாறென்னை யீர்த்தருளித்
திரும்பவே றென்னையும் பார்க்கவொட் டாமல் திருவடியாங்
கரும்பினை யீந்தென்றன் கண்ணிணை யென்றுங் கலுழுகண்ணீர்
அரும்பச்செய் தாண்ட அடிகளின் பாதம் அடைநெஞ்சமே.

5. பித்தரும் பாநின்ற நெஞ்சனை வஞ்சனைப் பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை யேனைக் கடைக்கணித்தான்
முத்தரும் பாரிலுள் ளோருந் தொழுங்கொழும் புத்துறையின்
அத்தனை யோக அடிகளைப் பாதம் அடைநெஞ்சமே.

6. நரைத்த சடையும் நளின மலர்போல் நயனங்களும்
சிரித்த விதழுந் திருமுகச் செவ்வியுஞ் சீரருளும்
விரித்த உரம்பொலி மேனியில் வீசும் விரைநலனும்
திருத்திக ழும்மலர்ப் பாதமுஞ் சிந்தித் திருநெஞ்சமே.

7. வெள்ளிய சீர்ச்சடை வெண்பொன் னெனமிளிர் மேதகவும்
உள்ளுறை பேரொளி யோங்கி வழிவது போன்றொளிருந்
தெள்ளிய தாடியுந் தெய்வத நோக்குந் திருநுதலுங்
கொள்ளைகொள் ஞானக் குறுநகை யுங்கண்டு கொண்ணெஞ்சமே.

8. தொண்டர்கள் சென்றுதந் துன்பக் கதைசொலத் தூயவருள்
கொண்டவை கேட்டுக் கொளுஞ்செவி யுங்குறை தீர்ப்பதற்கு
மண்டிய வாரருள் வல்லிதிற் செய்திடும் மாநலமுங்
கொண்டவெங் கோமளக் கோவின் குரைகழல் கொண்ணெஞ்சமே.

9. ஆவா ! குரவா அடியெமை யாண்டருள் செய்கவெனக்
கூவா வலறுக் குரைகழற் கீழொதுங் கும்மவரைக்
காவா தொழியிற் கலக்குமுன் மேற்பழி காதலிப்போர்
கோவாந் திருத்தகு யோகா ! எனத்தினங் கூறுநெஞ்சே.

10. யாரே யுனக்குற வென்றெனைக் கேட்பிடில் யானதனுக்
காரே யுறவென் றறையவல் லேனைய ! ஆண்டருணீ
மூரிக் கடல்போற் றுயரங்கள் மூடின நீக்குகண்டாய்
வேரித்தண் பூம்பொழில் சூழ்கொழும் புத்துறை மேயவனே.

5-4-62.

## கo. திருத்தாண்டகம்

1. அன்றாலின் நீழலின்கீழ் அமர்ந்தான் போலும்
அரியயனுந் தேடநின்ற அண்ணல் போலும்
பொன்றுநிற் கின்றதொரு பொய்யாம் வாழ்க்கை
புனிதமுறச் செய்தருளும் புண்யன் போலும்
நன்றேசெய் சிவத்தொண்டர் உள்ளத் துள்ளே
நயந்துவீற் றிருந்தருளும் நம்பி போலும்
குன்றேபோல் தவமுடைய கோமான் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றனே.

2. களிம்புதரு செம்பொன்னின் களங்கம் நீக்குங்
கருமானே போற்றன்னைக் காத லிப்போர்
உளம்பொருந்தும் மாசகற்றும் ஒருவன் போலும்
உள்ளத்து ளென்றுமுறை வான் போலும்
களங்கொணர்ந்து பிறர்க்காகக் கருதித் தாங்குங்
கருணைவடி வானவொரு மூர்த்தி போலும்
கொளும்பெரிய வுயிர்க்குயிராங் குரிசில் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றனே.

3. பேரின்ப யாத்திரையின் பெருமை யென்றும்
பெட்புடனே யெவரெவரும் உணர்வ தற்குப்
பேரன்பு யாத்திரையால் வழிபா டாற்றப்
பெரியதிரு வுளங்கொண்டு பணிப்பான் போலும்
ஆருளே யெமைநடத்தும் உண்மை காணர்க்(கு)
ஆருளின் அருமைதனை யறியச் செய்யக்
கூரருளே யுருவான குழகன் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றனே.

4. சம்பந்தர் அப்பர்திரு நாவ லூரரர்
தனிமணிவா சகனுரே யென்னும் நால்வர்
வெம்பந்த மொழிக்கச்செய் விச்சை யெல்லாம்
விரும்பியின்று செய்தருளும் மேலோன் போலும்
எம்பந்த வல்வினைநோய் தீர்ப்பான் போலும்
எழிலாருந் திருவடியை யீவான் போலும்
கும்பிக்கே செலாதெம்மைக் காப்பான் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றனே.

5. பிறப்பினொ டிறப்பறுக்கும் பெம்மான் போலும்
பேசுதற்கும் நினைப்பதற்கும் இனியான் போலும்
மறப்பினொடு நினைப்பெல்லாங் கடந்தான் போலும்
மாதவத்தின் பெருவடிவ மானன் போலும்
உறப்பற்றுக் கொண்டவர்க்கோர் உறவே போலும்
உறாதவர்க்கும் உருகுமருட் செறிவே போலும்
குறித்தென்னை யாளாகக் கொண்டான் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றனே.

6. நிற்பார்கள் நிலையில்லா வுலகில் நிற்க
நீரெம்மைத் தொடர்ந்துய்ம்மின என்பான் போலும்
அற்புதமா மெனவந்தே யாண்டான் போலும்
அழவைத்துந் தொழவைத்தும் அருள்வான் போலும்
சிற்பரமே வடிவான தெய்வம் போலும்
சிறந்தொளிருந் திருமேனி யுடையான் போலும்
குற்றேவல் செயவைத்த கோமான் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றானே.

7. வெண்ணீறும் வெண்சடையும் உடையான் போலும்
மேனிதனில் வெள்ளுடையே அணிவான் போலும்
பண்ணோறு பாடல்மிக வுவப்பான் போலும்
பரமனே போலுமுயர் படிவன் போலும்
கண்ணோறு பேரொளியாய்க் கலந்தான் போலும்
கருநிறமும் பொன்னிறமும் வாய்ந்தான் போலும்
கொண்ணீறு போலுள்ளும் புனிதன் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றானே

8. கற்றவர்க ளுண்ணுமருட் கனியே போலும்
கழலடைந்தார்க் குயர்கதியை யளிப்பான் போலும்
மற்றவர்க ளறியாத மணியே போலும்
மாநிலமே யுய்யவரு வாழ்வு போலும்
அற்றவர்கட் காரமுதா யினிப்பான் போலும்
அல்லலறுத் தடியனையு மாள்வான் போலும்
கொற்றவனே யாகியெமைப் புரப்பான் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றானே

9. இடர்களைய வென்றென்றும் இசைந்தான் போலும்
என்னையுமோர் பொருளாக மதித்தான் போலும்
சுடரொளியாய் விளங்குமொரு சோதி போலும்
சுருதிவடி வானபொருள் சொல்வான் போலும்
வடதிசையுந் தென்றிசையும் புரப்பான் போலும்
மக்கடமைத் திருநெறிக்க ணுய்ப்பான் போலும்
குடதிசையுங் குணதிசையுங் கவர்வான் போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றானே.

10. முழுதுமுண்மை யெனமொழியும் முனிவன் போலும்
மோசமொன்று மில்லையெனச் சொல்வான் போலும்
எழுதரிய வின்பவடி வானன் போலும்
இருட்புலனுங் கரிகளைவெல் ஏறு போலும்
தொழுதெழுவார் வினையறுக்குந் தூயன் போலும்
சோர்வடையும் மனத்துக்கோர் துணிவு போலும்
கொழுகொம்பாய் நின்றுதவுங் கோவே போலும்
கொழும்புத் துறையுறையெங் குரவன் றானே.

# ௧௧. செவிலி கூற்று

பண் — காந்தாரம்

1. கலம்பகநற் பதியில்வரு கருணைவடி வானவனே என்கின் றாளால்
நலம்பலவும் ஒருங்குநிறை நாதனுயர் யோகநாதன் என்கின் றாளால்
குலங்குணமும் பாராதாட் கொண்டானே குருமூர்த்தி என்கின் றாளால்
இலங்கைநகர்க் கொருபெருமான் இணையிலியே யாவானைக் கண்டாள் கொல்லோ.

2. ஞாலத்தில் தானிருந்தும் ஞாலத்தைச் சேராதான் என்கின் றாளால்
கோலமிகு நற்றலைவன் கொள்ளைகொண்டா னுள்ளத்தை என்கின் றாளால்
சீலமுதற் பண்புகளுஞ் சேரவைத்தான் சிறியேற்கே என்கின் றாளால்
மூலமல மொழித்தெம்மை யாண்டருள முந்துவானைக் கண்டாள் கொல்லோ.

3. கிஞ்சுகநேர் அஞ்சுகநல் வாய்திறந்து ''கைவிடற்க'' என்கின் றாளால்
தஞ்சமென வந்தவரைக் கைவிடுதல் தக்கதுவோ என்கின் றாளால்
அஞ்சற்க என்றுரைத்தாய் அணிகொழும்புத் துறையானே என்கின் றாளால்
செஞ்சொல்நற் சிந்தனையாற் சிந்தைகுடி கொண்டவனைக் கண்டாள் கொல்லோ.

4. நனவினிலே யெந்நாளும் நானினைக்க நல்கினனே என்கின் றாளால்
கனவினிலும் நான்மறவாக் காதலினைத் தந்தானே என்கின் றாளால்
தினமினிய கற்பகமே தேனுவே யானவனே என்கின் றாளால்
உனவினிய குருமணியாம் யோகேசன் உயர்வடிவைக் கண்டாள் கொல்லோ.

5. முருகனுக்கும் எனக்குமொரு வயசென்பாள் மூர்த்தியவ னென்கின் றாளால்
முருகுகொப் பளிக்குமந்த முருகனே போல்பவன்காண் என்கின் றாளால்
உருகாத என்மனத்தை உருகவைத்த உத்தமன்காண் என்கின் றாளால்
அருகணைந்தோ ரனைவரையும் ஆதரிக்கும் ஆசானைக் கண்டாள் கொல்லோ.

6. எட்டுதற்குஞ் சுட்டுதற்கும் இயலாத எம்மான்காண் என்கின் றாளால்
பட்டியினிற் சேர்த்துன்னைப் பகர்குறிகட் டேனென்றான் என்கின் றாளால்
விட்டுவிட மாட்டானே மேதகவோ னென்னையுமே என்கின் றாளால்
எட்டுணையும் பிரியாத என்யோக நாதனையே கண்டாள் கொல்லோ.

7. பிறர்நோயைத் தன்னோயாப் பெரிதெடுத்துக் கொள்வானே என்கின் றாளால்
அறவனைத்தும் விடுத்தவொரு துறவுவடி வானவனே என்கின் றாளால்
துறவாலே என்னையுமே துறந்திடுமோ ஐயையோ என்கின் றாளால்
நறவொழுகும் மலரடியான் நம்யோக நாதனையே கண்டாள் கொல்லோ.

8. ஒருகாலைக் கோர்காலாப் பித்தேற்றும் ஒருவன்காண் என்கின் றாளால்
குருகாம்நல் வைரமுமாங் கோனுமெங் குருமூர்த்தி என்கின் றாளால்
ஒருகாலும் பிறரையினி மதியாத உளம்பெற்றேன் என்கின் றாளால்
வருவார்க்கு மயலகற்றும் யோகேச வள்ளலையே கண்டாள் கொல்லோ.

9 புறத்தேயோர் வடிவெடுத்தென் னகத்தேயெவ் வாறுபுக்கா னென்கின்
ருளால்
புறத்துள்ளா னகத்தினிலே புகுந்தகுவ டறியேனே என்கின் ருளால்
புறத்துள்ளார் காணமற் புகுந்தவன்செய் புதுமையென்னே என்கின் ருளால்
புறத்துமகத் தும்விரவிப் பொலிந்தருள்சிற் சுகோதயத்தைக் கண்டாள்
கொல்லோ.

10. ஆடுகின்ரு ளானந்த மேனிட்டா லண்ணலே என்கின் ருளால்
பாடுகின்ருள் பரவுகின்ருள் பரமயோ கேசனே என்கின் ருளால்
தேடுகின்ருர் தேடுவானைச் சித்தத்திற் கொண்டேனே என்கின் ருளால்
கூடுகின்ற அன்பினெடு குலவுவோர் குருமணியைக் கண்டாள் கொல்லோ.

5-8-62.

## கஉ. கோத்தும்பி

1. விண்ணவர்க ளாரேனும் மேதினியில் வந்துதாம்
எண்ணுந் திருவோ டிணையிலாப் பேரின்பும்
நண்ணநோற் பாரென்ருல் நான்சொலக்கே ளியின்னே
அண்ண லடிக்கமலம் அணைந்தூதாய் கோத்தும்பீ !

2 பாரிலுள்ள காவெல்லாம் பறந்து பறந்தலைந்து
வேரித் திறந்தேர்ந்து வினேநீ பெற்றதென்னே !
காரிற் பொலிசோலைக் கலம்பக வாணன்றன்
நேரில் அடிக்கமலம் நின்றூதாய் கோத்தும்பீ !

3. வாடும் மலரெல்லாம் வையகத்தே நீயலைந்து
தேடித் திரிந்தூதிச் சிற்றின்பம் பெற்றிளைத்தாய்
கூடி யிணங்கியுயர் கொழும்புத் துறைக்கோவின்
வீடளிக்கும் பாதமலர் விழைந்தூதாய் கோத்தும்பீ !

4. பற்றற்ருர் பற்றும் பரமானந் தத்தேனை
முற்ற விளையமுதை முகிழ்த்த கருணையினைக்
கற்றவர்க ளேத்துங் கலம்பக வாணனையே
பற்றி விடாதென்றும் பணிந்தூதாய் கோத்தும்பீ !

5. நூல்க ளுணர்ந்தவனை நூன்முடிபும் ஆனவனைச்
சால வுணர்ந்தார்க்குத் தஞ்சமாய் நின்றவனைக்
கோல அழகனைக் கொழும்புத் துறையானைச்
சீலம் மிகப்பெருகச் சென்றூதாய் கோத்தும்பீ !

6. கிட்டற் கரியானைக் கிட்டினுர்க் காரமுதை
மட்டற்ற பேரருளை மறைத்தெம்மை வைவானைக்
கொட்டு முழவதிருங் கொழும்புத் துறையானை
மட்டுள் மகிழ்ந்தாடித் திளைத்தூதாய் கோத்தும்பீ !

7. அயலிற்பூப் பார்த்துநீ யங்கலாய்த் துத்திரிந்தாய்
மயனிங்கத் தேன்பிலிற்றும் மாமலரைப் பெறவிழைமின்
கொயவொண்ணுத் தண்மலராங் கொழும்புத் துறையான்ருட்
செயகமல மலரிணையே சேர்ந்தூதாய் கோத்தும்பீ !

8. பற்றையே விட்டொழித்தோம் பாரிலினிக் குறைவில்லை
முற்றத் துறந்தோம் முனிவரர்நா மென்பாரும்
குற்றேவல் செயவிழையுங் கொழும்புத் துறையான்றன்
சற்பாத தாமரைகள் தாழ்ந்தூதாய் கோத்தும்பீ !

9. துன்பப் பெருங்காற்றுச் சூழ்ந்துன்னைத் தாக்குமேல்
வன்புச் சிறகோய்ந்து மறுகிநீ வாடுவையேல்
கொன்பற்றுந் துன்பகலக் கொழும்புத் துறைக்கோனின்
இன்புற்ற பாதமலர் இயைந்தூதாய் கோத்தும்பீ !

10. ஆராத வின்பம் அடையநீ யாசையுறின்
சீரார் கலம்பகத்தான் செய்யமலர் சேர்ந்தூதாய்
ஆரோநீ யென்றவனும் அதட்டுவான் அஞ்சற்க
பேரன்போ டடிமலரைப் பெற்றூதாய் கோத்தும்பீ !

1-7-62.

## கக. ஓயாது வருதல்

ஓயாதென் உள்ளத்தில் வருவான் — ஐயன்
உள்ளேநின் றெங்கேயோ ஓடி ஒளிப்பான் (ஓயா)

1. கூடாத கூட்டங்கள் வேண்டா — வெறுங்
கோலா கலங்களும் உனக்கிங்கு வேண்டா
நாடுவா யுன்றனுக் குள்ளே — அங்கு
நானிருக் கும்மிடம் நன்கறி என்பான். (ஓயா)

2. பட்டப் பகலிலே வருவான் — சுவாமி
பாதங்கள் நோவாவோ என்று பதைப்பேன்
கிட்டப்போ லவன் சிரிப்பான் — அந்தச்
சிரிப்பிலே பற்பல பொருளெலாம் விரிப்பான். (ஓயா)

3. சிதம்பரம் சீர்காழி சென்ருய் — பல
திருத்தலத் தீர்த்தங்கள் ஆடித் திளைத்தாய்
பதந்தரு மிறைவனுன் னுள்ளே — உறையும்
பக்குவம் பார்த்தாயோ பாராய்நீ என்பான். (ஓயா)

4. போவதும் வருவதும் இல்லை — உன்னைப்
புறம்விட்டு நானென்றும் பிரிவதும் இல்லை
ஆவதும் அழிவதும் இல்லை — நீநான்
ஆவதை யறிவாயுன் அறிவிஞ லென்ருன். (ஓயா)

5. கொழும்புத் துறைச்சுவாமி என்பார் — அவன்
கூடினுர் பவந்தீர்க்குங் குரவனே என்பார்
விழுமிய மாமுனி என்பார் — அவன்
மேதகு செல்லப்ப முனிமகன் என்பார். (ஓயா)

6. நற்றவச் செல்வனும் என்பார் — அவன்
நாடினு ரைசசெல்வ ராக்குவா னென்பார்
முற்றத் துறந்தஅம் முனிவன் — நிதம்
முகிழ்த்ததற் கருணையால் முழுதுநா மும்ந்தோம். (ஓயா)

7. நாம்பெற்ற செல்வமே செல்வம் — யோக
நாதனுர் எழுந்தருள் உள்ளமே உள்ளம்
காமுற்ற நகைமுகங் கண்டு — பின்னர்க்
காண்பதற் கென்னவிவ் வவனியி லுண்டு. (ஓயா)

4-2-62.

## கச. உள்ளத்திருத்தல்

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: சாப்பு

1. உள்ளத் தாமரைக் கோயி லிருப்பான்
உயர்கொ ழும்புத் துறையி லிருப்பான்
கள்ள மற்ற கருத்துட னேதனைக்
காத லிப்பவர் இல்லத் திருப்பான்
உள்ளப் பதைப்புகள் எல்லா மகற்றி
உய்யும் நெறியினை ஓயாது காட்டி
மெள்ள அன்பரை மேம்படச் செய்வான்
வீண்சொ லொன்றும் விளம்பிட வையான். (உள்ள)

2. செயலில் என்றுஞ் செய்து காட்டுவான்
சேர்ந்த வர்பவம் எல்லாம் ஓட்டுவான்
அயலு னக்குவே றில்லை யென்னுவான்
அவனி யிற்குறை யில்லை யென்னுவான்
மயலெ லாந்தவிர்த் தாண்டு கொள்ளுவான்
மாற்றிப் பார்த்திட வழியுஞ் சொல்லுவான்
முயலும் நற்றவ முனிவ னென்னுவார்
மூர்த்தி யாந்தொழும் மூர்த்தி யல்லவோ? (உள்ள)

3. கையி லேயொரு குடையுங் கொள்ளுவான்
கால்ந டையிலே நடந்து செல்லுவான்
பைய வேயவன் பின்னே செல்லுவேன்
பார்த்துப் பார்த்தவன் பகரும் வார்த்தையில்
மையல் கொள்ளாதார் மனித ராவரோ?
மையல் தீர்க்குமம் மைய லல்லவோ?
தெய்வ மாகுமவ் வியோக நாதனைச்
சித்தத் திற்பதி சிறப்பை யெய்தினேன். (உள்ள)

4. நாளு மன்னவன் ஞானச் சீரடி
        நன்கு தைவரும் உள்ளம் பெற்றனன்
தாளு மன்னது தாங்கப் பெற்றதால்
        தாக்கும் நோயொடு துன்ப முமெட்டுக்
கோளு மென்செயும்? கூற்று மென்செயும்?
        குவல யந்தனிற் குறைக ளில்லையே
ஆளும் நாயகன் அருளும் பெற்றினி
        அன்பு செய்தியாம் இன்பொ டுய்குவம். (உள்ள)

5-2-62.

## ௧௫. அற்புதப் பத்து

1. பொன்னடியின் பொற்பறியாப் புத்திகெட்ட மாந்தரோடும்
என்னதொடர் பென்னகதை யென்றிருக்கச் செய்தவனும்
பன்னரிய கருணைவடி வானவெங்கள் பரமகுரு
அன்னையினு மினியானெற் கருளியவா றற்புதமே.

2. வினைவலியால் மதிமயங்கி வெறுவிலியாய்க் கிடந்தேற்குத்
தனைநிகர்வா ரில்லாத சங்கரனே யிவ்வுலகிற்
கனைகடல்சூழ் கலம்பகத்திற் காருண்ய மூர்த்தியாய்
இனியவெலா முவந்தளிக்க வெய்தியவா றற்புதமே.

3. பொய்யான வாழ்விதனைப் பொருளென்று மிகநம்பி
மெய்ஞ்ஞான நாட்டமுறு வீணனாய்க் கிடந்தேற்கிங்
கையமிலா வுணர்வளிக்க வவனிமிசைக் குருபரனாய்
ஐயனெனை யாட்கொண்டே யருளியவா றற்புதமே.

4. அழகியோம் இளையோம்யாம் என்றெழூஉம் ஆதரவால்
ஒழுகிநிதம் உயிர்தானும் உடல்விட்டுப் போகுமுனம்
கொழுநிழலார் பொழிற்கொழும்புத் துறையதனிற் கோயில்கொண்டோன்
கழல்காட்டிக் கடையேற்கிங் கருளியவா றற்புதமே.

5. பெண்ணொடுமண் பொன்னிவற்றைப் பெரிதென்று கருதுமெற்கு
மண்ணளந்தோன் றன்னோடு விண்ணளந்தோன் காணாத
பண்ணவனே கோகிலங்கள் பண்மிழற்றுங் கலம்பகத்தில்
அண்ணலெனத் தோன்றியிவண் அருளியவா றற்புதமே.

6. ஒருகுறையு மிலையிதனை யுணருதியென் றருள்செய்து
கருமமே கடைப்பிடிக்கக் கற்பித்த காருண்யன்
பெருமுனிவர் தாம்மதிக்கும் பெரியவர்க்குட் பெரியவனெங்
குருபரனும் யோகமுனி கொண்டவரு ளற்புதமே.

7. ஒழுக்கமே யுயர்ஞானம் ஒழுக்கமே யுயர்செல்வம்
ஒழுக்கமே யொண்புகழாம ஒழுக்கமே பேரின்பம்
ஒழுக்கமே யெல்லாமென் றுணரச்செய் குருபரனும்
அழுக்ககற்றும் அந்தணனெற் கருளியவா றற்புதமே.

8. நீருகி நீறளிக்கும் நெருப்பாகி நின்றபரன்
பேருகிப் பேருவகை பெருகவருங் கண்ணீரே
ஆருக வடியேன்செய் அநாசாரம் பொறுத்தருளிச்
சீருது சிறியேற்கிங் கருளியவா றற்புதமே.

9. மேவியிடர்க் கடலினிடை விழ்ந்திளைக்கும் எளியேனைக்
கூவியழைத் திடர்நீக்கிக் கொண்டருளுங் குருபரனுங்
கோவிலடி யிலந்தைவளர் குளம்நிலவுங் கலம்பகத்தில்
ஆவியினு மினியவனும் அருளியவா றற்புதமே.

10. தோயாதிங் கிருப்பவனுந் தொல்லுலகி லுள்ளோர்க்கு
மாயாத பேரின்பம் வழங்கவடி வெடுத்தோனுஞ்
சாயாத பெருவளஞ்சேர் தண்டுறையாங் கலம்பகத்தில்
ஆயாரேன் அடியேற்கிங கருளியவா றற்புதமே.

3-2-63.

## ௬௬. கீர்த்தனைகள்

### 1. செல்லப்ப சுவாமிகள்

இராகம்: ஆரபி — தாளம்: ஆதி

பல்லவி

வீரர்க்குத் தான்தெரியும் மிகவருமை
விச்சைகள் செய்திட்ட செல்லப்பர் பெருமை (வீரர்க்கு)

அநுபல்லவி

தேரடியில் நின்று கர்ச்சிக்கும் சிங்கம்
ஜஹறன்மோ கனஞான சிற்பரத் தங்கம் (வீரர்க்கு)

சரணங்கள்

1. நாவலர் பாவலர் தாமுமே அறியார்
தேவர்கள் வாழ்வது தன்னையுங் குறியார்
பூவுளோர் தங்களுக் கருளையே புரிவார்
மேவலர் எண்ணினர் விசரனென்; றறியார். (வீரர்க்கு)

2. எட்டுக் கல்வியை நம்பினோர் அறியார்
விட்டுக் கேவழி காட்டிடும் பெரியார்
கேட்டுப் பார்த்தேதும் அறிவதற் கில்லை
பாட்டுப் பாடிநீ பணிந்திடு வல்லே. (வீரர்க்கு)

3. ஏழை நடராஜற் கருளிய பரமன்
கோழை படாயோகக் குருமணி குரவன்
வாழை பலாமலி நல்லையிற் பெரியன்
பாழில் இறைக்காமற் பணிபல புரிமின். (வீரர்க்கு)

22-4-57.

## II. கலம்பகவாசகன்

இராகம்: எதுகுலகாம்போதி — மிஸ்ரதாளம்

### பல்லவி

கொழும்புத் துறைவாழும் குருபரனே — என்றன்
குறையைத் தீர்த்தாள் பரனே (கொழும்பு)

### அநுபல்லவி

விழும்பிற விக்கடல் தனிலிருந் தெடுப்போனே !
விண்ணளின் முகில்கள்சேர் தண்ணறுஞ் சோலைசூழ் (கொழும்பு)

### சரணங்கள்

1. எங்கேயான் பார்க்கினும் அங்கேநீ நிற்கிறாய்
ஏதுநான் செய்யினும் ஓதும் அதுவேயாறாய்
சிங்கவே றனையோனே! செப்புவ தறியேனே
சீரார் கலம்பக வாசனே! யோகேசா! (கொழும்பு)

2. பதைப்பற் றிருவென்றாய் பதைப்பும் அறவில்லை
பாசப் பிணிப்புக்களோ பலப்பல வேதொல்லை
வதைக்க உலகவாசை வாளாகாட் டுவேன்பல்லை
வளமார் கலம்பக வாசனே! யோகேசா! (கொழும்பு)

3. முப்பகை தம்மோடே எப்பகை யும்வென்ற
ஒப்பிலாக் குருபர! உரையினுக் கடங்காதோய்!
இப்பகை யெனைவாட்ட எளியேன் றடங்கவோ!
எழிலார் கலம்பக வாசனே! யோகேசா! (கொழும்பு)

4. முற்றறி முனிவனே! முகிழ்த்துளங் கனிவோனே!
முழுவது முண்மையென் றநுதினம் மொழிவோனே!
கற்றறி வில்லாத கசடன் நடராஜன்
கதறினேன் கலம்பக வாசனே! யோகேசா! (கொழும்பு)

11-4-57.

## III. தெண்டனிடல்

பல்லவி

தெண்டனிட் டேனென்று சொல்லடா
சுவாமிக்கு நான் (தெண்டன்)

அநுபல்லவி

மண்டலம் புகழும்நல்லை வளநகர்ச் செல்வர்நெறி
எண்டிசை யும்பரப்பக் கொண்டதிரு வுருவார்க்கு (தெண்டன்)

சரணங்கள்

1. பள்ளிப் பருவத்திலே அள்ளி அருள்சொரிந்து
மெள்ளஎன் உள்ளமதைக் கொள்ளைகொள் ஆசானுக்கு
கள்ளுலாம் மலர்ச்சோலைக் கலம்பக வாசருக்கு
கள்ளஎன் மனத்துள்ளும் எள்ளா துறைபவர்க்கு. (தெண்டன்)

2. அகத்தே பெருகும்அருள் புறத்துஞ் சொரிவதுபோல்
ஆரையுங் கவர்வெள்ளைத் தூயநரை முடியார்க்கு
மிகுத்த அழகொழுகும் மேனியில்வெண் பொடியார்க்கு
மேலைவினை தீர்க்கவல்ல கோலமலர் அடியார்க்கு (தெண்டன்)

3. எப்போதோ முடிந்ததெனச் செப்பித் திரிபவர்க்கு
யாரறிவா ரென்றுமெல்லக் கூறி மறைப்பவர்க்கு
தப்பான பொல்லாப்பு ஒன்றுமில்லை யென்பார்க்குச்
சந்ததம் முழுவதும் உண்மையென்று சாதிப்போர்க்கு. (தெண்டன்)

4. உலகம் முழுதுமொரு குடும்பமாக் காட்டுவோர்க்கு
உலகொரு நாடகம் ஆகவே நாட்டுவோர்க்கு
அலகில் கருணைவெள்ளம் அன்பரிடத் தோட்டுவோர்க்கு
அன்னை பிதாக்குரு வாகுஞ் சிரேட்டருக்கு. (தெண்டன்)

5. வேண்டுவ தறிவோருக்கு வேண்டத் தருபவர்க்கு
வினையேனும் உய்யநெறி வேறாய் வகுத்தவர்க்கு
ஆண்டஎன் குருபரர்க்கு அரியே றனையவர்க்கு
அடியேன் நடராஜன் அன்புகொண்டு என்புருகி. (தெண்டன்)

1-4-57.

29512

திருச்சிற்றம்பலம்.

சிவயோகசுவாமிகள் புகழ்ப்பாமாலை முற்றுப்பெற்றது.